மன்றம்

ஆசிரியர்:
இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

15 – 10 – 56

★

அணு 4

★



மீசை பலியாயிற்று!

அறிஞர் அண்ணா அவர்கள் மிகச் சிலரோடுதான் நெருங்கிப்பழகுவார்கள். குறிப்பிட்ட அந்த ஒரு சிலருடைய கூட்டுறவைத்தான் அவர்கள் எப்பொழுதும் விரும்புவார்கள். அந்த ஒரு சிலரோடு பொழுதுபோக்குவதிலேதான் அவர்களுக்கு நிரம்ப விருப்பம். இதனால் அவர்கள் மற்றவர்களையெல்லாம் வெறுப்பார்களோ என்று யாரும் பொருள் கொண்டுவிடக்கூடாது. அண்ணா அவர்கள் எல்லோரோடும் எப்பொழுதும் அன்பாகவும், இனிமையாகவும், கனிவாகவுந்தான் உரையாடுவார்கள். ஆனால் மிகச் சிலர்தான் 'நெருங்கியநண்பர்கள் பட்டியலில் வருவார்கள்.

அண்ணா அவர்கள் தம் நெருங்கியநண்பர்களோடு குழந்தைபோல் பழகுவார்கள். எப்பொழுதும் சிரித்து மகிழ்ந்துகொண்டே பேசுவார்கள். அவர்கள் உரையாடிக் கொண்டிருக்கும் போது நகைச்சுவை பெருக உடனிருக்கும் தம் நெருங்கிய நண்பர்களில் யாரையேனும் கேலியும் கிண்டலும் செய்துகொண்டே இருப்பார்கள். முக்கியமான பிரச்சினைகள் குறித்து நெருங்கிய நண்பர்களுடன் விவாதித்துக் கொண்டிருக்கும்போதுகூட நகைச்சுவைக் குறிப்புகள் அண்ணா அவர்களிடமிருந்து வெளிப்பட்டுக் கொண்டேயிருக்கும்.

அண்ணா அவர்களின் நண்பர்கள் குழாத்துள் கேலிக்கும் கிண்டலுக்கும் உரிய ஒருவராகத் தோழர் என். வி. நடராசன் அவர்கள் அடிக்கடி அகப்பட்டுக்கொள்வார். அண்ணாவின் கேலியும் கிண்டலும் அவற்றிற்கு ஆளாகுபவர்களைச் சிரிக்கவும் மகிழவும் செய்யுமேயல்லாது, யாருடைய உள்ளத்தையும் புண்படுத்துவனவாகவோ, வருத்தத்தில் ஆழ்த்துவனவாகவோ அமையா. அப்படிக் கேலியும் கிண்டலும் வந்து தாக்கும் போது, தோழர் என். வி. நடராசன் அவர்கள் மற்றவர்களோடு சேர்ந்து சிரித்து மகிழ்வார்களே யொழிய, அதற்காக ஒருபோதும் மனவருத்தம் கொள்ளமாட்டார்.

மும்முனைப் போராட்டக்காலத்தில், அண்ணா, என். வி. நடராசன், சம்பத், மதியழகன், நெடுஞ்செழியன் ஆகியோர் சென்னைச் சிறையில் இருக்கும்போது, தோழர் என். வி. நடராசன் அவர்கள் தாம் பொழுதுபோக்குக்குரிய 'பொருளாக' அகப்பட்டுக் கொள்வார். ஒரு நாள் காலை தோழர் என். வி. நடராசன் அவர்கள் முடிதிருத்திக் கொண்டு வந்தார். அவர் தம் மீசையைச் சரிப்படுத்திக் கொள்ளக் கத்தரிக்கோலின் மூலம் முயன்றார். அப்பொழுது அண்ணா அவர்கள் தோழர் நடராசன் அவர்களது மீசையைத் தாம் சரிப்படுத்தித் தருவதாகச் சொல்லிக், கத்தரிக்கோலை வாங்கி மீசையைக் கத்தரிக்கத் தொடங்கினர். அண்ணா அவர்கள், தமக்கு உதவிசெய்ய முன்வந்துள்ளதாகவே தோழர் நடராசன் அவர்கள் கருதிக்கொண்டார்கள். ஆனால் அண்ணா அவர்கள் அரை மீசையை அப்படியே கத்தரித்து எடுத்துவிட்டார்கள். தோழர் நடராசன் அவர்களுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை; அப்படியே திகைத்துப் போய் நின்றுவிட்டார். அண்ணாவும், மற்றவர்களும் விழுந்து விழுந்து சிரிக்கத் தலைப்பட்டனர். தோழர் நடராசன் சிறிதுநேரம் முகக்கண்ணாடியைப் பார்த்துக் கொண்டு அப்படியே நின்று கொண்டிருந்தார். அரை மீசை போய்விட்டதே என்ற வருத்தம் இருந்தாலும். அவரும் மற்றவர்களோடு சேர்ந்து சிரிக்கவே செய்தார். பிறகு மீதியிருந்த அரை மீசையையும் தாமே எடுத்துவிட்டார்.

அன்று மாலை எதிர்பாராத விதமாகத் தோழர் என். வி. நடராசன் அவர்களது வீட்டார் அவரைப் பார்க்க வந்தனர். அவரைக் கண்டதும் அவரது வீட்டார் அனைவரும் குழந்தைகள் உள்பட விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கினர். தமக்கு மீசை போய்விட்டதை அவரது மகன் சுட்டிக் காட்டியதற்குப் பிறகுதான், அவருக்கு நிலைமை புரிந்து; அவரும் சேர்ந்து சிரித்தார்.

அறிஞர் அண்ணாவின் சிறைப்பொழுது போக்குக்குத் தோழர் என். வி. நடராசனின் மீசை பலியாயிற்று!

மன்றம்

மலர் 5 ★ (15—10—56) ★ இதழ் 12

எல்லைப் போராட்டம்

தமிழகத்தோடு சேர்க்கப்பட வேண்டிய ஆனால் இப்பொழுது ஆந்திரத்தோடு பிணைக்கப்பட்டிருக்கும் சித்தூர், திருத்தணி, புத்தூர், நகரி போன்ற தமிழ்ப்பகுதிகள் தமிழகத்தோடு இணைக்கப்படவேண்டும் என்ற கருத்துத் தமிழகத்திலுள்ள தமிழார்வங்கொண்ட கட்சிகளால், குறிப்பாகத் திராவிட முன்னேற்றக் கழகத்தால் வற்புறுத்தப்பட்டு வந்துள்ளது.

தெற்கு எல்லைப்பகுதியில் கேரளத்தோடு இணைக்கப்படவிருக்கும் தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றங்கரை, கொச்சிச்சித்தூர், பாலக்காடு, செங்கோட்டை ஆகிய தாலுக்காக்களிலுள்ள தமிழ்ப்பகுதிகள் தமிழகத்தோடு இணைக்கப்படவேண்டும் என்பதைச் சர்வகட்சிக் கூட்டணி கடையடைப்பு, பொதுவேலை நிறுத்தம்போன்ற நடவடிக்கைகள் மூலம் வற்புறுத்தி வந்தது. அந்தச் சர்வகட்சிக் கூட்டணியே வடக்கு எல்லைப் பகுதிகள் மீட்கப்பட வேண்டிய இன்றியமையாமையை வலியுறுத்தித் தீர்மானம் போட்டது. தமிழகத்திலுள்ள திராவிடமுன்னேற்றக்கழகம், தமிழரசுக்கழகம், நீதிக்கட்சி, சோசியலிசுட்டுக்கட்சி, கம்யூனிசுட்டுக்கட்சி, தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம், பிரசா சோசியலிசுட்டுக்கட்சி போன்ற பல கட்சிகளும் தனித்தனியாகவும் கூட்டணியாக நின்றும் எழுப்பிய உரிமைக்குரல்கள், இந்தியப் பேரரசின் செவியிலும், சென்னை மாநில அரசின் செவியிலும் செவிடன்காதில் ஊதிய சங்கு போல் ஆய்விட்டன. ஆளும் கட்சியினர் ஆதிக்க மனப் பான்மையோடும், ஆணவப் பேச்சுடனும் மேற் சுட்டிக்காட்டப்பட்ட கடமையை ஆற்ற மறுத்து வருகின்றனர்.

இந்தியப் பேரரசினர்க்கும், சென்னை மாநில அரசினர்க்கும் தமிழர்களின் உரிமை வேட்கையை மீண்டும் உணர்த்தும் வகையில், தமிழரசுக் கழகத்தார் இவ் அக்டோபர் 15ஆம் நாள் அறப்போராட்டங்களைத் துவக்கத் திட்டமிட்டுள்ளனர். புகைவண்டியைச் சங்கிலியைப் பிடித்து இழுத்து நிறுத்துவது, அரசாங்க அலுவலகங்களின் முன் மறியல் நடத்துவது, அமைச்சர்களுக்குக் கறுப்புக்கொடி காட்டுவது, சட்ட மன்றம் கூடும்போது அதன்முன் மறியல் நடத்துவது, தடைகள் விதித்தால் மீறுவது போன்ற அறப்போராட்டங்கள் நடத்தப்பட இருக்கின்றன. இந்த அறப்போராட்டங்கள் தமிழர்களின் உரிமைவேட்கைக் குரலை மீண்டும் ஆளவந்தார்க்கு நினைவு படுத்துவனவாகும். தமிழரசுக் கழகத்தாரின் இந்த முயற்சியை நாம் போற்றிப் பாராட்டுகின்றோம்.

தேர்தல் தந்திரம் என்று சொல்லி ஆட்சியாளர்கள் புறக்கணித்துவிடக்கூடும் என்று கருதித்தான் திராவிட முன்னேற்றக்கழகம் இந்தப்போராட்டத்தில் நேரிடையாக ஈடுபடாமல், ஆதரவாக நிற்க விரும்பியுள்ளது. தமிழரசுக்கழகத் தலைவரும், கூட்டுமுன்னணியின் கன்வீனரும் ஆன தோழர் ம. பொ. சிவஞானம் அவர்களும் மற்றக்கட்சிகள் தார்மீக ஆதரவு கொடுத்தால் போதும் என்று கூறியுள்ளார். தமிழரசுக் கழகம் தேர்தலில் ஈடுபடப்போவதில்லை என்று அதன் தலைவர் கூறியுள்ளபடியால் இந்த அறப்போர் முயற்சி தேர்தல் தந்திரம் என்று ஆளவந்தார்கள் புறக்கணித்துத் தள்ளிவிட முடியாது. ஆட்சியாளர் பதில் சொல்லியே தீரவேண்டும். போராட்ட வீரர்களின் உள்ளம் வாழ்க! எல்லைப்போராட்டக் கிளர்ச்சி வெற்றிபெறுக!

பண்டிதரின் பதட்டம்

பண்டிதநேரு அண்மையில் ஆமதாபாத் பல்கலைக்கழக மாணவர் கூட்டத்தில் பேசும்போது தம் நிலையை மறந்து, மிகமிக இழிந்த தன்மைக்கு வந்து மாணவர்களை இழிந்த சொற்களால் ஏசியுள்ளார். உரிமைவேட்கையின் காரணமாக உணர்ச்சி வயப்பட்ட மாணவர்கள், அமைதிக்காலத்து ஒழுங்குமுறைக்குச் சிறிது மாறாக நடந்து கொண்டார்கள் என்பதற்காக அவ்வளவுபெரிய பண்டித நேரு மிக இழிந்த நிலைக்கு வந்திருக்க வேண்டியதில்லை.

உரிமை முழக்கம் எழுப்பிய மாணவர்களுக்குக் கனிவானமுறையில் பதில் சொல்லியிருக்கலாம். அல்லது வழக்கம்போல் சினங்கொண்டு கூட்டத்தில் பேசாமல் சென்றிருக்கலாம். ஆனால் பண்டித நேரு மாணவர்களைக், காலிகள், விஷமிகள், வனவிலங்குகள், குரங்குகள், குற்றவாளிகள், பயனற்றவர்கள், பொறுப்பற்றவர்கள், யோக்கியமற்றவர்கள், பாசிச்டுகள் என்ற சொற்களால் இழித்தும், பழித்தும் ஏசியுள்ளார். உண்மைஉரிமை வேட்கையை மறுப்பதால் வரும் தொல்லைகள் என்ன என்பதைப் பண்டித நேருவே அனுபவிக்கத் தொடங்கியுள்ளார். அவரது வாரிசுகளின்கதி எதிர்காலத்தில் என்ன ஆகுமோ?

★ டாக்டர் ஆனந்த குமாரசாமி ★

★

பாஸ்டன் நுண்கலைப் பொருட்காட்சி சாலை யின் இந்தியப்பகுதிக்கு 1917 முதல் 1947-ல் தாம் இருக்கும்வரை தலைவராக இருந்தவர் டாக்டர் ஆனந்த குமாரசாமி. இந்திய மறு மலர்ச்சிக்கு மட்டுமல்ல, உலகத்தில் ஒரு புதிய மறுமலர்ச்சிக்கும் காரணமாய் இருந்தவர் களுள் முதன்மையான இடத்துக்குரியவர் அவர், என்று டாக்டர் எஸ். ராதாகிருட்டினன் கூறியுள்ளார்.

உலகத்தின் எந்தப் பகுதியிலும் ஒரே கட்டிடத்தில் இல்லாத மிகவும் பூரணமான இந்தியக் கலைத் தொகுப்பு பாஸ்டன் பொருட் காட்சிச்சாலையில் உள்ளது. இந்தியக் கலையை மேற்கு நாடுகளுக்கு விரித்துரைக்க விசேடத்தகுதி வாய்ந்த உலகம் அறிந்த அறிஞர் டாக்டர் குமாரசாமியே இந்தச் சிறப் புக்குக் காரணர் ஆவார்.

ஆரம்பத்தில் பூகர்ப்ப சாஸ்திரத்திலும் தாதுப் பொருட் கலையிலும் தனி ஆர்வம் கொண்டிருந்தவர் அவர். அவர் இங்கிலாந் தில் வளர்ந்தவர்; பழக்க வழக்கங்களும் பண்பும் அமையும் தமது வாழ்க்கைப் பருவத் தில் இங்கிலாந்தில் கல்வி பயின்றவர். அவர் தாம் தமது வாழ்க்கைப் பணியாற்றிய நாட்டைத் தமது இருபத்தொன்பதாவது வயதுவரை பார்க்கவில்லை. இத்தகையோ ரான டாக்டர் குமாரசாமி இந்தியக் கலாசாரத் தில் பேரார்வம் கொண்டவரானார்; இந்தியத் தேசீயக் கலையின் மாண்பை அறிந்து கொள்ளும் சரியான நுண்ணுணர்வை அவர் விருத்தி செய்தார்.

அவர் தந்தையார் இந்து; தாயார் பிரிட்டிஷ் பெண்மணி. அவர் கொழும்புக்கு அருகே 1877, ஆகஸ்டு 22-ம் தேதி பிறந்தார். அவருக்கு இரண்டு வயதாகுமுன் அவரு டைய அன்னையார் அவரை வளர்த்தார். அவர் விக்ளிப் கல்லூரியிலும், பின்னர் லண்டன் பல்கலைக் கழகத்தில் அவர் பூகர்ப்ப சாஸ்திரத்திலும் சிறந்த முறையிலும் பி. எஸ். ஸி. பட்டம் பெற்றார். 1903-ல் இலங்கைத் தாதுப்பொருள் சர்வேக்கு டைரக்டராக நிய மனம் பெற்றார். மூன்றாண்டுகளுக்குப் பின் இலங்கை பூகர்ப்ப ஆராய்ச்சித்துறையில் லண்டனில் டி. எஸ்ஸி பட்டம் பெற்றார்.

1906-ம் ஆண்டு இறுதியில் இந்தியாவில் அவர் செய்த முதற் சுற்றுப் பிரயாணத்தில் இந்தியக் கலை, இலக்கியம் ஆகியவற்றில் அதிக ஆர்வம் கொள்வாராயினர். 1910-ல் வட இந்தியாவில் அவர் அதிகமாகப் பிர யாணம் செய்து, இந்திய வர்ணச் சித்திரங் களுக்கும் ஓவியங்களுக்கும் மிகச் சிறந்த எடுத் துக்காட்டாக உள்ளவற்றைத் தொகுத்தார். அது சிறந்த தொகுப்பு.

கல்கத்தாவில் இருந்தபோது அவர் இந்தி யக் கலைபற்றிச் சிறந்த விரிவுரைகள் செய்தார். அவரது பேச்சுத் திறமையும் கல்வியும் இந்தியர் கலைத்துறையில் தங்கள் நாட்டின் பெரிய வெற்றிகளைக் காணுமாறு செய்தன.

காசியில் தமது தொகுப்பை வைக்கத்தகுதி யான ஒரு பொருட்காட்சிசாலை கட்டினால் தாம் பெற்ற மதித்தற்கரிய கலைச் செல்வங்களை நன்கொடையாகக் கொடுப்பதாக அவர் சொன்னார். அவ்வாறு செய்யாததால், பாஸ் டனிலுள்ள நுண்கலைப் பொருட்காட்சி சாலை யில் அவரது தொகுப்புகள் வைக்கப்பட்டன. அதன் தர்மகர்த்தாக்கள் தங்கள் பொருட் காட்சி சாலையில் இந்தியக் கலை ஆராய்ச்சிக்கு ஒரு புதிய பிரிவை அமைத்ததுமல்லாமல், அவரை அப்பகுதியை மேற்பார்ப்போராகவும் நியமித்தார்கள்.

அவரது வாழ்க்கையின் மீதியான முப்ப தாண்டுகளில் பாஸ்டனே அவரது சொந்த ஊராயிற்று. அதுமுதல் பொருட்காட்சி சாலைத் தொகுப்பைப்பற்றி அவர் ஆராய்ச்சி செய்வாராயினர். 1922-ல் அவர் இந்தியக் கலை, மகமதியக் கலை ஆகியவற்றின் மேற் பார்வையாளரானர். 1933-ல் இந்திய, பாரசீக, மகமதியக் கலைகளின் புலவராக ஆக்கப்பட் டார். இந்தியக் கலைபற்றி ஆறு காண்டங்கள் கொண்ட பெரிய ஜாபிதா ஒன்று அவர் தயா ரித்தார். இந்தியக் கலையின் பொருட்காட்சி சாலைத் தொகுப்பில் இல்லாதவற்றைச் சேர்ப் பதற்கு அவர் அயராது உழைத்தார்.

இந்தியக் கலாசாரம்பற்றிய அறிவை நியூ யார்க்கில் பரப்புவதற்கும் இரண்டு நாடுகளுக்கும் இடையே நல்லுறவை வளர்ப்பதற்கும் நியூயார்க்கில் 1924-ல் டாக்டர் குமாரசாமி இந்தியக் கலாசார நிலையத்தை தோற்றுவித்தார். அமெரிக்காவில் கொலம்பியாப் பல்கலைக் கழகத்திலும், டென்வரிலும், மற்றும் இடங்களிலும் இந்தியக் கலை, இந்தோனேஷியாக் கலை, கீழ்த்கோடிக் கலை ஆகியவைபற்றியும் அவர் பல விரிவுரைகள் செய்தார். 1938-ல் வாஷிங்டனிலுள்ள இந்திய சுதந்திர தேசியக் கமிட்டிக்கு அவர் தலைவரானார். அவர் தமது மரணத்துக்கு இரண்டு வருஷங்களுக்கு முன் அமெரிக்கத் தலைநகரில் மேற்படிப்புப்பற்றிய உலகக்கவுன்சிலை நிறுவக் காரணமாயிருந்தார்.

அவர் எழுதிய மிகப்பல நூல்களைப்பற்றி வாஷிங்டனைச் சேர்ந்த டாக்டர் ரிச்சர்டு எட்டிங்காசன் கூறியவற்றை எடுத்துரைப்பது பொருத்தமாகும்.

"டாக்டர் ஆனந்த குமாரசாமி எழுதிய வற்றைவிட மிகுதியான விஷயங்கள்பற்றி நூல்கள் எழுதி வெளியிட்ட அறிஞர்கள் உலகில் மிகச் சிலரே ஆவார்கள். தத்துவம், உண்மை இயல், மதம், சித்திர சிற்பக் கலை, இந்திய இலக்கியம், இந்தியக் கலை, இஸ்லாமியக் கலை, மத்திய காலத்துக்கலை, சங்கீதம், பூகர்ப்ப சாஸ்திரம் ஆகியவற்றைபற்றியும் விசேஷமாக சமூகத்தில் கலைக்குரிய நிலை என்பதுபற்றியும் அவர் ஆராய்ச்சி செய்து எழுதியுள்ளார். அவரது நூல்களின் தொகை அதிகமாக இருப்பதைவிட, அவரது ஆழ்ந்த அறிவும் வாழ்க்கை முழுவதும் அவரிடம் காணப்பட்ட சுய எண்ணங்களும், உலகமெங்கும் ஆன்மார்த்த உணர்வு பெற்ற அறிஞர் மற்றையோரிடம் அவருக்கிருந்த ஆழ்ந்த செல்வாக்கும் ஆகியவை மிகவும் விசேஷமானவை."

அவள் சிரித்தாள்

ஒவ்வொரு நாளும் அவன் கடற்கரை செல்லத் தவறுவதில்லை. அவன் நினைப்புக்கேற்ப அவள் வருகையும் நிகழ்ச்சிகளும் இருந்துகொண்டேயிருந்தது. அதாவது: முன்னாள் அவள் காரில் வந்திருந்தாள். மறுநாளோ ரிக்ஷாவில் வந்தாள். அதற்கும் ஒருபொருள் கொண்டான். "காரில் வந்தால் டிரைவர் அறிவானே என்பதற்காகவே ரிக்ஷாவில் வந்திருக்கிறாள்" எனக் கருதினான். மூன்றுநாள், கால்நடையாக வந்தாள். அன்று "நிச்சயம் தன் காதல் மலர்ந்த" தென மகிழ்ந்தான். நாலாநாள் தோழியர்களுடன் வராமல் தனிமையில் வந்தாள். அன்று காதல் உலகிலேயே சஞ்சரிக்கத் தொடங்கிவிட்டான் அந்தக் கட்டழகன். இவற்றிடையே தனிச்சிறப்பென்னவெனின் அவள் ஒவ்வொரு நாளும் சிரித்தாள். அவள் சிரிப்பின் காரணம் யாதோ - இவன் கருதியது காதல். "யாரோ ஒருவன் தன்னையே சுற்றித் திரிகிறானே யென்றும், இந்த அப்பாவிக்கு ஏனிந்த நப்பாசை என எண்ணியும், இப்படியும் மனித இனம் இருக்கிறதே எனக்கருதியுந்தான் சிரித்தாள். தன்வரையில் காதலை வளர்த்துக்கொண்ட அவன் செயலளவில் முனைந்து விட்டான். அவளைப் பின்தொடர்ந்தே சென்றான். அவள், வீடு வந்ததும் உட்சென்றுவிட்டாள். அவளைப் பார்த்துக்கொண்டே சென்ற அவன் எதிரேவந்த பால்குடக்காரன் மேல் மோத, பாலும் கொட்டிப்போய் பால்குடமும் பழுதாயிற்று. இந்நிலையைக்கண்டும் அவள் சிரித்தாள். பால்காரன் தன் ஆத்திரம் மேலிட ஓங்கி அவனை அறைந்தான். அதைக்கண்டும் அவள் சிரித்தாள். அந்தச்சிரிப்பினால் நாணமடைந்த அவன் பால்காரனை அடிக்க அவன் கீழே விழுந்தான். இறந்துவிட்டான். அவனைப் போலீசார் கொண்டுசென்ற அவ்வேளையிலும் அவள் சிரித்தாள். சில ஆண்டுகளுக்குப்பின் அவன் விடுதலை பெற்றுத் திரும்பினான். அவன் வரும்போது தன்தோழியர்களுடன் சென்றுகொண்டிருந்த அவள் இயல்பாகச் சிரித்துக் கொண்டுபோனாள். இன்னிலையிலும் தன்னை அவள் மறக்கவில்லையே என எண்ணி நடுவே ஓடிவந்தான். வேகமாக வந்த லாரி மோதி மடிந்தான். அப்போதும் அவள் சிரித்தாள்.

அருணன்.

— வைட்டமின் பி-1 கண்டுபிடித்த பெரியார் —

உணவுப் பிழைகளால் நேரும் பிணிகளை ஒழிக்கும் நோக்கத்தோடு வாழ்நாள் முழுவதையும் ஆராய்ச்சியில் ஈடுபடுத்தியுள்ள டாக்டர் ராபர்ட் ஆர். வில்லியம்ஸ் செயற்கை தயாமின் (வைட்டமின் பி. 1) கண்டுபிடித்து அண்மையில் 20 ஆண்டு நிறைவுற்ற நாளன்று அவரை அவருடைய உடன் ஊழியர்கள் சிறப்பித்தார்கள். தயாமினைக்கொண்டு ரொட்டிக்குச் சத்தூட்டத் தொடங்கியதன் பதினைந்தாவது ஆண்டு நிறைவும் அதேதான்.

அவருக்கு அளித்த விருந்தில் வியாபாரிகள், விஞ்ஞானிகள், ரொட்டிசுடும் அமெரிக்க நிலையத்து உறுப்பினர்கள் ஆக 136 பேர்கள் கலந்துகொண்டனர்; அவ்வமயம் பிரபல உலக விஞ்ஞானிகளிடமிருந்து வந்த கடிதங்கள் அடங்கிய புத்தகம் ஒன்று டாக்டர் வில்லியம்ஸுக்கு வழங்கப்பெற்றது; அப்புத்தகம் பின்வருமாறு அர்ப்பணிக்கப்பட்டிருந்தது: "விஞ்ஞானத்தில் அவர் அடைந்த அரும் பெரும் சாதனையைப் பாராட்டியும மனித இனத்துக்கு அவர் ஆற்றிய பணியினுக்கு நன்றி பாராட்டியும் இந்தக் கடிதங்கள் டாக்டர் ஆர். வில்லியம்ஸுக்கு வழங்கப்படுகின்றன."

ஆந்திர தேசத்தில் நெல்லூரில் 1886 பிப்ரவரி 16-ல் அமெரிக்க மிஷனரிப் பெற்றோருக்கு ராபர்ட் ராம்பட்னம் வில்லியம்ஸ் மகனாய்ப் பிறந்தார். பத்தாவது வயதில் அவர் அமெரிக்காவுக்குச் சென்றார். அங்கு அவர் பள்ளிப் படிப்பு முற்றுப் பெற்றது. 1908-ல் அவர் இரசாயனத்தில் எம். எஸ்ஸி. பட்டம் பெற்று, பிலிப்பைனுக்கு வேலைசெய்யச் சென்றார். சிறிது காலம் கற்றுக்கொடுத்தபின், மணிலாவில் உள்ள விஞ்ஞான நிலையத்தில் இரசாயன ஆராய்ச்சி செய்யலானார். தீட்டப்பட்ட அரிசி உணவையே முக்கிய உணவாக உட்கொண்ட மக்களிடையே பலருக்கு பெரிபெரி என்னும் நோய் கண்டிருந்ததை அங்கேதான் அவர் கண்டு அதுபற்றி அக்கறைகொள்ளலானார். அந்நோய் பீடித்திருந்தவர்களுக்கு அரிசித் தவிட்டுச் சத்தைச் சிறிது ஊட்டி, அவர்களைக் குணப்படுத்த முடியும் என்று அவர் கண்டு பிடித்தார். தீட்டாத அரிசியிலுள்ள ஏதோ ஒன்று இவ்வாறு நன்மை செய்கிறது; அது என்ன என்று நீண்ட ஆராய்ச்சி நடந்தது; அதன் பயனாகக் கடைசியில் அவர் வைட்டமின் பி 1-ஐக் கண்டுபிடித்தார்.

1915-ல் டாக்டர் வில்லியம்ஸ் அமெரிக்காவுக்குத் திரும்பிவந்த அந்த வைட்டமினைத் தனியே பிரித்தெடுக்கும் தமது ஆராய்ச்சியைத் தொடர்ந்து மேற்கொண்டார்; முதலில் தாமாகவே முயன்றார்; பின்னர் ராபர்ட் வாட்டர்மன், ஈ. ஆர். புக்மன் ஆகிய விஞ்ஞானிகளின் உதவியால் முயன்றார். 1933-க்குள் வைட்டமின பி-ஐக் கண்டுபிடித்தார்; மூன்று ஆண்டுகள் கழித்து, அதன் அமைப்பைத் தீர்மானித்து, செயற்கை வைட்டமின் பி-1-ஐச் செய்தார்.

தமது ஆராய்ச்சி மனித இனத்துக்கு நலம் பயக்கவேண்டும் என்ற ஆர்வத்தால், டாக்டர் வில்லியம்ஸ் உணவுப் பிழை நோய்களை ஒழிப்பதற்கென வில்லியம்ஸ் - வாட்டர்மன் தர்ம நிதியை ஏற்படுத்தி, தாம் கண்டுபிடித்ததால் கிடைத்த ராயல்டி பணத்தின் பெரும் பகுதியையும் மேற்கொண்டு ஆராய்ச்சி செய்வதற்கே ஒதுக்கிவைத்தார்.

மேலும் பல ஆண்டுகள் ஆராச்சி செய்த பின்னர், இறுதியாக பிலிப்பைனில் 70,000 மக்கள்மீது பரிசோதனை நடத்தலானார். பாட்டான் பரிசோதனை என்று பெயர் பெற்ற அதுவே மனிதர்மீது நடத்தப்பட்ட மிகப் பெரிய பரிசோதனையாகும். இம்மக்களுக்கு இரண்டு வருஷங்களுக்கு சத்தூட்டப்பட்ட அரிசி அவர் வழங்கினார். அவ்விருவருஷ முடிவில் பெரி பெரி நோய் காண்பது 90 சதவிகிதம் குறைந்திருக்கக் கண்டார்.

வைட்டமின் சத்தூட்டிய அரிசி என்னும் தமது திட்டத்தை ஏற்றுக்கொள்ளும்படி அரசாங்கங்களைக் கேட்டுக்கொண்டு எடுத்துச் சொல்வதற்காக அவர் 1950-ல் தூரக் கிழக்கு சமீபக் கிழக்கு நாடுகளுக்கு ஆறுமாதம் சுற்றும் பிரயாணம் செய்தார். அவர் இந்தியா, பர்மா, மலேயா, இந்தோனேஷியா, ஜப்பான், பாகிஸ்தான், தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்தார்.

அண்டசராசரம்

(53)

மச்சவதாரம்

புராணக்காரர்களின் "கணக்குப்படி" நான்கு யுகங்கள் வந்து போகின்றனவாம். நான்கு யுகங்களும் மொத்தம் 43 லட்சம் ஆண்டு களுக்குமேல் பிடிக்குமாம். இவ்வாறு கொண்ட சதுர்யுகக்காலம் ஆயிரம் போனால், பிரமதேவனுக்கு ஒரு பகற்பொழுது போகு மாம். பின் பிரமாவின் இரவு அதேபோல் நீடித்திருந்து, ஆயிரம் சதுர்யுகங்கள் முடிந் ததும், மற்றொரு பகல் வருமாம். சதுர்யுகங் களின் காலக் கணக்கு யாரால் எப்படி எடுக் கப்பட்டது? எத்தகைய ஆதாரங்களின் பேரில் யுகங்களின் காலம் வரையறுக்கப் பட்டது? ஆயிரம் சதுர் யுகங்களில் பிரம தேவன் எங்கிருப்பார்? இந்தக் கேள்விகளை யெல்லாம் நாம் கேட்கவேண்டாம். புராண அமைப்பில் வருவதை அப்படியே வைத்துப் பார்க்கலாம். மேற்சொன்னபடி, ஆயிரம் சதுர் யுகங்கள் முடிந்ததும் பிரமா தனது பகல் பொழுதை முடித்து, தூங்கப்போவா ராம். அப்பொழுது பிரளயம் எனப்படும் பெரும் வெள்ளம் உண்டாகி உலகங்களை அழித்துவிடுமாம். பிரமா ஆயிரம் சதுர் யுகங் கள் உண்டாகி மறையும்வரை உறங்கிக் கொண்டிருப்பார். மீண்டும் சிருட்டித் தொழிலை ஆரம்பித்து ஒரு பகற்பொழுது (ஆயிரம் சதுர் யுகங்கள்) உட்கார்ந்திருப்பார். பிரளயம் உண்டாகும் என்பதற்குள்ள பல கதைகளில் பிரமாவின் தூக்கமும் ஒரு காரண மாகும்.

ஒரு சமயம் பிரமாவிற்கு ஒரு பகல் முடியும் நேரம் வந்தது. தூங்குவதற்குப் பிரமா தன்னைத் தயார் செய்துகொண்டார். பிரளயம் வருமென்பதும், பிரமா தூங்குவாரென்பதும் அறிந்த அயக்கிரிவன் என்ற அசுரன் வேதங் களை எடுத்துக்கொண்டுபோய் கடலுக்குள் ஒளித்துவிட்டானாம்.

பிரளயம் வருவதற்குமுன் பூலோகத்தில் மனுவம்சத்தைச்சேர்ந்த எட்டாவது மனு, வைவச்சுதமனு என்ற அரசன் ஆண்டுகொண் டிருந்தான். ஒருநாள் அரசன் ஆற்றில் நீராடி சபதபங்களைச் செய்துகொண்டிருக்கும்

பொழுது, கையிலெடுத்த சிறு மீன்குஞ்சு துள்ளிக்கொண்டிருந்தது. அரசன் கையி லிருந்த சிறு மீனைக் கீழே போடப்போனான். அதற்குள் சிறு மீன் துள்ளி "அரசனே! என்னைத் தண்ணீரில் மீண்டும் சேர்த்து விடாதே! நீரில் இருக்கும் மற்ற மீன்களால் எனக்குத் துன்பம் வரும். ஆதலால் வேறொரு இடத்தில் சேர்ப்பாயாக." என்று கேட்டுக்கொண்டது. மீன் குஞ்சு மானிடக் குரலில் பேசியதுகேட்டு ஆச்சரியப்பட்ட அரசன், அதைத் தன் கமண்டலத்தில் போட்டுத் தன் அரண்மனைக்குக் கொண்டு போனான். மறுநாள் காலையில் பார்க்கும் பொழுது, கால் விரலளவுக்கும் குறைவா யிருந்த மீன்குஞ்சு பதினாறு விரலளவுக்குமேல் வளர்ந்துவிட்டது. கமண்டலத்தில் இருக்க அதற்கு இடம்போதாததால், அந்த மீனை எடுத்து ஒரு கொப்பரையில் போடும்படி அரசன் கட்டளையிட்டான். கட்டளை நிறை வேற்றப்பட்டது.

மாலையில் பார்க்கும்பொழுது கொப்பரை அகலம் போதாமல் மீன் வளர்ந்து துடித்தது

மிக வேகமாக வளரும். மீனைக்கண்டு ஆச்சரியமடைந்த அரசன், கொப்பரையிலிருந்த மீனை எடுத்துப்போய் அகலமான கிணற்றில் போடச் செய்தான். மீன் வளர்ந்த வேகத்தில் மறுநாள் காலையில் கிணறு போதவில்லை. மறுபடியும் அரசனுடைய ஆட்களை மீனை எடுத்துப்போய் ஒரு ஏரியில் போடச்சொன்னான். மீன் வளர்ந்து ஏரி பூராவிலேயும் அடைத்துவிட்டதாம்! (மீன் அவ்வளவு பெரிதாக வளருமா என்று கேட்டுக்கொள்ளாதீர்கள். புராணக்கதை! இந்தப் புனைந்துரைகளைப்பற்றி ஆராய்வது கூடாது.) ஏரி என்றால் சிறிய ஏரியல்ல; எட்டுமைல் தூரமுள்ள ஏரி. அந்த எட்டுமைல் அளவையும் மீறி மீன் வளர்ந்துவிட்டது. அரசன் திகைப்பும் பயமும் கொண்டவனாய், ஏரியிலிருந்த மீனை இழுத்துப்போய், கங்கையில் விட்டான். கால் விரலளவு இருந்த கயல், கங்கையினுள் போடுமளவு வளர்ந்தது, வளர்ந்து கொண்டே போனது, விரைவில் கங்கையும் போதாது என்ற நிலை ஏற்பட்டது. கங்கையிலிருந்த மீனை கடலுக்குள் விடுமாறு அரசன் உத்தரவிட்டான். கங்கையின் கடலுக்குள் போனது. மீனின் அதிவேக வளர்ச்சி நிற்கவில்லை. விரைவில் கடலையும் அடைத்து விட்டது. அப்பொழுது அதன் நீளம் ஆயிரத்து இருநூறு மைல்களைத் தாண்டியது. வைவச்சுதமனுவுக்கு அச்சமுண்டாயது! சிறு மீன்குஞ்சு ஆயிரம் மைல்களுக்கு மேலுள்ள உருவத்துக்கு வளர்ந்துவிட்டது அவனை நடுங்கச்செய்தது! மீனைவிட்டு அவன் போக ஆரம்பித்தான். அப்பொழுது மீன் சொன்னதாம். "ஓ! வைவச்சுதமனு! விட்டுணு மூர்த்தியாகிய நான் இந்த மீன் அவதாரத்தில் வந்திருக்கிறேன். இன்னும் ஏழு நாட்களில் ஒரு பிரளயம் வரப்போகிறது. மிகப்பெரிய வெள்ளம் வந்து, உலகத்தை அழித்துவிடும். நீ ஒரு படகு செய்து ஜீவராசிகளில் ஒவ்வொரு வகையிலும் ஒவ்வொரு ஜோடியை ஏற்றிவைத்துத் தயாராகயிரு! நான் வந்து உன்னைக் காப்பாற்றுகிறேன்!"

விட்டுணுமூர்த்தி கட்டளையிட்டதுபோல, வைவச்சுதமனு ஒரு படகில் சகலஜீவராசிகளையும் சப்த இருடிகளையும், மருந்து வகைகளையும் ஏற்றி வைத்திருக்க பிரளயம்வந்தது. வெள்ளத்தின் மத்தியில் பெரிய மீன் தோன்றியது. அதன் கொம்பில் படகை இணைத்து விட, வெள்ளத்தை நீக்கி நீரில் அமிழாத மேல்திட்டுக்கு படகை இழுத்துக்கொண்டு மீன் சென்றது. மற்ற ஜீவராசிகள் அழிய, வைவச்சுதமனு சேகரித்த உயிரினங்கள் மட்டும் காப்பாற்றப்பட்டு அடுத்த சிருட்டிக்குப் பயன்பட்டன.

உயிரினங்களும், சப்த இருடிகளும் காப்பாற்றப்பட்ட போதிலும், வேதங்கள் என்னவாயிற்றென்று தெரியவில்லை. வேதங்கள் காணமற்போனதும், எல்லோருக்கும்—சப்த இருடிகள் உட்பட மறந்துபோய் விட்டது. அதனால் வேதநெறி தெரியாமல் புண்ணிய காரியங்கள் நடைபெறவில்லை. மச்சவதாரத்தில் இருந்த விட்டுணு கடலுக்குள் அலைந்து, வேதங்கள் ஒளிக்கப்பட்டிருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து, அதைக் காத்துவந்த அயக்கிரிவனைக் கொன்று வேதங்களை எடுத்து வந்து, பிரமன் தூக்கத்திலிருந்து விழித்ததும் அவரிடம் கொடுத்தார்.

மச்சவதாரம் எடுத்தபொழுது வைவச்சுதமனு பலவித சந்தேகங்களை எழுப்புகிறார். அவைகளுக்குப் பதில் கூறும் வகையில், விட்டுணு சிருட்டிபற்றியும், திரிபுரவதம், தாரகாசுர யுத்தம், பார்வதி திருமணம், கந்தர் தோற்றம் முதலியவைபற்றியும் சொன்னாராம். இவைகளை வியாசர் சூதருக்குச் சொல்ல, சூதர் நைமிசாரண்ய வனத்தில் இருந்த சௌனக முனிவருக்குச் சொல்ல, அது பின்பு மச்சபுராணமாயிற்றாம். மச்சவதாரத்தைப்பற்றிய புராணம் அது, பதினாலாயிரம் சுலோகங்களையுடையது.

மச்சபுராணம் விட்டுணு புராணங்களில் ஒன்று, விட்டுணுவைப்பற்றிப் புகழ்ச்சியாக எழுதப்பட்டிருக்கும். சிவபுராணத்தில், மச்சவதாரத்தைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது, விட்டுணுவைத் தாழ்த்தி, சிவன் பெருமையை உயர்த்தி சொல்லப்பட்டிருக்கும். மிகுந்த வலுவுடன் இருந்த மச்சமூர்த்தி சுயக்கிரிவனைக் கொன்று தானடைந்த வெற்றியால் பெருமிதத்துடன் இருந்தாராம். தேவர்கள் இதனைப்போய் சிவனிடம் சொல்ல, "அவனது கர்வத்தை நாம் அடக்குவோம்!" என்று சிவமூர்த்தி கிளம்பினாராம். ஒரு கையில் வாளும் மற்றொரு கையில் மணியும்கொண்டு சிவமூர்த்தி கடற்கரைக்குச் சென்றார். அங்கு விட்டுணுகொண்ட மச்சஉருவும், மற்றும் பல்வகை மீன்களும் இருந்தன, சிவன் தம் கையிலிருந்த மணியில் ஓசை காட்ட, மீன்கள் மயங்கி கடற்கரைக்கு வந்தன. கடைசியாக மீனாகவிருந்த விட்டுணுவும் வந்தார். சிவன் தம்மிடமிருந்த வாளால் மீனின் கண்ணைப் பெயர்த்தெடுத்துத் தம் மோதிரத்தில் வைத்துக்கொண்டாராம். அத்துடன் சிவபெருமான் மிகப் பெரிய கொக்கு உருவமடைந்து, மச்சமூர்த்தியைத்

தம் வாயில் கௌவிக்கொண்டு சென்றாராம். இதனால் கர்வபங்கமடைந்து விட்டுணுமூர்த்தி மச்சவுருவைவிட்டு, மீண்டும் பழைய உருவத்துடன் சேர்ந்துவிட்டார். இது விட்டுணு பக்தர்களுக்குப் பதில் சொல்ல, சிவபக்தர்கள் புனைந்துவிட்ட கதை.

கூர்மவதாரம்

தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நடைபெற்ற போராட்டங்களில், தேவர்கள் தோற்றுப் போனார்களாம். தோற்றதுமல்லாமல். போரில் தோற்றதால் பலர் இறந்தும் போனார்கள். தேவர்களைப் பாதுகாக்க இந்திரனும் வாயுதேவனும் பிரமாவிடம் செல்ல, அவர் சிவனிடம் அழைத்துப் போக, கடைசியாக எல்லோரும் திருமாலைத் தொழுதார்கள். திருமால் அவர்களுக்கு முன்தோன்றி "தேவர்களே! நீங்கள் போய் அசுரர்களுடன் சமாதானம் செய்து கொள்ளுங்கள்! இப்பொழுது அவர்களுக்கு உயர்ந்த காலமாகும்! காலம் மாறி உங்கள் பக்கம் பலம் வரும்வரை காத்திருக்க வேண்டும். அதற்குள் நீங்கள் அசுரர்களை அழைத்துக்கொண்டு, பாற்கடலைக் கடையுங்கள்! அதிலிருந்து கிடைக்கும் அமிர்தம் சாகாத தன்மையை உங்களுக்குத் தரும்! மந்தார மலையை மத்தாக்கி, வாசுகியெனும் பாம்பைக் கயிறுக்கிக் கடைய ஆரம்பிக்கவும், அமிர்தம் வந்ததும், அசுரர்களுக்கு ஏதும் கிடைக்காமல் உங்களுக்குமட்டும் முழுவதும் வரும் விதத்தில் நான் பார்த்துக் கொள்ளுகிறேன்!" என்று அறிவுறுத்தினார்.

தேவர்கள் அசுரர்களைச் சமாதானப்படுத்தி, அவர்கள் உதவியுடன் பாற்கடலைக் கடைய ஆரம்பித்தார்கள். பாம்பின் வாய்ப் பக்கத்தில் அசுரர்களும், வால்பக்கத்தில் தேவர்களும் நிற்கும்படி விட்டுணு ஏற்பாடு செய்தார். கடலைக் கடைந்துகொண்டிருக்கும் பொழுது மத்தாகிய மலை வரவரத் தாழ்ந்து கொண்டேபோனது, அசுரர்களும் தேவர்களும் பலமாக இழுத்தும், முயன்றும் மலையை நிலைநிறுத்த முடியவில்லை. மலை தாழ்வதைப் பார்த்த விட்டுணு ஒரு ஆமையாக வடிவெடுத்து கடலுக்குள்போய் மலையைத் தாங்கிக்கொண்டாராம். மலை மறுபடியும் நேராக இருப்பதைக்கண்ட தேவரும் அசுரரும் மறுபடியும் கடையத் தலைப்பட்டார்கள்.

மலையசைவது ஆமைக்கு, முதுகில் யாரோ மெதுவாகத் தடவிக்கொடுப்பதுபோலிருந்ததாம். அதனால் ஆமைக்கு லேசாக உறக்கம் வந்ததாம்.

மலையைத் தூக்கி நிறுத்திய ஆமை பத்துக் கோடி மைல் நீளமிருந்ததாம், புராணக்காரரின் அளப்புபடி!

கூர்மாவதாரத்தில் மலையைத் தாங்கி இருந்ததுமல்லாமல், விட்டுணுமூர்த்தி ஒரு புராணத்தை அருளிச்செய்தார். அதன் தொகுப்பு—வியாசர் சூதமுனிவருக்குச் சொல்ல, சூதர் சௌனகமுனிவருக்குச் சொல்ல—கூர்ம புராணமாயிற்று. அது ஆறு யிரம் சுலோகங்களையுடையது.

மச்சமூர்த்தியை சிவன் அடக்கினார் என்று சிவபக்தர்கள் புராணக்கதை புனைந்தது போல, கூர்மவதார மூர்த்தியையும் சிவன் வென்றதாகக் கதையிருக்கிறது. மந்தார மலையைத் தாங்கிய கர்வத்துடன் கூர்ம மூர்த்தி இருந்ததாகவும், அதைக்கண்ட சிவன் கூர்மத்தை அடக்கி அதன் மேலோட்டைப் பெயர்த்து தன் மார்பில் அணிந்து கொண்டாரம்.

விட்டுணுவுக்கு ஒரு கதை இருந்ததால், போட்டியாக சிவனுக்கு ஒரு கதை இருக்கும்; அல்லது விட்டுணுவைச் சிவன் வென்று விட்டதாக இருக்கும். இதேபோல் சிவனைத் தாழ்த்தி, விட்டுணுவை உயர்த்திடும் கதை உண்டு.

தன்வந்திரி அவதாரம்

தேவர்களும் அசுரர்களும் பாற்கடலை ஆயிரம் ஆண்டுகள் கடைந்தார்களாம். முதலில் ஆலகால விடம் வந்தது. பாம்புகளின் வாய்ப்பக்கம் இருந்த அசுரர்கள் விஷவாடைபட்டு மூர்ச்சையாகியும், தளர்ந்தும், இறந்தும் போனார்கள். அமிர்தம் வரவேண்டிய சமயத்தில் நஞ்சு பரந்துவிட்டதால், தேவர்கள் வேண்டிக்கொள்ள, சிவபெருமான் அதைத் திரட்டி, உண்டுவிட்டார். அது தொண்டையில் தங்க, அப்பகுதி மட்டும் கருநிறமானது. அதனால் சிவனுக்குத் திருநீலகண்டர் என்ற பெயரும் உண்டானது.

தேவர்களும் அசுரர்களும் மீண்டும் கடைய, கடலிலிருந்து அமிர்தம் வெளிவந்ததாம். அத்துடன் தன்வந்திரி, இலட்சுமி, அசனிகை, காமதேனு, ஐராவதம், பஞ்சதருக்கள் முதலியனவும் அறுபதுகோடி அரம்பையர்களும் பிறந்தனர். இவர்களில் முதலாவதாகக் கூறப்பட்ட தன்வந்திரி விட்டுணுவின் அம்சமெனப் புராணம் கூறுகிறது.

தன்வந்திரி தேவவைத்தியராம். அவர் மீண்டும் பூலோகத்தில் தீர்க்கதமர் என்பவருக்கு மகனாகப் பிறந்து, ஆயுர்வேத வைத்திய முறையை உண்டாக்கினாராம். தீர்க்கதமர் என்பவர் யார் தெரியுமா? தேவகுருவாம் பிரகஸ்பதி தன் தம்பியைக் காணப் போனசமயத்தில், தம்பியில்லாமல் தம்பி மனைவி மட்டும் தனியிருக்க, அவள் கர்ப்பவதி என்றும் பாராது அவளைக் கற்பழித்தாராம். கற்பழிக்கப்பட்டவளின் கற்பத்திலிருந்த குழந்தை தேவகுருவுக்குத் தடையாயிருந்து கோபிக்க, கருவிலிருக்கும் சிசுவின் கண்ணைப் பிரகஸ்பதி குத்திக் குருடாக்கினர். குருடனான தீர்க்கதமனுக்குத் தன்வந்திரி குழந்தையாகப் போனார். தன்வந்திரியல்லாமல், தீர்க்கதமனுக்கு நூறு குழந்தைகள் இருந்தனர்.

பாற்கடலில் பிறந்து, தேவவைத்தியராகத் தன்வந்திரி ஆனகதை பாகவத புராணத்தில் இருக்கிறது. ஆயுர்வேத வைத்தியமும் அவரிடமிருந்துவந்ததாகவும் அப்புராணம் கூறும்.

பிரமபுராணத்தில், தன்வந்திரி என்ற வைத்தியரைப்பற்றிக் குறிப்பு வருகிறது. விட்டுணுவின் அவதாரம் என்பதற்கு எதுவும் ஆதாரமில்லை. இவன் அறு என்ற அரசனுக்கு மகனாகப் பிறந்து, பரத்துவாசரின் மாணவராகச் சென்றார்.

மேலே தீர்க்கதமனைப் பற்றிக்கூறியபடி, பிரகஸ்பதிக்கும், கர்ப்பிணியாயிருந்த அவர் தம்பி மனைவி மமதைக்கும் பிறந்த குழந்தைதான் பரத்துவாசர் தன்வந்திரி பூலோகத்துக்கு வரும் கதையில், மமதையின் பிள்ளைகள் வந்துவிடுகிறார்கள். ஒரு புராணத்தில் பிரகஸ்பதிக்கு மமதையிடம் பிறந்த பரத்துவாசரும், மற்றொரு மமதைக்கு அவள் சோரந்தக் கணவரிடம் பிறந்த பிள்ளையும் வருகின்றனர்.

பரத்துவாசரிடம் தன்வந்திரி ஆயுர்வேதத்தைக் கற்று, பின் தனியாகச் சென்று குருகுலம் வைத்து, தாம் கற்ற வைத்திய முறையைக் கற்று, அதை எட்டு வகைகளாக்கி தமது மாணாக்கர்களுக்கு உபதேசித்தாராம். அதுவே ஆயுர்வேத வைத்தியத்திற்கு ஆரம்பமாக இருப்பதாகும்.

மற்றும் இருபுராணக்கதைகளில் தன்வந்திரி காசிராசனின் மகனாகவும் தீர்த்தபசுமுனிவரின் மகனாகவும் கூறப்படுகின்றார். தன்வந்திரி பிறப்புபற்றி பலவாறாகச் சொல்லப்பட்டுள்ளன. புராணத்துக்குப் புராணம் அது மாறுதலடைகிறது.

ஆயுர்வேத நூல்களைப்பற்றிய உரைகளில் பிரமாதான் ஆயுர்வேதத்தை உண்டாக்கியதாகக் கூறப்படுகிறது. நான்கு வேதங்களை உண்டாக்கியதும், பிரமதேவன் வைத்திய முறையை உண்டாக்கி, அதை ஐந்தாம் வேதமெனச் சூரியனுக்குச் சொல்லிக் கொடுத்தாராம். சூரியன் அதைக் கேட்டு, ஒரு நூலெழுதி வைத்தான். அதை உணர்ந்து, ஆயுர்வேதத்தை தன்வந்திரி, அசுவினி தேவர்கள், யமன், சியவனன், புதன், அகத்தியன், சனகன், நகுலன், சகாதேவன் முதலியவர்கள் பரப்பினார்கள். இவர்களை ஆயுர்வேத முதன்மையாளர்களாகப் புராணம் கூறும்.

தன்வந்திரி நிகண்டு, வைத்திய சிந்தாமணி சிமிட்டு ரத்தசுருக்கம் கலைநானம ஆகிய நூல்கள் தன்வந்திரி என்னும் பெயருடையவரால் எழுதப்பட்டு இருக்கின்றன. தன்வந்திரி என்ற ஆயுர்வேத வைத்தியர் உண்மையிலேயே ஒருவன் இருந்திருக்கக்கூடும். புத்தரை விட்டுணுவின் அவதாரமாக ஆக்கியதுபோல, தன்வந்திரியையும் விட்டுணுவின் அவதாரங்களில் ஒன்றாகச் சேர்த்திருப்பார்கள்.

மொனகோ நாடு

ஹாலிவுட் நடிகையான கிரேஸ் கெல்லி என்பவரை செய்னியர் என்ற மொனகோ நாட்டு அரசர் திருமணம் செய்துகொண்டார் என்ற செய்தி வந்ததல்லவா? மொனகோ நாடு அப்படியொன்றும் பெரிய நாடல்ல.

அதன் பரப்பு 375 ஏக்கர்.

மொத்த மக்கள் தொகை 20,000.

மாண்டிகாலோ என்ற முக்கியமான நகரில் உள்ள மக்கள் தொகை 7,967.

நாட்டின் பரம்பு $\frac{1}{2}$ சதுர மைல் அளவு என்றாலும், சூதாடுமிடங்களும் கேளிக்கையான இடங்களும் ஏராளமாக இருக்கின்றன. ஆண்டொன்றுக்கு 15லட்சம் பேர்கள்வரை, அங்கு வந்து போவார்களாம். சூதாடுமிடங்கள் செலுத்தும் வரிகள்தாம் நாட்டின் முக்கிய வருமானம்.

தமிழர் ஆடை அணிகள்

திருமதி. ஆர். இராஜாமணி, பி. ஏ. (ஆனர்ஸ்) எல். டி.

ஒரு நாட்டினர் அணியும் ஆடையணிகள், அந்நாட்டு மக்களது நாகரிகத்தின் சின்னமாக விளங்குகின்றன. பண்டைத் தமிழரது நாகரிகத்தை, அக்காலத்திலிருந்த புலவர்கள், என்றும் அழியாத சொல்லோவியமாகத் தீட்டியுள்ளனர். எனவே, அன்னாரது வாழ்க்கைக் கண்ணாடியாக விளங்கும் சங்க இலக்கியத்தின் துணைகொண்டு, அவர்கள் அணிந்திருந்த ஆடையணிகளைக் குறித்துச் சிறிது ஆராய்வோம்.

உலகின் பல்வேறு பகுதிகளிலுமிருந்த மக்கள் நாகரிகமற்று வாழ்ந்த காலத்தில் பழந் தமிழர் சிறந்த ஆடையணிகளையணிந்து. சீரும் சிறப்பும் பெற்று விளங்கினர். அவ்வாடைகள், பெரும்பாலும் பருத்தி நூலால் ஆனவை. அவை, இழை தெரியாதவாறு மிகவும் நெருக்கமாகவும், மென்மையாகவும் நெய்யப்பட்டன. அவற்றிற்குவமையாக, பாலாவி, புகை, பாம்பின் சட்டை, மூங்கிலின் மெல்லிய தோல் முதலியவற்றைப் புலவர்கள் எடுத்தாண்டுள்ளனர். இதனின்றும், நம் நாட்டில் நெசவுத் தொழில் ஒரு காலத்தில், உச்சநிலையிலிருந்திருக்க வேண்டும் என்பது புலனாகின்றது. ஆடை நெய்வதற்கு வேண்டிய நூலைப் பெரும்பாலும் கைம்மை நோன்பை மேற்கொண்டிருந்த பெண்கள் நூற்றனர். ஆகவே அவர்கள் 'பருத்திப் பெண்டிர்' என அழைக்கப்பட்டனர். ஆடைகள் தறியினின்றும் அறுக்கப்பட்டமையால் அறுவை யென்னும் பெயர் பெற்றன. நமது உடலைச் சுற்றியிருப்பது என்ற பொருள் கொண்ட 'புடைவை' என்னும் பெயரும் ஆடைக்கு உண்டு. இச்சொல்லானது ஆடவர், மகளிர் ஆகிய இருதிறத்தாரது ஆடையையும் குறிக்கும். இதனை, சமண சமயத்தைத் தழுவியிருந்த மருள் நீக்கியார் சூலைநோயால் பிடிக்கப்பட்டிருந்தபோது, தாம் முன்பு அணிந்திருந்த பாயுடையைக் களைந்துவிட்டு, வெண்புடைவை மெய்சூழ்ந்து தன் தமக்கையாரைக் காணவந்தார் என்னும் பெரிய புராணச் செய்தி விளக்கா நிற்கும்.

'கலிங்கம்' என்ற சொல்லும் ஆடையைக் குறிப்பதாகும். கடையெழுவள்ளல்களில் ஒருவனை பேகன், கார்காலத்தில் மயில் ஆடுதல் கண்டு, அது குளிரால் வருந்துகின்றதெனக் கருதி, தனது போர்வையை யெடுத்து அதற்குப் போர்த்தினான் என்பதை,

"கானமஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய பேகன்"

என்னும் அடியினின்றும் அறியலாகும்.

கொட்டைக்கரை போடப்பட்ட உயர்ந்த பட்டாடைகள், பரிசில் பெறச்சென்ற பாணர்கட்கு அரசர்களால் வழங்கப்பட்டன. ஆற்றுப் படைகளில் இதற்குச் சான்று காணலாம். பூவேலையுடன் கூடிய நிறமூட்டப்பட்ட ஆடைகளும் அக்காலத்தில் நெய்யப்பட்டன என்பதை,

'நீலக்கச்சை பூவாராடை'

என்னும் அடி விளக்குகிறது.

சிறுமியர் அணியும் ஆடை, சிற்றாடை எனப்படும். மழையில் நனைந்து வந்த ஒளவையாருக்குப் பாரிமகளிர் நீலச் சிற்றாடை கொடுத்து உதவினர். காலத்தினாற் செய்த அவ்வுதவிக்கு மாறாக,

"பாரி பறித்த கலனும் பழையனூர்க்
காரி யன்றீந்த களைக்கோலும்—சேரமான்
வாராயோ வென்றழைத்த வார்த்தையு மிம்மூன்றும்
நீலச்சிற் றாடைக்கு நேர்."

என்னும் அழியாத பாட்டைப் பாடிப் போந்தார் ஒளவை மூதாட்டி. மெல்லிய நீலநிற ஆடைக்குமேல், முத்துக்களினாலாகிய 'விரிசிகை' என்னும் இடையணியை மாதவி அணிந்திருந்தாள். எழுகோவை, எண்கோவை, ஒன்பதுகோவை, பதினாறுகோவை மணியென இடையணி பல திறப்படும். நீல நிறமானது, வெண்மணிகளின் ஒளியை எடுத்துக் காட்டுகிறது. பழங்காலத்தில், முத்துக் கோப்பவர், நீலத்துகிலில் அவற்றை வைத்துக்கொண்டு கோத்தனர். மணமண்டபத்தின்

விதானம் நீலப்பட்டினுலும், பந்தல் முத்தினுலும் அமைக்கப்பட்டன என்று மங்கல வாழ்த்துக் காதை கூறுகின்றது. நீலவானில் விண்மீன்கள் விளங்குவதும், முத்து, வயிரம் போன்ற மணிகளினுல் செய்யப்பட்ட அணிகள் நீலப்பட்டினுலாகிய பேழைகளில் வைக்கப்படுவதும், நாம் காண்பனவாகும். துறவறத்தை மேற்கொண்டோர் காவியாடையுடுத்தல் மரபு. இதனை, 'முல்லைப் பாட்டு' போன்ற நூல்களிற் காணலாம்.

இன்னும், முழந்தாள்வரையில் அணிந்து கொள்ளும் 'வட்டுடை' என்னும் உடையும் அக்காலத்தில் இருந்தது. காமன் ஒரு காலத்தில் ஆடிய 'பேடியாடலை'யாடிய ஒருவன், வட்டுடை தரித்திருந்ததாக மணிமேகலை மலர்வனம்புக்ககாதையில் கூறப்பட்டுள்ளது.

மற்றும், தழையுடையென்னும் விசேட உடையும் பழங்காலத்தில் உண்டு. அவ்வுடை, இளந்தளிர்களினுலும், மலர்களினுலும் ஆயது. அதைப் பெண்கள் அழகுக்காக ஆடையின்மீது அணிந்து கொள்வர். தழையுடையானது, தலைமகனுல், தலைமகளுக்குத் தோழியின் மூலம் காணிக்கையாகக் கொடுக்கப்பட்டது என்பதற்கு, அகத்துறை நூல்கள் சான்று பகரும்.

பண்டைக்காலத்தில் பட்டாடைகளும் நெய்யப்பட்டன என்பது முன்னரே கூறப்பட்டது. சரிகை கலந்து நெய்யப்பட்ட மஞ்சள்நிறப் பட்டாடை, "பீதாம்பரம்" என்றும், 'பொன்னுடை' என்றும் பெயர்பெற்றது. இக்காலத்திலும், சிறந்த அறிஞர்கட்குப் பொன்னுடை போர்த்திப் பாராட்டும் வழக்கம் இருந்து வருகிறது. எலிமயிர், ஆட்டுரோமம் முதலிய வற்றைக்கொண்டு நேர்த்தியான கம்பளங்கள் நெய்யப்பட்டன. இவ்வாறு சுமார் முப்பத்தாறுவகை ஆடைகள் அக்காலத்தில் இருந்ததாய்க் கூறப்பட்டுள்ளது. இன்னும், உடை தைக்கும் தையற்காரர், 'துன்னகாரர்' என்னும் பெயருடன் இருக்கின்றனர். நூற்றுவர் பின்தொடர வந்த பாண்டிநாட்டுப் பொற்கொல்லன், சட்டையணிந்திருந்ததாய்த் தெரிகிறது. இது, 'மெய்புகுபை' என்பதினின்றும் விளங்குகிறது. இனி, தமிழரின் அணிகளைப்பற்றி ஒருசில கூறுவோம்:

பழங்காலத்தில் ஆடகம், சாம்புநதம், கிளிச்சிறை, சாதரூபம் என்னும் நால்வகைப் பொன்னும் நவமணிகளும் மிகுதியாக இருந்தன. அவற்றைக்கொண்டு பற்பலவிதமான அணிகலன்கள் செய்யப்பட்டன. பொன்னுல் அணி செய்பவர் 'உருக்குத்தட்டார்' என்றும், பொன்னையும்மணியையும் பிரியாதவாறு இணைத்து இழைப்பவர் 'பணித்தட்டார்' எனவும் கூறப்பட்டனர். பொன்னையும் மணியையும் சேர்த்து இழைப்பதால் அதற்கு இழை என்னும்ஒரு பெயருமுண்டு. ஒன்பதுவகை மணிகளின் இலக்கணத்தை நன்கு அறிந்த பணித்தட்டார் பலர் அக்காலத்தில் இருந்தனர். வடமலையிற்பிறந்த பொன்னும், கீழ்க்கடலில் உண்டான பவளமும், தென்கடலிற் கிடைத்த முத்தும், காவிரிப்பூம்பட்டினத்துக் கடைத்தெருவில் குவிந்து கிடந்தன. அவ்வாறே பாண்டிநாட்டுத் தலைநகராம் மதுரைமாநகரத்து ஆவண வீதியில், குற்றங்குறைபாடற்ற நவமணிக்குவியல்கள் காணப்பட்டன.

அணிகளை, குழந்தைகள் அணி, ஆடவர் அணி, மகளிர் அணி என மூன்று வகையாகப் பிரிக்கலாம். குழந்தைகட்குப் பாதுகாவலாக, 'ஐம்படைத்தாலி' என்னும் அணி, அணிவிக்கப்பட்டது. "விழாக் காணும்பொருட்டு, காவிரிப்பூம்பட்டினத்தில் ஆடவரும் மகளிரும் குழுமியிருந்தனர். குழந்தைகள் அணிந்திருந்த ஐம்படைத்தாலியை, அவர்கள் வாயினின்றும் சிந்திய உமிழ்நீர் நனைத்தது" என்று மணிமேகலையாசிரியர் கூறியுள்ளார். தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் மிகுந்த இளம்பருவத்திலேயே போர்க்களம் சென்ருன் என்பதனை,

'தாலி களைந்தன்று மிலனே'

என்னும் புறப்பாட்டின் அடி உணர்த்தும். சிறுவர், புலிப்பல் தாலியும் அணிந்திருந்தனர். இக்காலத்தில் புலிநகத்தைப் பொற்சங்கிலியில் கோத்து மகளிரும் அணிந்து கொள்கின்றனர். சதங்கைபோன்ற காலணிகளைச் சிறுவர் அணிந்திருந்தனர் என்பது 'பொற்கால் புதல்வர்' என்னும் பட்டினப் பாலைச் சொற்ருெடரால் விளங்குகின்றது.

அரசரும் வீரரும், வீரத்துக்கு அறிகுறியாகக் காலில் கழலும் தோளில் வாகுவலயம் என்னும் வளையலும் அணிந்து போருக்குச் செல்வர். இவற்றைப்பற்றிய குறிப்பு புறநானூறு போன்ற நூல்களில் காணப்படுகிறது. பகையரசர்களை வென்ற மன்னர்கள், தோல்வியுற்ற மன்னரது முடியிலுள்ள பொன்னைக்கொண்டு கழல்செய்து, தாம் அவரை வென்று அடிப்படுத்தியதற்கு அடையாளமாக அணிந்துகொள்வர். இவையன்றி, அரசர்கள் பொன்னுலும் மணியாலும் ஆன விலையுயர்ந்த முடிக்கலன், மாலை முதலிய

வற்றையும் அணிந்திருந்தனர். மேலும், அவர்கள் போருக்குச் செல்கையில் பொன்னால் செய்யப்பட்ட அடையாள மாலைகளையணிந்து சென்றனர்.

பழங்காலத்தில் பலவகை அணிகலன்கள் இருந்தபோதிலும், இக்காலத்து நாகரிக மகளிரைப்போலவே பழந்தமிழ் மகளிரும, சிறந்த ஒருசில அணிகளையே அணிந்தனர். அதனால் அன்னார் 'ஆயிழையார்' எனப்பட்டனர். அவ்வணிகள் முற்றுப்பெற்ற வேலைப்பாடு உடையனவாக இருந்தமையால் 'முற்றிழை' என்னும் பெயர்பெற்றன. பெண்கள் சாதாரணமாக, சங்குவளையல், பொன்வளையல் போன்றவற்றை அணிந்திருந்தனர். இதனை 'ஒண்டொடி' 'பைந்தொடி' 'பொற்றொடி' என்னும் சொற்கள் விளக்கும். காதில் மகரக்குழை அணிந்திருப்பர். முடக்கு என்னும் நெளிமோதிரம் அணியப்பட்டது என்பது நெடுநல் வாடையினின்றும் விளங்குகின்றது. இக்காலத்திலும், மணிவைத்துப் பொன்னால் செய்யப்பட்ட நெளிமோதிரம் அணியப்படுகிறது. முடமோசியார் பாடலொன்றில் காணப்படும்,

"ஈகை யரிய இழையணி மகளிரொடு
சாயிற் றென்ப வாஅய் கோயில்"

என்ற அடிகள், அக்காலத்தில் மணமான பெண்டிர் மங்கல நாண் அணிந்திருந்தனர் என்று கருத ஏதுவாயுள்ளன.

பெண்கள் காலில் அணியும் சிலம்பு பொன்னாலாயது. நடக்கும்போது ஓசையுண்டாவதற்காக, விலையுயர்ந்த மணிகள் அதனுள்ளே பரலாக இடப்பட்டன. கண்ணகியினது சிலம்பின் பரல் மாணிக்கம் என்பதையும், கோப்பெருந்தேவியினது சிலம்பின்பரல் முத்து என்பதையும் வழக்குரைகாதை விளக்காநிற்கும்.

ஆடல் பாடல்களிற் சிறந்தவளாகிய மாதவி தலைமுதல் கால்வரையில் பலவித அணிகலன்களை அணிந்திருந்தாள். அவற்றுள், பரியகம், நூபுரம், பாடகம், சதங்கை, காற்சரி என்பன காலணிகள். சித்திரவளை, மணிவளை, பவளவளை முதலியவை வளைகளிற் சிலவகைகளாகும், கழுத்தில் வீரச்சங்கிலி, ஞாண், சவடி, சரப்பளி, முத்தாரம் முதலியன அணியப்பட்டன. தெய்வவுத்தி, வலம்புரி, பூரப்பாளை, வடபல்லி, தென்பல்லி என்பன தலைக்கோலங்களாக விளங்கின. இன்னும் ஈண்டுக்கூறா தொழிந்தவை பல.

வறுமை காரணமாக, பழுமரந்தேறும் பறவைபோல, அரசர்களையும் வள்ளல்களையும் நாடிச்சென்ற பாணர்கள், வெள்ளி நாரால் தொடுக்கப்பட்ட பொற்றாமரைப் பூக்களையும், விறலியர் அணிகலனுக்கு வேண்டிய பொன்னையும் பரிசிலாகப் பெற்றுவந்தனர்.

அணிகலன்கள், பெண்களது இயற்கையழகை மிகுதிப்படுத்துகின்றன என்பர் ஒரு சாரார். இயற்கையழகினால் அணிகலன்கட்குச் சிறப்பு ஏற்படுகிறது என்பர் மற்றொரு சாரார். அணிகளின்றியே அழகு மிகுந்து தோன்றும் என்பர் இன்னொரு வகையினர்.

'கூடல் மகளிர் கோலங்கொள்ளும்
ஆடகப் பைம்பூ ணருவிலை யழிப்பச்
செய்யாக் கோல மொடு வந்தீர்'

என்னும் சிலப்பதிகார அடிகளும்

'புனையா வோவியம் போல நிற்றலும்'

என்னும் மணிமேகலையடியும் இறுதிக்கூற்றை வலியுறுத்துகின்றன.

மக்கள் அணிகலன்கள் அணிந்திருந்தது மாத்திரமன்று; யானையின் நெற்றியில் ஓடையென்னும் பொன்முக படாத்தையும், அதன் மருப்பில் 'கிம்புரி' என்னும் பூணையும் அணிவித்தனர். பாண்டிநாட்டைச் சேர்ந்த பிசிராந்தையார் என்னும் புலவர், அன்னச் சேவலை நோக்கி "நீ குமரியினின்றும வடக்கே செல்கையில் இடையிலுள்ள உறையூரில் தங்கி, கோப்பெருஞ் சோழனைக்கண்டு, நீ என்னுடைய அடியின்கண் உறைபவன் எனக் கூறுவாயேல், அவன், உன்னால் அன்பு செய்யப்படும் பேடைக்குவேண்டிய அணிகலன்கள் அளிப்பான்" என்றார். பறவைகள், அணிகள் அணிவதில்லை. எனவே, காணாமலே நட்புக்கொண்டதன் ஆருயிர் நண்பனாம் பிசிராந்தையின் பெயரைக்கேட்ட அளவில், சோழன் மிக்க மகிழ்ச்சியடைந்து பரிசில் வழங்குவான் என்பதே அதன் பொருளாகும்.

பெரும் பஞ்ச காவியங்களாகிய சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி முதலியவற்றைத் தமிழ் அணங்கிற்குரிய அணிகலன்களாகக் கூறுவர்.

பழங்காலத்திலிருந்த அணிகலன்களிற் பல இக்காலத்தில் இல்லை. அப்படியிருப்பவற்றின் பெயரும் சரியாகத் தெரியவில்லை. நாட்டியக் கலையை ஆதரித்து வருபவர், பழைய அணிகளுள் கிடைத்தவற்றைப் பாதுகாக்கின்றனர். ஏனெனில், அவ்வக்காலத்து ஆடல்பாடல்களை நிகழ்த்துகையில், அவ்வவற்றிற்கேற்ற ஆடையணிகள் அணிதலே ஏற்புடைத்து.

வாளைமீனின் அங்காந்த வாய்போன்ற நெளி மோதிரமும், அகலக்கரை போடப்பட்ட ஆடைகளும் தொன்மையைக் குறிக்கும் என்பர்.

ஒருகாலத்தில், நம் நாட்டு ஆடைகள் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. பாண்டிநாட்டு முத்தானது, உரோமாபுரி, எகிப்து போன்ற நாட்டு மன்னரது முடியை அலங்கரித்ததாக, யாத்ரிகரது குறிப்பில் காணப்படுகிறது. அத்தகைய தமிழ்நாடு பிற நாடுகளினின்றும் ஆடையை எதிர்பார்த்து ஏங்கி நிற்கவேண்டிய நிலை சமீபகாலம்வரையில் ஏற்பட்டிருந்தது. அதற்குக் காரணம் தமிழர் நெசவுத் தொழிலை இடையில் செய்யாதுவிட்டு விட்டதேயாகும். அத்தொழிலானது மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளது. பெருத்த ஆதரவும் அதற்கு அளிக்கப்பட்டு வருகிறது. எனவே, "உழவுக்குந் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்னும் அமரகவி பாரதியாரின் பொன்மொழியை அனைவரும் கருத்தில் இருத்தி, தொழில் செய்ய முற்படுவாராயின், நெசவுத்தொழில் மீண்டும் பழைய உன்னத நிலையை அடையும் என்பது ஒருதலை.

(மதுரைத் தமிழ்ச்சங்கப் பொன்விழா மலர் 1956)

ஓட்டப் பந்தயம்

உயிரினங்களையெல்லாம் ஒன்றாக நிறுத்தி ஓட்டப்பந்தயம் விட்டால், எந்த உயிர்இனம் முதலில் வரும்?

நிலத்தில் நடமாடும் உயிரினங்களை எடுத்துக்கொண்டால் மனிதன் மற்றெல்லா உயிர்வகைகளைவிட புத்திசாலித் தனத்தில் உயர்ந்தவனென்றாலும், ஓட்டப் பந்தயத்தில் மிகப்பின்னால்தான் இருக்கிறான். உலகத்தில் மிகவேகமாக ஓடக் கூடியவர்களைப் பார்த்தாலும், மணிக்கு 22 மைல் வீதத்தில்தான மனிதன் உயர்ந்த அளவு ஓடமுடிகிறது. இதுவும் தொடர்ந்தாற்போல் ஓடிக்கொண்டிருக்க முடியாது. மிகக் குறைந்த அளவு தூரத்தில்தான் அந்த வேகம் இருக்க முடியும்.

வேட்டைநாய் மணிக்கு 36 மைல் வேகத்தில் ஓடும். வேட்டையாடும் பொழுது நீண்ட தூரம் அதேவேகத்தில் ஓடமுடியும். ஓடக்கூடிய மிருகங்களைப் பற்றி நினைக்கும்பொழுது குதிரையின் வேகம் மணிக்கு 40 மைல் வீதம்வரை உயரும். ஆனால் நான்கு கால் பிராணிகளில் குதிரைதான் வேகமானது என்று கூறிவிடமுடியாது. மான் 50 மைல் வேகத்துடன் ஓடக்கூடியது. மிகக்குறுகலான தூரத்தைமட்டும் வைத்துப்பார்த்தால், சிறுத்தைப் புலியின் வேகத்தை எதனாலும் மிஞ்சமுடியாது. தனது இரையைக் குறிவைத்து, சிறுத்தைப் புலி திடீரென்று பாய்ந்து ஓடிவரும்பொழுது அதன் வேகம் 70 மைலுக்கு மேலிருக்குமாம்.

பறவைகளைப்பார்த்தால், வேகத்தில் 70 மைலுக்கு மேல் போகக்கூடிய பறவைகள் பல இருக்கின்றன. கழுகு 90 மைல் வேகத்தில் பாய்ந்து செல்லக் கூடியது, பருந்து 120 மைல் வேகத்தில் பறந்து செல்லும் ஆற்றலுடையது. பருந்துவகையுடன் ஒத்த வேட்டைப் பருந்து அல்லது வல்லூறு 160 விருந்து 180 மைல் வேகம் வரைப் பறந்து செல்லுமாம்.

சில உயிரியல் கணிப்பாளர்கள் மான் ஈ எனப்படும் ஒரு சிறு பூச்சியினம் 800 மைல் வேகத்தில் செல்லக்கூடியது என்கிறார்கள். சிறு பூச்சிக்கு அவ்வளவு மிகப்பெரிய வேகத்துடன் செல்லும் சக்தியும் உடல் அமைப்பும் இல்லையென்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

இதுவரைக் கவனிக்கப்பட்டுள்ள உயிர்வகைகளில் வல்லூறுதான் வேகமாகச் செல்லக் கூடியது என்று கூறலாம்.

நங்கையிடம் சிக்குண்ட நெஞ்சம்

[இரா. நெடுஞ்செழியன்]

தலைவன் அறிவும், ஆற்றலும், ஈகையும், இரக்கமும், அன்பும் ஒருங்கே அமையப்பெற்ற அழகே உருவானவன். செல்வ வளத்துக்கோ, செழிப்பான சூழ்நிலைக்கோ சிறிதும் குறை வில்லை. அவன் கவலையற்று வாழும் அடலேறு போல் காலங்கழித்து வருகிறான்.

தலைவன் பொழுதுபோக்குவதற்கு உற்ற துணையாக நண்பன் ஒருவன் அமைகிறான். இருவரும் ஒத்த வயதும், ஒத்த பண்பும் உடையவர்களாக அமைந்து ஆருயிர்த் தோழர்களாக இருந்து வருகிறார்கள். சுருங்கச் சொன்னால் அவன் தலைவனுக்கு ஏற்ற பாங்கனாகத் திகழ்கிறான். பாங்கன் தலைவனின் நலத்திலே மிக்க அக்கரை கொண்டு, அவனுக்கு எல்லா வகையிலும் உதவிபுரிபவனாக இருந்து வருகிறான். வேடிக்கை பார்க்கப் போகும் போதும், விளையாடப் போகும் போதும், நீராடச் செல்லும் போதும், நிலா முற்றத்தில் உலாவும் போதும், உண்ணும் போதும், உறங்கும் போதும், கல்விபயிலப் போகும் போதும், கலையின்பம் நுகரச் செல்லும் போதும் இருவரும் இணைபிரியாமலே சென்று வருவது வழக்கம்.

ஒருநாள் மாலைப்பொழுதில் பாங்கன் வேறு வேலையாக வெளியே சென்றிருக்கிறான். தலைவன் மாளிகையில் தன்னந்தனியே இருக்கிறான். தனியாக இருப்பது அவனுக்கு மன மகிழ்ச்சியைத் தராததால், மலைச்சாரலையடுத்த மரங்களடர்ந்த காவற்காட்டின் பக்கம் சென்று உலாவி வரலாம் என்ற எண்ணத்தோடு வெளியே புறப்படுகிறான்.

ஊரையடுத்த குன்றின் அருகே போகும் போது, குழலின் ஒலியும், பலவாத்தியங்களின் முழக்கமும் அவன் செவியில் படுகின்றன. வாத்திய முழக்கங்கள் வந்தப்பக்கம் செல்லுகிறான். குன்றின் சரிவில் ஒருபக்கம் கழைக் கூத்தாடியின் ஆட்டம் நடைபெறுவதையும், அங்குள்ள மக்கள் சூழநின்று வேடிக்கைப்பார்ப்பதையும் பார்க்கிறான். தானும் சென்று வேடிக்கை பார்க்கலாம் என்ற விருப்பத்துடன் அருகே செல்கிறான். கழைக் கூத்தி, ஒருத்தி மூங்கில்களிலே கட்டப்பட்ட முறுக்குண்ட வலிய கயிற்றின்மீது ஏறி நடந்து நாட்டியம் ஆடுகிறாள். அவள் நாட்டியத்திற்கேற்ப வாத்தியங்கள் இயங்குகின்றன. மக்கள் கையொலி எழுப்பி ஆரவாரித்துக் கழைக் கூத்தியின் ஆட்டத்தை மகிழ்ந்து வரவேற்கின்றனர். வேடிக்கைப் பார்க்க வந்தவர்கள் கொடுத்த சிறு சிறு உதவிப்பொருள்களைப் பெற்றுக்கொண்டு, அருகே இருக்கும் குடிசைக்குக் கழைக்கூத்தியும்; அவளோடு வந்தவர்களும் அகலுகிறார்கள். வேடிக்கைப் பார்க்க வந்த மக்களும் சிறிது சிறிதாகக் கலைந்து செல்கிறார்கள். தலைவன் சற்று தொலைவிலே உள்ள ஒரு பாதையின் மீது உட்கார்ந்துகொண்டு, அங்கு நடக்கும் நிகழ்ச்சிகளையெல்லாம் பார்த்து மகிழ்ந்து கொண்டிருக்கிறான்.

எல்லோரும் அவ்விடம் விட்டு அகன்றதும்' குரங்குகளும், குரங்குக்குட்டிகளும் அங்கு வருகின்றன. கீழே சிந்திக்கிடக்கும் கடலை போன்ற உணவுப் பொருள்களைப் பொறுக்கித் தின்னுகின்றன. அத்திப்பழம் போன்ற சிவந்த முகத்தையும், பஞ்சு போன்ற தலையையும் உடைய வலிய குரங்குக்குட்டி ஒன்று, மூங்கிலிலே ஏறிக் கழைக்கூத்தி நடந்த கயிற்றைப் பற்றிக் கொண்டு ஆடத்தொடங்குகிறது. அதனை அங்குள்ள குறவர்குடிகளைச் சேர்ந்த இளம் பிள்ளைகள் பார்த்து விட்டு ஓடிவந்து, அருகிலுள்ள குன்றின்மேலுள்ள மூங்கிலிலே விரைந்து ஏறி நின்று, கைகொட்டித்தாளம் போட்டுச் சிரிக்கிறார்கள். குரங்குகள் பிள்ளைகளை விரட்டுவதும், பிள்ளைகள் குரங்குகளை விரட்டுவதுமாக இருக்கிறார்கள். இவற்றையெல்லாம் கண்டு களித்துவிட்டுத், தலைவன் அப்பால் நடந்து செல்கிறான்.

செழித்து வளர்ந்த மரங்கள் அடர்ந்த தோப்பு அதாவது காவற்காடு ஒன்று தென்படுகிறது. இயற்கைக்காட்சிகளை நுகர, தலைவன் அத்தோப்புக்குள் நுழைகிறான். அங்கு நறுமணம் வீசும் வண்ணப்பூக்களை மலர்ச்செடிகள் பூத்துக்குலுங்கவைத்துக்

கொண்டிருக்கின்றன. துள்ளியோடும் மானும், புள்ளிமேவிய மயிலும் தலைவனுக்கு மிக்க மகிழ்ச்சியை யூட்டுகின்றன. இன்னிசை எழுப்பும் பறவைகள் பழங்கள் நிறைந்த மரங்களில் உட்கார்ந்து பலவிதமான இனிய ஒலிகளை எழுப்பிக்கொண்டிருக்கின்றன. கொடிகளையும், தழைகளையும், வண்ணப்பூக்களையும் ஏந்திக் கொண்டு சிற்றருவி ஒன்று சலசலவென்று சிந்துபாடிக்கொண்டு, இழிந்தோடி வருகிறது. தலைவன் இவற்றையெல்லாம் பார்த்துக் களிப்பெய்திக்கொண்டு, மெல்ல சிறுநடை போட்டுக் கொண்டு செல்லுகிருன்.

அந்தக் காவற்காட்டை அடுத்துச்சிற்றூர் ஒன்று இருக்கிறது. அந்தச் சிற்றூரைச் சார்ந்த அழகிய தோற்றமும், இனியசாயலும் கொண்ட அன்னநடை மின்னற் கொடியாள் ஒருத்தி, பூக்கொய்ய அந்தக் காவற்காட்டிற்கு வந்திருக்கிருள். அவள் பூச்செடி அருகில் நின்று தாவித்தாவி, உயர்ந்த கொம்புகளிலே உள்ள பூக்களைத் தன் மெல்லிய விரல்களால் கொய்து கொண்டிருக்கிருள்.

தலைவன் மேலெழுந்தவாரியாகக் காட்சிகளைக் கண்டுகொண்டு செல்லும் போது அந்தப் பூங்கொடியாள் அவன் கண்ணில் தட்டுப்பட்டு விடுகிருள். அவன் அங்கேயே நின்று அவளை உற்றுப்பார்க்கிருன்; அவளது தோற்றமும் சாயலும் அவனைக் கவருகின்றன. அவளைக் காணக் காண அவனுக்கு மனமயக்கம் ஏற்படுகிறது. அவள் தாவித்தாவி பூப்பறிக்கும் காட்சி அவனது உள்ளத்தைக் கொள்ளை கொள்கிறது. அவளது இனியமுகம் முழுவதையும் நேர்ப் பார்வையில் நிறுத்திக் காண அவன் துடி துடிக்கிருன், அவள் முகம் முழுவதையும் காண இயலுமா என்று கருதி முன்னும், பின்னும் தள்ளி நின்று பார்க்கிருன். அதற்குள் யாரோ நடமாடும் குறிப்பறிந்து, அம்மங்கை நல்லாள் தலைவன் நிற்கும்பக்கம் திரும்பிப்பார்க்கிருள். அடவேறு அன்ன ஆணழகன் ஒருவன் திடீரென்று தோற்றம் அளிப்பதைக்கண்டு வியப்புறுகிருள்; அவனது கவர்ச்சிகரமான தோற்றத்தைக் கண்டு மகிழ்கிருள்; நாணம் அவளைத்தாக்கத் தலை குனிகிருள்; அச்சம் அவளைத் தீண்ட என்ன நேரிடுமோ, ஏது நேரிடுமோ என்று திகைப்புக் கொள்கிருள். தலைவன் அப்படியே அச்சடித்த பதுமைபோல் நின்று, அவளையே உற்று நோக்குகிருன். இருவரது கண்களும் சிறிது நேரம் ஒன்றையொன்று உண்ணுகின்றன. அப்பூங்கொடியாள் நாணத்தால் தலைகவிழ்ந்த பின்னும், தலைவன் அவளையே உற்று நோக்கி, அவள் அழகைப் பருகிக்கொண்டிருக்கிருன்.

அவள், வேறுயாரேனும் அங்கு இருக்கிருர்களா என்று சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, அவனையும் ஒருமுறை கடைக்கண்ணுல் நோக்கிவிட்டு, மீண்டும் தலையைக் கவிழ்ந்துக் கொள்கிருள். அவள் அருகில் சென்று அவளை யார் என்று அறிந்துகொள்வோம் என்ற எண்ணத்துடன், தலைவன், அவள் நிற்கும் இடத்திற்கு நெருங்குகிருன். அவன் தன் அருகில் வருவதைக்கண்டு அவள் உடல் நடுக்கங் கொள்கிருள்.

"யார் நீ? எங்கிருக்கிருய்?" என்று தலைவன் அவளை வினவுகிருன். அதற்கு அம்மடக்கொடியாள் பதிலேதும் உரைக்காமல் நிற்கிருள்.

"அஞ்சாமல் சொல்! நான் உனக்கு உதவி செய்யத்தான் வந்திருக்கிறேன்! நீ யார்? எங்கிருந்து வருகிருய்? சொல் பார்க்கலாம்!" என்று தலைவன் அவளைக்கேட்கிருன்.

அவள் மீண்டும் வாய் மூடிய வண்ணம் அப்படியே நிற்கிருள்.

"நீ யார் என்று என்னிடம் சொல்ல வெட்கப்படுகிருயா? நான் இந்தக் குன்றத்துக்கு அப்பாலுள்ள ஊரைச்சேர்ந்தவன்தான். எனக்குத் தெரிந்தவர் வீட்டைச் சேர்ந்தவளாக நீ இருக்கக்கூடும் என்று கருதித்தான், உண்மையை அறிந்துகொள்ள விரும்புகிறேன்! சொல்லமாட்டாயா? நீயார்?" என்று மீண்டும் அவன் வினவுகிருன்.

அந்நங்கைக்கு என்னசெய்வது என்று தெரியாமல், உடல் நடுக்கமும்; உள்ளநடுக்கமும் ஏற்படுகின்றன. அவனிடத்தில் அவளையறியாமலேயே ஒருவித அன்பும் அவளுக்குப் பிறந்திருக்கிறது. விடையேதும் சொல்லாமல் இருந்தால் அவன் அவ்விடம்விட்டு அகன்றுவிடுவானே என்று அச்சமும் கொள்கிருள். ஒருவாறு தன்னைத்தானே தேற்றிக் கொண்டு "நான் அந்த ஊரைச் சேர்ந்தவள்! அதோ தெரிகிற அந்த உயர்ந்த மாளிகைதான் என்னுடைய வீடு" என்று தன் வீட்டைச் சுட்டிக் காட்டிவிட்டு, மீண்டும் தலை கவிழ்த்துக் கொள்கிருள். நடுக்கத்தால் கையிலே பறித்துவைத்திருந்த மலர்களெல்லாம் நழுவிக் கீழே விழுந்து விடுகின்றன. தலைவன், உடனே குனிந்து, விழுந்த மலர்களையெல்லாம் பொறுக்கி எடுத்து அவள் கையில் வைக்கிருன். அவன்கை அவளது கையோடு படுகிறது. ஒரு நொடிப்பொழுதில் இருவரும் உடல் சிலிர்த்து மெய்மறந்து போய்விடுகின

றனர். அடுத்த நொடியில் தம்நிலைக்கு வருகின்றனர்.

"அந்த மாளிகைதானா உன்னுடைய வீடு? உன்னுடைய தாய் தந்தையர்களை நான் சின்னஞ் சிறுவனாக இருக்கும் போழ்திலிருந்து நன்றாக அறிவேனே!" என்கிறான்.

"அப்படியானால் நீங்கள் என்னுடைய வீட்டிற்கு வந்திருக்கிறீர்களா?" என்று மெல்லிய குரலில் வினவுகிறாள்.

"நான் சின்னஞ் சிறுவனாக இருக்கும்போது வந்திருக்கிறேன். உன் தாய் தந்தையர் எனது ஊருக்கு அடிக்கடி வரும்போது பார்த்திருக்கிறேன்," என்கிறான்.

"நீங்கள் இங்கு எங்கே வந்தீர்கள்?" என்று கேட்கிறாள்.

"இயற்கைக் காட்சிகளைக் காணும் எண்ணத்தோடு நான் உலாவ இங்கு வந்தேன்! நான் என்றும் கண்டறியாத காட்சியாகிய உன்னைக்கண்டேன்! அப்படியே நின்றுவிட்டேன்!" என்கிறான்.

அச்சத்தாலும், நாணத்தாலும் அவள் உடல் நடுங்குவதைக் கண்ட அவன், அவளைத் தன் இருகையாலும் பற்றி "ஏன் இவ்வளவு நடுக்கம்?" என்கிறான். அவள் மெய்மறந்து அப்படியே அவன் மீது சாய்ந்து விடுகிறாள். அவன் அவளை வாரி அணைத்துக் கொண்டு, அங்கேயே உட்காருகிறான். அந்தப் பொழுதே இருவரும் வீணையும் நாதமுமாய்க் காதலராகிறார்கள்.

தலைவி சிறிது நேரம் கழித்துத் தேறுதல் பெற்றுக், கண்விழித்துப் பார்த்துப் புன்முறுவல் பூக்கிறாள். தலைவன் அவளது முல்லைச் சிரிப்புக்கு மறுசிரிப்புக்காட்டி, அவள் கண்ணாடிக் கன்னத்திலும், கனி இதழிலும் முத்தங்களைக் கணக்கில்லாமல் அடுக்குகிறான். அவள் கையில் ஏந்தியிருந்த மலர்க்கொத்துக்களை வாங்கி அவளது கூந்தலிலே சொருகி, அதன் நறுமணம் நுகர்ந்து இன்பத்தில் மூழ்குகிறான். இருவரும் சிறிது நேரம் உரையாடி மகிழ்ந்திருக்கப், பொழுதும் மறைகிறது. தலைவி தன் வீட்டிலுள்ளார் தன்னைத் தேடுவார்கள் என்று சொல்லி விரைந்து புறப்படுகிறாள். தலைவன் அவளை விட்டுப் பிரிய மனமில்லாமல், "நாளையும் இங்கு வருவாயா?" என்று கேட்கிறான். "முயலுகிறேன்!" என்று சொல்லிவிட்டு ஓடிப்போய்விடுகிறாள். தலைவன், அவள் குதித்தோடும் அழகை அவள் சென்று மறையும் வரையில் நின்று பார்த்திருந்துவிட்டுப், பின் மனமகிழ்ச்சியோடு தன் மாளிகைக்குத் திரும்புகிறான்.

தொடர்ந்து சில நாட்கள் தலைவனும், தலைவியும் அந்தக் காவற்காட்டினிடத்துக் கண்டு பேசி மகிழ்ந்திருந்துக் களவொழுக்கம் நடத்துகின்றனர்.

ஏதோ காரணம் பற்றித் தலைவியை வெளிச் செல்லாதவாறு, அவளது தாய்தந்தையர் வீட்டிலேயே இருக்கும்படி திடீரென்று இருத்திவைத்து விடுகின்றனர். தலைவன் வந்துவந்து பார்த்துவிட்டுத் தலைவியைக் காணாமல் ஏக்கத்தோடு வீடுதிரும்புகிறான்.

தலைவன் தலைவியோடு களவொழுக்கத்தில் ஈடுபட்டிருப்பது பாங்கனுக்கு அதுவரையில் தெரியாமலிருக்கிறது. தலைவனது நடைஉடை நடிப்புக்களில் மாற்றம் ஏற்பட்டிருப்பதும்; அவன் எப்போதும்போல் மனமகிழ்வு கொள்ளாமல் ஏக்கத்தோடு இருப்பதும் பாங்கனுக்குக் கவலையையுண்டாக்குகின்றன. தலைவனது ஏக்கத்திற்கான காரணத்தை அறிய பாங்கன் முயலுகிறான்.

"ஏன் ஏக்கத்தோடு இருக்கிறாய்? ஏக்கத்திற்குக் காரணம் என்ன?" என்று பாங்கன் தலைவனைப் பார்த்து வினவுகிறான்.

"நான் காரணத்தைச் சொன்னால், உன்னால் என் ஏக்கத்தைத் தவிர்க்கமுடியுமா?" என்று கேட்கிறான் தலைவன்.

"காரணத்தை முதலில் சொல்லு! உன் ஏக்கத்தைப் போக்க என்னால் முடியுமா? முடியாதா? என்று சொல்கிறேன்" என்கிறான் பாங்கன்.

"என் நெஞ்சு ஒரு அழகிய பெண்ணின் கையில் சிக்கிக்கொண்டது! அதனை அவளையல்லாமல் வேறுயாராலும் விடுவிக்க இயலாது!" என்கிறான் தலைவன்.

"அவள்யார்? எந்த ஊர்? எங்கிருக்கிறாள்? சொல்லு!" என்று வினவுகிறான் பாங்கன்.

"என்னுடன் வா! அவள் இருக்கும் ஊரைக் காட்டுகிறேன்!' என்று தலைவன் பாங்கனை அழைத்துச் செல்கிறான்.

குன்றின் சாரலையும், அதனை அடுத்துக் கழைக்கூத்தாடும் இடத்தையும், அதனை அடுத்து விளங்கும் காவற்காட்டையும் பாங்கனுக்குக் காண்பித்து, அங்கிருந்து கொண்டு தலைவி வாழும் சிற்றூரைச் சுட்டிக் காட்டுகிறான் தலைவன்.

" அதோபார்! அதுதான் என்னால் காதலிக்கப்பட்ட அப் பூங்கொடியாள் வாழும் சிற்றூர்! அவளது நறுமணங்கமழும் கூந்தலை இப்பொழுது நினைத்துக்கொண்டாலும் மணங் கமழுவதுபோல் இருக்கிறது! அதோ தெரிகிறதே, அந்த உயர்ந்த மாளிகைதான் அவள் வாழும் இடம்! என் நெஞ்சம் அவள் கையில் தான அகப்பட்டுக் கிடக்கிறது! அவளைத் தவிர வேறுயாராலும் என் நெஞ்சத்தை அவளிடமிருந்து விடுவிக்கமுடியாது! அவள்தான் இரக்கங் காட்டவேண்டும்!" என்று தலைவன் புலம்புகிறான்.

" அவளை எப்படியும் உனக்கு ஆக்குகிறேன்! நீ வருந்தாதே! ஏக்கத்தை விடு!" என்று பாங்கன் தலைவனைத் தேற்றுகிறான். இருவரும் தம் ஊருக்குப் போகிறார்கள்!

இது நற்றிணை 95 ஆம் செய்யுளின் உட்கருத்தைக் கொண்டு தீட்டப்பட்ட காதற்காட்சியாகும். இந்தச் செய்யுள் 'தலைமகன் பாங்கனுக்கு இவ்விடத்து இத்தன்மைத்தெனவுரைத்தது' என்னும் பிரிவின்பாற்பட்டக் குறிஞ்சித் திணையைச் சார்ந்ததாகும். இந்தச் செய்யுளை இயற்றியவர் கொட்டம்பலவனார் என்னும் புலவராவார். இவர் கொட்டம்பலம் என்னும் ஊரைச்சேர்ந்தவர். சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை என்று சேர அரசன் ஒருவன் குறிப்பிடப்படுவதால், கோட்டம்பலம். என்பதும் இவ்வூரைத்தான் குறிக்கும் என்று எண்ணுவதற்கு இடமேற்படுகிறது. இப்புலவரது பாடலில் 'கொட்டும்' என்னும் சொற்சிறப்பால் 'கொட்டம்பலவன்' என்று இவர் அழைக்கப்பட்டார் என்று எண்ணுவாருமுண்டு. இவர் பாடியுள்ளதாக இப்பாட்டு ஒன்றுதான் கிடைத்துள்ளது.

கழைபாடு இரங்கப் பல்லியங் கறங்க
ஆடுமகள் நடந்த கொடும்புரி நோன்கயிற்று
அதவத் தீங்கனி அன்ன செம்முகத்
துய்த்தலை மந்தி வன்பறழ் தூங்கக்
கழைக்கண் இரும்பொறை ஏறி விசைத்தெழுந்து
குறக்குறு மாக்கள் தாளங் கொட்டுமக்
குன்றகத் ததுவே கொழுமிளைச் சீறூர்
சீறூ ரோளே நாறுமயிர்க் கொடிச்சி
கொடிச்சி கையகத் ததுவேபிறர்
விடுத்தற்(கு) ஆகாது பிணித்தஎன் நெஞ்சே.

—[நற்றிணை 95]

[பொழிப்புரை: பக்கத்திலே புல்லாங்குழல் ஒலிப்பப், பலவாத்தியங்களும் முழங்க, ஆடுகின்ற கழைக்கூத்தி நடந்த முறுக்குண்ட புரியையுடைய வலிய கயிற்றின் மீது இனிய அத்திப் பழம் போன்ற சிவந்தமுகத்தையும், பஞ்சுபோன்ற தலையையுமுடைய குரங்கினது வலியகுட்டி பற்றி ஆடிக் கொண்டிருக்க, அதனைக் கண்ட குறவர்குடியின் இளஞ்சிறார்கள் பெரிய பாறையின் கண்ணுள்ள மூங்கிலின்மேல் தாவிப்பிடித்து ஏறி நின்று கையால் தாளங் கொட்டுவார்கள்; அந்தக்குன்றினிடத்து உள்ளது வளம்பொருந்திய காவற்காடு சூழ்ந்த சிற்றூர்; என்னால் காதலிக்கப்பட்ட நறுமணங்கமழும் கூந்தலையுடைய கொடிச்சி அச்சிற்றூரிலே இருப்பவளாவாள்; அவளாலே பிணிப்புண்ட என்னெஞ்சமும் அக்கொடிச்சியின் கையில் சிக்குண்டு கிடக்கின்றது; அவள் இரக்கங் கொண்டு விடுத்தாலல்லது என்நெஞ்சம் பிறரால் விடுவித்தற்கும் ஆகாது.

கழையிரங்க – புல்லாங்குழல் ஒலிப்ப; பல்லியம் – பல வாத்தியங்கள்; நோன் கயிறு; வலிய கயிறு அதவம் – அத்தி; துய் – பஞ்சு; வன்பறழ் – வலியகயிறு, தூங்க – ஆட; பொறை; –பாறை மிளை – காவற்காடு]

தலைவியைத், தான் மிகவாகக் காதலிக்கிறேன் என்று தோழனிடம் கூறவந்த தலைவன், தன் நெஞ்சத்தைத் தலைவி கையகப்படுத்திக் கொண்டுவிட்டாள் என்றும், அவளை அடைந்தால்தான் தன் ஏக்கம் தீரும் என்பதை உணர்த்த வந்ததலைவன், அவள் இரக்கங் கொண்டு விடுத்தாலல்லது தன் நெஞ்சத்தை வேறுயாராலும் அவளிடமிருந்து விடுவிக்க முடியாது என்றும் புலவர் கூறியிருப்பது மகிழத்தக்க நயப்பாடு நிறைந்ததாகும்.

கழைக்கூத்தி கயிற்றிலே நடந்து வேடிக்கைக் காட்டும் வழக்கம் அக்காலத்திலும் உண்டு என்பது இச்செய்யுளால் தெரியவருகின்றது. கழைக்கூத்து நடக்கும் போது குழலும், பலவாத்தியங்களும் ஒலிக்கும் என்பது குறிப்பிடப்படுகிறது.

கழைக்கூத்தி ஆடிவிட்டுச் சென்ற பிறகு, குரங்குக் குட்டி அந்தக் கயிற்றைப் பற்றி ஆடுவதும், இளங்குறச் சிறுவர்கள் மூங்கில்கள் மீது ஏறிக்கொண்டு அக்குரங்குக் குட்டியைப் பார்த்துக் கைகொட்டி நகைப்பதும் நகைச் சுவை மிகுந்துக் களிப்பூட்டுவனவாகும்.

குரங்குக்குட்டியின் சிவந்த முகத்திற்கு அத்திப் பழத்தையும், அதன் இளமயிர் நிறைந்த தலைக்குப் பஞ்சையும் உவமையாக்கிக் காட்டியிருப்பது பெரிதும் பாராட்டி மகிழ்வதற்குரிய தாகும்.

ஊரைச் சுற்றி மரங்கள் அடர்ந்த காவற் காட்டை வளர்ப்பது அக்கால வழக்கம் என்று தெரியவருகிறது.

சமூக ஒழுக்கம்

★

சமூகம் என்பது பல மனிதர் ஒன்றுசேர்ந்து வாழும் ஏற்பாடு. தனி மனிதர் ஒவ்வொருவரும் தனிப்பட்ட திறமையும் அறிவும் படைத்திருப்பர். சமூக வாழ்வில் இப்படித் தனி மனிதர்கள் தங்கள் உழைப்பையும் பயனையும் பரஸ்பரம் பண்ட மாற்றிக்கொண்டு அனைவரும் இன்பமடைவதுதான் நோக்கம். சமூகக்கட்டுக் கோப்பில் ஒவ்வொருவரும் தன்னைப் பிறர் நன்மைக்கும், பிறருடைய உழைப்பில் தனக்குத்தேவையான பயனையும் பெறுவதே அடிப்படை ஏற்பாடு. இந்த ஏற்பாடு வெற்றிகரமாக நடைபெறவேண்டுமானல் பிறர்பால் நம்பிக்கையும் நல்லெண்ணமும் செயல் முறையும் சகிப்புத்தன்மையும் தேவையாக இருக்கின்றன. இவற்றை வகைப்படுத்தி அனைவரும் இனிமையாக இயங்கவும் உயிர்வாழவும் செயல் புரியவும் சிந்திக்கவும் அறிவில் ஓங்கவும் மனிதன் கண்டுபிடித்த இயக்கம் தான் அரசாங்கம். தனி மனித உழைப்பையும் பயனையும் சமூகம் முழுவதிலும் விநியோகிக்கும் அரசும் குடிவகுப்பும் எந்த நாட்டில் வெற்றிகரமாக வளர்கின்றனவோ அந்த நாட்டை நாகரீகம் மிகுந்ததென்று கூறுகிறோம். இந்த நாகரீக வளர்ச்சியைக் காலத்தாலும் தூரத்தாலும் அளவிட்டுக் காட்டும் கணக்கைத் தான் சரித்திரம் என்று கருதுகிறோம்.

—ஜி. டி. நாயுடு.

நமக்குத் தோல் தரும் நன்மை என்ன?

தோலின் மென்மைக்குக் காரணம்

நமது உடல் எங்கேயாவது உராய்ந்து தோல் வழுவுண்டு போனாலும், கத்திபட்டோ அல்லது அடிபட்டோ உடலின் எந்தப் பகுதி யாவது நறுக்குண்டு போனாலும், நமது உடலின்தோல் ஏன் சற்று கடினமானதாக இருந்திருக்கக் கூடாது? என்று நமக்கு நாமே எண்ணிக் கொள்கிறோம். ஆனால் அறிவிய லறிஞர்கள் நமது உடலின் தோலை இயற்கை கடினமானதாக ஆக்காமலிருப்பது, எவ்வ ளவோ நன்மைகளுக்கு இடமளிக்கும் செய லாகும் என்று கூறி நமது எண்ணத்தை மாற்றுகிறார்கள்.

உடலை மூடி வைத்துக் காப்பாற்றும் தொழிலைமட்டும் நமது தோல் செய்யவில்லை, அது மேலும் பல முக்கிய பணிகளைக்கொண் டிருக்கிறது. நாம் அறியாமலேயே அந்தப் பணிகள் ஒழுங்காக நடைபெற்றுக்கொண் டிருக்கின்றன. தோல் கடினமாக அமைந்து விடுமேயானால், அந்தப் பணிகளெல்லாம் நடைபெறாமல் தடைபட்டுப் போய்விடும்.

நமது கைவிரலை நாம் நறுக்கிக்கொண்டோம் என்று வைத்துக்கொள்வோம். அப்பொழுது உடனே என்ன நடைபெறுகிறது என்று பார்த்தால், தோலிலுள்ள சிறிய சிறிய குரு திக் குழாய்களிலிருந்து குருதி விரைவாகப் பீறிட்டு வந்து வெட்டுக்காயம் ஏற்பட்ட இடத் தில் அழுக்கும், நோய்க் கிருமிகளும் அண் டாதவாறு அவற்றை அப்புறப்படுத்த முயலு கின்றது. பிறகு குருதிக் குழாய்கள் சுருங்கு கின்றன. அதனால் குருதி வெளிவருவது குறைக்கப்படுகின்றது. சிறுஅளவில் வெளியே வரும் குருதி கெட்டிப்பட்டு வெட்டுப்பட்ட இடத்தை அடைக்கிறது. கெட்டிப்படும் குருதி கோந்துபோல் வெட்டுக்காயத்தின் இரண்டு பக்கங்களிலும் நன்றாக ஒட்டிக் கொண்டு மெல்ல சுருங்கத் தொடங்குகிறது. அதனால் இரண்டு பக்கங்களும் மெதுவாக ஒன்றாகச் சேர்க்கப்படுகின்றன. நேரம் ஆக ஆக நூல் போன்ற தசை, பல பக்கங்களி லிருந்தும் குருதி கெட்டிப்பட்ட இடத்தை அணுகுகின்றன. நாளடைவில் வெட்டுப்பட்ட இடத்தில் புதிய தசை ஒன்று வளருகிறது. வெட்டுப்பள்ளம் அடைபட்டதற்குப் பிறகு இரண்டு பக்க விளிம்புகளிலிருந்தும் மேல் தோலின் உயிரணுக்கள் வளர ஆரம்பிக்கின் றன. நாளடைவில் அவைகள் நடுவே ஒன்றாக இணைகின்றன. பிறகு இடையே சிறு மயி ரிழை போன்ற தழும்பு காணப்படும்; சில பொழுது அதுகூடக் காணப்படாது.

இதில் நிகழ்ச்சிகளெல்லாம் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட முறையில் படிப்படியாக நிகழ்ந்தேறுகின்றன. வெட்டுக்காயம் ஏற்பட்ட வுடனே நாம் அந்த இடத்தைக் கசக்கவோ, சிதைக்கவே கூடாது என்பதை மனதில் இருத்திக் கொள்ள வேண்டும். அப்படி ஏதா வது நாம் செய்தால், முறைப்படி படிப்படியாக நிறைவேற வேண்டிய நிகழ்ச்சிகள் தடைப் பட்டு, வேண்டத் தகாத தழும்பு ஏற்பட ஏது வாகிவிடும்.

தோல் - ஒரு சாமான்கள் அறை

நமது தோல், நமது உடலுக்குத் தேவை யான முக்கிய சாமான்களைத் திரட்டி வைக்கும் சாமான்கள் அறைபோல் இருந்து வருகிறது. தோலில் அதற்காக ஏராளமான இடவசதியும் இருக்கிறது. ஒருவன் 154 பவுண்டு எடை யுள்ளவனாக இருக்கிறான் என்று வைத்துக் கொண்டால், சுமார் 28 பவுண்டு எடையுள்ள கொழுப்பையும், தண்ணீரையும் தோல்மட்டும் திரட்டித் தன் பாதுகாப்பில் வைத்திருக் கிறது. நமது உடல்தேவைக்கு மேற்பட்ட கொழுப்பையோ, தண்ணீரையோ ஏற்றுக் கொள்ள நேர்ந்துவிட்டால், அந்த மிதமிஞ்சிய அளவு தோலில்தான் திரட்டி வைக்கப்படு கிறது. பின்னால் உடலுறுப்புக்கள் அந்தப் பொருள்களை விரும்பி நிற்கும்போது, தோல், தான் பாதுகாத்து வைத்திருக்கும் அந்தப் பொருள்களைத் தேவையான அளவுக்கு அவைகளுக்குக் கொடுக்கிறது. உப்புக்கள், சர்க்கரைகள், பிற முக்கியமான பொருள்கள் ஆகியவைகள் தோலில் பாதுகாப்பாக வைக் கப்படுகின்றன.

தோல், உறுப்புக்களின் அவசரத் தேவையை ஒட்டித் தன்னிடத்திலுள்ள குருதியையும் கொடுத்துதவுகிறது. எடுத்துக் காட்டாக நாம் தெருவில் போய்க்கொண்டிருக்கும்போது திடீரென்று தாக்கப்பட்டால், தசைகளும் உறுப்புக்களும் மிகவான குருதியை எதிர்பார்க்கின்றன. வெளியே வழிந்தோடும் குருதியின் அளவைச் சரிக்கட்டவோ, அல்லது அழுக்கு நோய்க் கிருமிகள் போன்றவற்றோடு சண்டையிடவோ மிகவான குருதி தேவைப்படுகிறது. அதற்கு வேண்டிய குருதியின் ஒரு பகுதியைத் தோல் கொடுக்கிறது. தோலிலுள்ள சிறிய குருதிக் குழாய்கள் சுருங்கிப், புதிய அவசரப் பெரிய குழாய்களின் வழியாகத் தேவைப்படும் குருதியைத் தேவைப்படும் இடத்திற்கு அனுப்பி வைக்கிறது. தோலிலுள்ள குருதியெல்லாம் வேறிடத்திற்குச் சென்று விடுவதால்தான், அப்படிப்பட்ட நேரத்தில் உடல், முகம் ஆகியவை கள் வெளுத்துக் காணப்பட வேண்டி நேரிடுகிறது.

தட்ப வெப்பத்தைச் சரிப்படுத்தும் கருவி

தோலிலுள்ள குருதிக் குழாய்கள் உடலின் தட்ப வெப்பநிலையை சரியானபடி வைத்துக் காப்பாற்றிவரப் பெரிதும் உதவிசெய்கின்றன. நமது உடல் மிகவான சூட்டைப் பெறும்போது, தோலிலுள்ள குருதிக் குழாய்கள் விரிந்து, மேலும் பெருவாரியான குருதியை உள்ளிருந்து வரவழைத்துக் கொள்கின்றன. அதனால் உடல் குளிர்ச்சி பெறுகிறது. நமது உடல் மிகவான குளிரால் தாக்கப்படும்போது, தோலிலுள்ள குருதிக் குழாய்கள் சுருங்கிக், குருதியை உடலுக்குள்ளே அனுப்பிவிடுகின்றன. அதனால் உள்ளிருக்கும் சூடு காப்பாற்றப்பெற்று உடல் சூடு பெறுகிறது.

தோலிலுள்ள இனிப்புச்சுரப்பிகள் (Sweat glands) கூட உடலின் தட்டவெப்ப நிலையைச் சரிப்பத்துகின்றன. உடல் மிக்க சூட்டைப் பெறும்போது, இந்தச் சுரப்பிகள் இனிப்பை உமிழ்ந்து, அதனை ஆவியாக மாறச்செய்கின்றன. அதனால் உடல் குளிர்ச்சி பெறுகிறது.

உற்றறியும் தன்மை

ஏராளமான, விதவிதமான நரம்புகளின் முனைகள் தோலில் வந்து நிற்கின்றன. சூட்டுணர்ச்சியைக் குளிர்ச்சியுணர்ச்சியை, அழுத்துதலை, வலியை, எரிப்பைக், கிள்ளுதலை மூளையிடம் கொண்டுபோய்ச் சேர்க்கத், தனித்தனி நரம்புகள் தோலோடு பொருந்தியிருக்கின்றன. உற்றறியும் உணர்ச்சியை நமக்குப் புலப்படுத்த இந்த நரம்புகள்தாம் வேலை செய்கின்றன.

புதுப்பிக்கப்படுதல்

இப்பொழுது நாம் கொண்டிருக்கும் தோல், சென்ற ஆண்டில் நாம் கொண்டிருந்த அதே தோல்தானா? என்றால், அதுதான் இல்லை. மணிக்கு மணி தோலின் பகுதிகள் சிறிது சிறிதாகப் புதிப்பிக்கப்படுகின்றன. நாளடைவில் பழையதோல் முழுவதும் மறைந்து புதிய தோல் ஏற்பட்டுவிடுகிறது. நமது தோல் மேல்தோல், நடுத்தோல், உள்தோல் என்று மூன்று மடிப்புகளாக அமைந்திருக்கிறது. உள்தோலில்தான் தோலின் உயிரணுக்கள் (Cells) தோன்றி மேல்நோக்கி வளர்ந்து, மடிப்புக்களைப் புதுப்பித்துக்கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு தோலின் உயிரணுவும் இறக்கப், புதிய உயிரணு, அந்த இடத்தில் தோன்றுகிறது. இறந்த உயிரணு மெல்ல அகல்கின்றது. உடலில் மிகவாகப் பயன்படுத்தும் உறுப்புக்களின் தோல்தான் மிக்க கடினமாகிவிடும். காரணம் இறக்கும் உயிரணுக்கள் ஏராளமாக அவ்விடங்களில் குவிந்துகொண்டு, கடின நிலைமையை ஏற்படுத்திக்கொண்டிருக்கும். விரல் முனைகள், உள்ளங்கை, உள்ளங்கால், குதிகால் ஆகியவைகள் அக்காரணம்பற்றித்தான் கடினமாகக் காணப்படுகின்றன.

நிறத்தை மாற்றிக்கொள்ளலாம்

'மெலேனின்' (Melanin) என்று சொல்லப்படும் ஒருவகைப் பொருள்தான் தோலைக் கருப்பாக்குவதற்கு முக்கிய காரணமாக இருந்து வருகிறது. 'மெலேனின்' எவ்வளவுக்கு எவ்வளவு மிகவாகக் காணப்படுகிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு மிகவாகத் தோல் கறுப்பாகத் தோன்றும்.

தோலைக் கறுப்பாக்குவதற்கும், சிவப்பாக்குவதற்கும், வெள்ளையாக்குவதற்கும், மஞ்சளாக்குவதற்கும் இரசாயனப்பொருள்கள் இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இன்னும் சிறிதுகாலத்தில் ஒருவர் தாம் விரும்பும் நிறத்தை எளிதில் பெற வசதிகள் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நலம் காப்பாற்றும் தன்மை

உடலின் நலத்தை (சுகாதாரத்தை)க் காப்பாற்றுவதில் தோல் பெரும்பங்கு பெறு

கிறது. ஒருவித எண்ணெய்ப் பசையைத் தோலிலுள்ள ஏராளமான சுரப்பிகள் (Glands) உற்பத்தி செய்து தோலை வழவழப்பாகவும் பளபளப்பாகவும் நெய்ப்புள்ளதாகவும் ஆக்கிக் கொண்டிருக்கின்றன.

தனிச் சிறப்பு

மனிதனின் தோல் அவரவர்க்கென்றே அமைந்த தனித்தனித் தன்மை கொண்டதாகும். ஒருவரின் தோலைப்போன்றே மற்றொருவரின் தோலைக் காணமுடியாது. ஒருவரின் உள்ளங்கால்விரல்கள் தோலைப்போல் பிறிதொருவரின் தோலைக் காணமுடியாமலிருப்பதே அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

ஒருவரின் உடலின் ஒரு பகுதியிலுள்ள தோலை அவரது உடலின் வேறோர் பகுதிக்கு வேண்டுமானால் மாற்றிவைத்துத் தைத்துப் பொருத்திவிடலாம். ஆனால் ஒருவரின் தோலை மற்றொருவரின் உடலுக்கு மாற்றி வைப்பது அவ்வளவு நீண்ட நாட்களுக்குச்சரிப்பட்டு வராது. இரட்டைப் பிறப்பினராக இருப்பவர்கள்வேண்டுமானால் ஒருவருக்கொருவர் தோலைமாற்றிவைத்துத் தைத்துக்கொள்ளலாம்.

மனிதத்தோல் உற்பத்தி

தோல் உயிரணுக்களைச் (Skin Cells) சோதனைக் குழாயில்கூட தயாரித்துவிட முடியும் என்று அமெரிக்க அறிவியலறிஞர்கள் சிலர் கண்டறிந்துள்ளனர். இந்தத் தயாரிப்பு வெற்றிகரமானதாகவும், நிலையானதாகவும் ஏற்பட்டுவிடுமேயானால், மருத்துவச்சாலைகள் தோல் உயிரணுக்களை ஏராளமான அளவில் உற்பத்தி செய்யத் தொடங்கிவிடும். மனிதத் தோல் உற்பத்திச்சாலை ஏற்பட்டுவிடும். வெட்டுக்காயங்களை அடையாளம் தெரியாமல் மூடிவிட, தோல் வழுவுண்ட இடத்தில் புதிய தோலை வளர்க்க, தேவையான இடத்தில் தேவையான புதியதோலைப்பெற, பழைய தோலைப் புதிப்பிக்க இந்தப் புதிய கண்டுபிடிப்பு நன்கு பயன்படும்.

இயற்கை நமது உடல்களை எவ்வளவு வியப்புக்குரிய தன்மைகளைக்கொண்ட தோலைக் கொண்டு போர்த்திக் காப்பாற்றி வருகிறது என்று எண்ணும்போது உள்ளம் உவகை கொள்ளவே செய்கிறது!

ஒரு வக்கீல் தனது ஐந்து வயதுச் சிறுவனை அழைத்துக்கொண்டு தனது நண்பர் ஒருவரைக் காணச் சென்றிருந்தார். அங்கே, வறுத்த முந்திரிபருப்பு நிறைந்த ஒரு கண்ணாடி ஜாடி இருந்தது. அதையே கவனித்துக் கொண்டிருந்த சிறுவனைக் கண்டு அந்த நண்பர்,

"தம்பி! உன் கைநிறைய எடுத்துக்கொள்" என்று ஜாடியை நீட்டினார்.

சிறுவன் பதில் கூறவில்லை. எடுத்துக்கொள்ளவும் இல்லை.

தனது பையனின் அடக்கத்தையும் பண்பையும் கண்டு வியப்படைந்த வக்கீல், "வீட்டில் தவிர வேறு எங்கும் யார் கொடுத்தாலும் வாங்கி உண்ண மாட்டான்" என்று பெருமையாகச் சொன்னார்.

அந்த நண்பர் ஒரு காகிதத்தை எடுத்து வந்து அதில் தனது கைநிறைய முந்திரியை அள்ளி வைத்து மடித்துச் சிறுவனிடம் கொடுத்தார். சிறுவன் மகிழ்வுடன் வாங்கிக்கொண்டார்.

"ஏய்! அவர் 'எடுத்துக்கொள்' என்று சொன்னபோது ஏண்டா பேசாமல் இருந்தாய்?" என்று வக்கீல் தனது பையனை அதட்டும் பாவனையில் கேட்டார்.

"அவருடைய கை பெரியது!" என்று மட்டும் பதில் தந்து பொட்டலத்தைப் பிரித்தான் பையன்.

இதுதான் காதல்

(அருணன்)

ஏனம்மா உனக்கிந்த நிலை? எழில் நிறைந்த உன் இளமையை இவ்விதம் பாழ்செய்து கொண்டிருக்கிறாயே! உனக்கென்ன வயது முதிர்ந்துவிட்டதா இந்த வையத்துவாழ்வு வெறுத்திட? கண்டவர் கருதும் கட்டழகு, கட்டுக்குலையாத உடல் வனப்பு, இருபதை யடையாத இளம் பருவம், இவற்றுடன் ஏனம்மா கையில் குழந்தையுடன் கண்களில் நீர் தேக்கி காசுக்குக் கையேந்திக் காலங்கழிக்கிறாய்? வாழ்வில்லையா உனக்கு, அல்லது வாழ்வைத்தான் நீ வெறுக்கிறாயா, வாழ முடியாது என்ற முடிவா? என்று எவரும் கேட்கத் தோன்றும் அவளைக் கண்டால். ஆனால் அவளோ எவரேனும் இவ்விதம் கேட்டுவிடக் கூடாதென்பதிலே கண்ணும் கருத்துமாக இருந்தாள். பிச்சைதான் ஏற்று வாழ்ந்தாள். ஆனால் நச்சுப்பார்வையுடையவர்களை நாடுவதில்லை. அவர்கள் தன்னை நாடிவந்து பிச்சையிட்டாலும் அதைப் பெற்றுக்கொள்வதில்லை. விசித்திரமாக இருந்தது அவள் செயல். வேதனை நிறைந்திருந்ததாயிருந்தது அவள் வாழ்க்கை. ரயில் நிலையத்தில்தான் அவள் தன் வாழ்க்கையைக் கழித்தாள். பகலெல்லாம் தூங்கி இரவிலே தன்னைத்தானே காத்துக்கொண்டிருந்தாள். கையிலே ஓர் குழந்தை அதற்காக அவள் உயிர்வாழ்ந்தாள். அந்தக் குழந்தையின் தந்தையோ எதையும் கருதாது எங்கேயோ சுற்றிக்கொண்டிருக்கிறான். இது போன்று பலரை அபலையாக்கிக்கொண்டு.

இரண்டாவது வகுப்பில் பிரயாணப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு கிறித்தவப் பாதிரியிடம் வந்து அவள் பிச்சைகேட்டாள். அந்த வண்டியில் பாதிரியாரும் மற்றுமொரு முதியவரும் பயணப்பட்டுக் கொண்டிருந்தனர். அவள் பிச்சைக்கேட்கும்போது நான் முதியவரைக் கவனித்தேன். முதியவர் அவள் நிலைக்கு இரங்குவதும், அந்தக் குழந்தையைத் தானே வாங்கிச்சென்று வளர்த்தாலென்ன என்றெண்ணுவதுபோலவும் அவர் முகத்தோற்றமும் மாற்றமும் தெரிவித்தது. அவர் எண்ணினால் முடியும் என்பதும் எனக்குத் தோன்றிற்று. ஆனால் அதற்குள் அவள் ஓடிப்போய்விட்டாள். பெரியவர் கருத்தை உணர்ந்துகொண்டோ, அல்லது பாதிரியார் காசு தரமாட்டாரென்று கருதியோ அவள் ஓடவில்லை. காவற் காப்பாளர் (வாச்அண்டு வார்டு) வருவதைக்கண்டு ஓட்டம் பிடித்தாள். இதுபோன்ற ஏழைகளின் எதிரிகளாயிற்றே அவர்கள். திருடிச் செல்பவனும் திருட்டு மதி படைத்தவனும் திரிவதைத் தடுக்க இயலாவிட்டாலும், திக்கற்றுத் தவிக்கும் ஏழைகளை அதட்டி ஓட்டுவதில்மட்டும் அருஞ்செயல் வீரர்கள். அவர்களிலும் நல்ல மனமும இரக்கப்பண்பும் கொண்ட ஒருவர் அவளை மறுபடியும் அழைத்துக்கொண்டுவந்து பாதிரியாரிடம் அடைக்கலம் தந்தார். வந்தவரின் நடைமுறையும், பாதிரியாரிடம் அவர் காட்டும் பணிவன்பும் காண அவரும் ஒரு கிறித்தவராகவே இருக்க வேண்டுமென்று கருதினேன். அவர்கள் உரையாடிக்கொண்டிருக்கும் அந்த இடை நேரத்தில் நானும் முதியவரும் பேசிக்கொண்டோம்; இந்து மதம் இந்து மதம் என்கிறார்களே! இதோ இதுபோன்று வாழ்வற்றோரை வாழவைக்க வகையுண்டா? ஆலயமும் ஆராதனையும் அதற்கென அநேக லக்ஷங்களும் அள்ளி இறைக்கப்படுகிறது. கண்காணாத கடவுளுக்குக் கணக்கற்ற கோயில்கள் அதற்குக் கருத்தற்ற கதைப் புராணங்கள் அதற்குக் காவலெனக் கூறிக்கொண்டு காசைக் கரியாக்கும் காஷாய மூலபதிகள் இவைகளெல்லாம் இருக்கிறது. எவ்வுயிரும் ஈசனுர் உறையுங்கோயில் என்று எடுத்தியம்பப்படுகிறது. இங்கே நடமாடுங் கோயில்கள் நலங்கெட்டு நாலு பேரால் இழித்துரைக்கப்பட்டு இடிந்த இதயமும் இதமற்ற வாழ்க்கையுமாக ஏனெனக் கேட்பாரற்று அலைகின்றன. அநாதையர் விடுதி என்கின்றனர், அங்கே செல்லவும் ஆளம்பு படைத்தவர்களின் சிபார்சும் துணையும் தேவைப்படுகிறது. அநாதை ஆசிரமத்தில் அநாதைகள் செல்ல வகை கிடையாது. அநாதை என்று நிரூபிக்க வேண்டுவதற்கான அதிகார வட்டத்தினரின் அருந்துணை கொண்டோர் மட்டுமே செல்ல முடிகிறது. என்ன பரிதாபம்! என்று பேசிக் கொண்டிருக்கும்போதே அவர்கள் பேச்சைக்

கேட்க மனம் ஓடியது. அவள் கண்ணீர் உகுத்தவண்ணம் நின்றுகொண்டிருந்தாள். வந்தவன் அவள் வரலாறு கூறினன். அவன் கூறுவதை இடைமறித்து அவள் கூற லானள்.

நானோர் ஏழைக்குடியிலே பிறந்துவிட்டேன். என் தாய் தந்தையரும் பிறரிடம் ஏற்று வாழும் நிலையிலேதான் இருந்தனர் என்பதை நான் உணரா முன்னர் அவர்கள் என்னைத் தனிவிட்டு ஏகிவிட்டனர். நானும் வளர்ந்து இளமையை எய்திவிட்டேன். என் இளமை யைக் கண்டு நான் மகிழ்வில்லை. எந்தப் பெண்ணும் தன் இளமையை எண்ணிப் பெருமையும் அதனல் ஒரு ஆணவமும் கொள்வாள். நானே அஞ்சினேன். என் எதிரே காணும் பல வேறு நிகழ்ச்சிகள் என் இதயத்தை மருட்சியின் இருப்பிடமாக்கிக் கொண்டது. அதனல் எனக்குற்ற அழகைக் குறைத்துக் கொண்டேன். அழகுசெய்து கொள்வதையும் விட்டொழித்தேன். ஓரளவு அமைதியாகவே வாழ்ந்தேன். இவ்வாறு வாழ்ந்த என் அமைதியில் பெரும்புயலாக நுழைந்தான் ஒரு ஆடவன். அவன் என்னைத் தொடர்ந்து திரிந்தான். ஒருநாள் இருநாளாக மாதக்கணக்கில் அவனென்னைத் தொடர்ந் தான். அவன் எண்ணம் ஈடேறிவிட்டது. ஒருநாள் "நீயேன் என்னையே சுற்றித் திரி கிருய்" என்று கேட்டேன். "உனக்காகவே தான்" என்று கூறினன். அடுத்து அவன் பேசிய பேச்சுக்களெல்லாம் என்னை ஆனந்த சாகரத்திலாழ்த்தியது. அமிழ்ந்தேன். அதன் முடிவு அழிந்தேன் என்பதுதான். அதன் பயன் இதோ கையிலிருக்கும் கண்மணியும் இதன் பொருட்டுக் கண்கலங்கி நிற்பதுந் தான். எவரையுங் கருதாது எதேச்சையாகத் திரிந்த என்னுடன் இணைவு கொள்ள வந்தவர், பலரைக் கையேந்தி வாழும் நிலையை எனக்குப் பரிசாகத் தந்து போனர். நானும் பரிதவித்து வாழுகிறேன் என்று கூறும்போது அவள் குரல் தழதழத்தது, பக்கத்தில் நிற்பவர் அவையனைத்தும் உண்மையென்பதை ஒப்புக்கொள்வதுபோலத் தலையசைத்தார். அவள் மேலும் பேசத் தொடங்கினள். எனக்கு ஆசை அற்றுவிட வில்லை. பிக்குணி வாழ்க்கையை நான் மேற் கொள்ளவில்லை. சாவதற்கும்கூட எனக்குத் துணிவு வரவில்லை. இந்த வாழ்வு இனிக் கிறது என்பதாலல்ல. செத்தபிறகுங்கூட பெண்ணினத்தை இழித்துப்பேசுவதை இயல் பாகக்கொண்டுவிட்ட இதயமற்றார் கூட்டம் இங்கே வாழுகிறது என்பதால். என்னைப் போன்ற இளம்பெண்கள் தங்கள் நாயக ருடனே, அல்லது மனங்கொண்ட காதல னுடனே செல்லும்போது என் நிலையை எண்ணுகிறேன். அவர்கள் ஏமாந்துவிடக் கூடாதே என்று அஞ்சுகிறேன். என் ஆசைகள் பஞ்சாகப்பறந்துவிடுகிறது. எனக் குக்கூறப்பட்ட ஆசைவார்த்தைகள் அவர் களுக்கும்தானே கூறப்படும் என்றெண்ணும் போது அய்யய்யோ! அபலைகளே உங்கள் வாழ்வு இவ்வளவு அநியாயமாகவா அழிக் கழிக்கப்படவேண்டுமென்று என்னுள்ளேயே எண்ணி வருந்துகிறேன். என்னை ஆள்வா ரென வந்தவர்பால் ஆரம்பத்திலிருந்த அன்பைவிட அவருக்கு இந்தக் குழந்தை யைப் பெற்றவுடன் அவர்மீது எனக்கு அக லாத அன்பு ஏற்படுகிறது. அதுவரை ஒவ் வொரு வேளைகளிலாவது என்னை அணுகி வந்துகொண்டிருந்த அவர் நானொரு குழந்தை யின் தாயான பின்னர் என்னை அறவே மறந்துவிட்டார். எங்கோ மறைந்துகொண் டார். முன்பெல்லாம் என் தனிமையைக் கருதி என்னைத் தொடர்ந்து வந்தவர்கள் பேசக்கூடச் சற்றுத் தயங்கினர். இப்போதோ குழந்தையை இலக்காகவைத்து என்னிடம் துணிந்துபேச முற்படுகின்றனர். நான் பேசாதிருப்பதையே துணையாகக்கொண்டு தங்கள் பேச்சை வளர்க்கின்றனர். இந்த என் வாழ்க்கையைப் பலரிடம் கூறிக்கூறிப் பழக்கப்பட்டுப்போய்விட்டது. முதலில் என் மீது பரிதாபங்கொண்டு பச்சாத்தாபப்படும் சிலர் எனக்கு ஏதோ கொடுத்து அனுப்பி விட்டு "இதுவே பழக்கமாகப்போய்விட்டது சார்—இதை ஒரு வழியாக வைத்துக் காசு பறிக்கின்றனர்" என்று என்பின்னல் என் காதுகேட்கப் பேசுவதைக் கேட்கும்போது தான் என்போன்ற தமக்கை தங்கையர் மிகப் பலர் இருக்கின்றனர் என்பதையும், அவர் களையும் என்னைப்போலாக்கியவர்கள் இன்னும் உயிர்வாழ்கின்றனர் என்பதையும் உணர் கிறேன். நானுணர்ந்து என்ன பயன். அந்த ஆண்வர்க்கம் உணரப்போகிறதா? உணர்ந் தாலும் திருந்திவந்து ஏற்றுக்கொள்ளப் போகிறதா? அவ்வாறு திருந்தி வராவிட் டாலும், யாவற்றிற்கும் திருத்தியமைக்க ஏற் பட்டுள்ள சட்டதிட்டங்கள் இவர்களுக்கு ஏற் படத்தான் போகிறதா? நாங்கள் இவ்விதம் நலிவுற்று வாழ்வதுதான் தகுதி என்று ஆகிவிட்டது. என்செய்வது. என்று கூறிக் கண்ணீர்விட்டாள். அவள் வயிற்றிற் பிறந்த அந்த மாணிக்கக் குழவி தன் தாயின் கண்ணீரையும் வேதனையையும் உணராமல் தன் பசிவேதனை தாக்கப் பய்ய அழ ஆரம்

பித்தது. எது எவ்வாறாயின் என்ன! பக்கத்திலே மறைவிடத்தில் சென்று அதற்குப் பாலூட்டினாள். அந்த நேரத்தில் அவன் கூறலானான். எப்போதுமே இப்படித்தான். இங்கேயேதான் சுற்றிக்கொண்டிருக்கிறாள். எல்லோரிடமும் சென்று கேட்கும் வழக்கமும் கிடையாது, தான் கேட்பவர்களைத் தவிர மற்றவர்கள் கொடுத்தால் வாங்குவதும் கிடையாது. தன் குழந்தையை ஏற்றுக்கொள்ளும்படி ஒவ்வொருவரிடமும் கெஞ்சுகிறாள். எவரும் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். இதை நன்றாக அறிந்த காரணத்தால்தான் உங்களைக் கண்டதும் நானே அவளை அழைத்து வந்தேன். உண்மையிலேயே என் இனத்தை நான் வெறுக்கிறேன். என் செயலைக் கண்டால்கூட ஏதாவது இழிதனமாகப் பேசுவார்களேயல்லாது உண்மையை உணர ஒருபோதும் முற்படமாட்டார்கள். நான் அவர்களைப்பற்றிக் கவலைப்படவில்லை. எதற்கும் எதையும் பேசிக்கொண்டிருக்கும் எண்ணம் கெட்டவர்கள் அவர்கள். அதனால்தான் அவர்களின் சொல்லைப் பொருட்படுத்த எனக்கு மனமில்லை. அவளைக் காணும்போது அவளின் உறவை விரும்புகிறார்களேயல்லாமல் அவளின் அவலநிலைபோக்க முனைவார் எவரையுங் காணேன். அவளை இணங்க வைத்தவன் நிச்சயமாக ஆசை வார்த்தைகள் அநேகத்தை அள்ளி வீசியிருப்பான். அவளும் அவற்றை நம்பினாளென்றால் அவள் உள்ளத்தில் எத்தகைய அசைக்க முடியாத தன்மை இருந்திருக்க வேண்டும். அதைப் புரிந்துகொண்டு அவளைப் பயன்படுத்திக்கொண்ட ஆடவனிடம் எத்தனை நயவஞ்சகமிருந்திருக்க வேண்டும். இவ்வளவு தாழ்ந்த நிலையை எய்திவிட்ட பின்னும் தன் நிலையைக் கூறி அதைக் காரணங் காட்டி அதைப் போக்க வகை கேட்கிறாளே தவிர, இந்த வகைக்குத் தன்னை ஆளாக்கியவனைக் குறைகூற அவள் முற்படவில்லை. ஆனால் இவ்வாறு ஒரு ஆடவனிருப்பானேயானால், இந்நேரம் பெண் தனக்குச் செய்தவற்றைப்பற்றி மழையல்லவா பொழிந்து தீர்த்திருப்பான். அது மட்டுமல்ல, அத்தகைய பெண்ணினமென்று சொல்லிக் கண்ட கண்ட பெண்களையெல்லாம் வசைபாடித் திரிவான். அதனை ஆடவர்வர்க்கமும் தாங்களும் என்னவோ நேர்மையின் அவதாரமென எண்ணிக்கொண்டு பக்கமேளம் தட்டும். ஆனால் பெண்ணினம் எத்தகைய நிலையிலிருக்கிறது? இவள் நிலையைக் கண்டு பெண்ணினம் வெறுத்தொதுக்கும். ஆணினமும் இந்த நிலையிலே கூடத் தங்கட்கு ஆளாக்க நினைக்குமேயல்லாது ஆதரிக்க முற்படாது. எனவேதான் தங்கள் போன்றோர் ஆதரிக்க இயலும் என்ற காரணத்தால் அழைத்துவந்தேன் என்று கூறித் தன் பொறுப்பை ஒப்புக்கொடுத்துவிட்டான். பாதிரியாரும் பக்கத்துக் கம்பார்ட்மெண்டிலிருந்த, தனக்குத் துணைவருபவரிடம் குழந்தையைப் பெற்றுக்கொள்ளுமாறு தந்தனுப்பிவிட்டார். அதுவரை தன் பாரத்தை இறக்கிவிட்டதாக எண்ணிக்கொண்டிருந்த அவளுக்கு அப்போதுதான் பிரிவின் கொடுமை தாக்கியது. தேம்பித் தேம்பி அழுதாள். வண்டி புறப்பட்டுப் போய்விட்டது. அவளுக்குச் சார்ந்துபேசிய காவல் காப்பாளன் தன் கடமையை நிறைவேற்றிவிட்ட பெருமிதத்துடன் நடந்தான். தன் குழந்தையை எடுத்தேகும் புகைவண்டியையும்—தனக்கு உதவியவனையும் மாறிமாறிப் பார்த்தாள். சிறிதுசிறிதாக இருமருங்கும் அகன்றுசெல்வதாகக் கண்டாள்......

இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் எங்களுக்குள் பேச்சுத் தொடர்ந்தது. எங்களில் முதியவர் முதலில் பேச்சைத் தொடங்கி வைத்தார். "இப்படிப் பல நல்ல காரியங்களை நீங்கள் செய்கிறீர்கள்" என்று பாதிரியாரைப் பாராட்டிக் கூறலானார் முதியவர். பாதிரியாரும் அதைத் தொடர்ந்து தங்கள் மதத்தின் பணியையும் பெருமையையும் கூறலானார். முதியவருக்குத் தன்மதக்கோட்பாடுதாக்கப்படுவதைக் கேட்கப் பொறுக்கவில்லை. ஆதலின் தங்கள் மதத்தின் பெருமையையும், அதன் முழுப் பயனையும் பெறத் தகுதி பெறுவது கடினமென்றும் சப்பைக்கட்டுக் கட்டினார். அத்துடன் என் அபிப்பிராயத்தையும் கலந்துகொள்பவர்போல என் பக்கம் திரும்பிச் சற்றே புன்னகை செய்தார். அதுவரை அவர்கள் அபிப்பிராயத்தில் கலந்துகொள்ளாதிருந்த நான் இவ்வமயம் என் கருத்தை வெளியிட்டேன்.

"எவ்வளவு சிறப்பும் அரியதுமான காரியங்களைச் செய்தாலும், அது மதத்தின் அடிப்படையில் விளைவது. அத்துணை விரும்பத்தக்கதல்ல. நன்மைகள் செய்வதன் மூலம் பெரும்பகுதி தீமையைத்தான் வளர்க்கின்றார்கள். எடுத்துக் காட்டாக; தற்போது இவர்கள் பெற்றுச் சென்று வளர்க்க ஏற்பாடு செய்திருக்கும் குழந்தை இன்னும் சில ஆண்டுகளில் வளர்ந்துவிடும். அதன் வளர்ச்சிக்குப் பிறகு அதன்பணி மதப்பெருக்க ஏற்பாடுகளிலேதான் பயன்படுத்தப்படும். இவ்வாறு அவர்கள் செய்யும் ஒவ்வொரு பணியிலும் தங்கள் மதத்தைப் பரப்பவே வகை செய்

கிறார்கள். மதத்தைப் பரப்புவது அவர்களின் கடமையென அவர்கள் கருதுகிறார்கள், அதன்மூலம் மடமையைப் பெரும்பாலும் வளர்க்கிறார்கள். மதம் வளர்வதால் மடமை வளர்கிறதென்பதை எவரும் மறுக்க இயலாது. இவ்வாறு இவர்கள் நன்மை செய்வதின் பெயரால் மதம் வளர்ப்பது முற்காலத்தில் சாவதற்கென உணவிட்டு உரம்செய்து உயிர்களைத் தயார் செய்வதுபோலத்தான். தற்காலத்திலும் போர்க்காலங்களில் டார்ப்பிடோக்களின் உள்ளே ஒரு மனிதனை வைத்து அதன் வழி எதிரிகளின் படைக்கலங்களை அழிப்பது போன்ற செய்திகளைக் கேள்வியுற்றிருக்கிறோம். அதைப் போலவேதான் இவர்கள் ஒருவனை வளர்த்தும், நோய் நீக்கம் முதலியன செய்தும் ஒருவகைக் கொலைக்காரியத்திலும் மேலான மதபோதத்தைச் செய்ய அனுப்புகிறார்கள். என்னதான் தன் உடலின் ஒரு கூறான விரலாக இருந்தாலும், கண்ணுள்ளே புதைத்துக்கொள்ள ஒப்பாத நாம், இம்மதம் செய்யும் கொடுஞ் செயலையும் கேட்டையும் உணராமல் வளர வழி செய்கிறோம். மதம் என்னும் சொல்லே அழிவு என்பதின் மறுபெயராய் இருக்குமெனக் கூறினால் அதுமிகையாகாது. எந்த மதமும் அவ்வாறேதான் இருக்கிறது. காரணமென்னவெனில் மதம் முதலில் தன்னம்பிக்கையைக் கெடுத்து விடுகிறது. தன்னம்பிக்கையற்றபின் மனிதன் மிக இழிந்த நிலைகளுக்கும் தன்னை ஆட்படுத்திக் கொள்ளத் தயங்குகின்றானில்லை. ஆதலின் அவன் தன்னை இழந்து, தன்மானத்தை இழந்து, தன் கடமையை மறந்து மடமைக்கு மண்டியிடுகிறான். இது எவ்வளவு கொடுமையான செயல் என்பதை எண்ணுங்கள். இதோ இங்கே நாம கண்ட அந்த பெண்மணி ஒருவனை நம்பினாள். அவன் வார்த்தைகளில் நம்பிக்கை வைத்தாள். ஏமாற்றப்பட்டாள். குழந்தையுடன் திரிகின்ற நேரத்தில் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள எவ்வளவோ பாடுபட்டிருக்கிறாள். அந்தக் குழந்தையை நீங்கள் காப்பாற்ற ஒப்புக்கொண்டீர்கள். அவளைக் காப்பாற்ற இயலுமா உங்களால்? அல்லது அவள் போன்று ஆயிரமாயிரம் இளம்பெண்கள் வீதியிலே திரிகின்றனரே வகையற்று அவர்களுக்குத்தான் என்றாவது காப்பு ஏற்படுமா? ஆண்டவன் ரக்ஷகர் என்றும், ஆக்கல் காத்தல் அழித்தல் முதலியவற்றைச் செயற்படுத்துவோர் என்றும் கூறுகின்றார்கள். இது போன்று அநீதி நிகழ்ந்ததன் கொடுமையை உணர்ந்து மனிதர்களாகிய நீங்கள் மனம் இரங்குகிறீர்கள். இதனை யாவும்வல்ல ஆண்டவன் ஏன் தடுக்கக் கூடாது. யாவும் விதித்த விதியின்படி நடைபெறும் என்கிறார்கள். விதியின்படி நடப்பதைமட்டுமே தலையாகக் கொண்டால் விதியை விதித்துவிட்டவரைப் பின்னும் தேடிக்கொண்டிருப்பதேன்? இந்த மாதிரி எதற்கெதற்கோ எதையெதையோ சொல்லிக்கொண்டு வேறுவிதமான நிலைகளைத் தங்கள் விருப்பப்படி செய்துகொண்டு அதற்குக் கடவுள், மதம், புராணம் என்று துணை கூட்டுகின்றனர். எவ்வாறோ ஆகட்டும். இவற்றையெல்லாம் மக்கள் தெளிந்துகொள்ளும் நாள் கடிது வந்துவிடும். எதிரே, கொல்லும் நச்சுப் பாம்பு இருப்பதை உணர்ந்து, அது தன்னை நாடி வருவதையும் உணர்ந்து கொண்டவன் நிச்சயமாக அமைதியுடனிருக்க மாட்டான். அதுபோலவேதான் மதத்தின் பிடியில்பட்டுவிட்டவர்கள் என்றேனும் தங்களை விடுவித்துக் கொள்ள முயலாதிருக்க மாட்டார்கள். அந்த நாள் வரின் நிச்சயம் கொல்லரவின் குணத்திலுங் கொடிய, மதத்தின் செயல்கள் வீழ்த்தப்படும் வீழ்ந்துபடும்" என்று ஒரே மூச்சாகச் சொல்லி முடித்தேன். அதன்பிறகு மத அதிபரான பாதிரியும், மத அபிமானியான முதியவரும் என்னுடன் பேசவே முற்படவில்லை. நானும் அமைதியாகவே பயணப்பட்டுக்கொண்டிருந்தேன். மீட்டு நான் திரும்பி வரும்போது முதலில் இந்நிகழ்ச்சிகள் நிகழ்ந்த ஊரில் இறங்க நேரிட்டது. அப்போது அந்த நங்கையையும்; அவளுக்கு நலஞ்செய்த அந்த நல்ல மனிதனையும் பார்த்தேன். அவள் அப்படியே ஓரிடத்தில் ஓய்ந்து படுத்துக் கிடந்தாள். அவன் அவளை அணுகி ஏதோ கேட்டுக்கொண்டிருந்தான். அவள் அவனுக்கு நன்றிசொல்லிவிட்டு, "நான் ஏன் வாழ வேண்டும். வாழ நியதி என்ன இருக்கிறது. எனக்குத் தக்க தருணத்தில் உதவி செய்தீர்கள். யாரும் ஆதரிப்பாரற்றுத் தவிக்க இருந்த என் குழந்தையை ஒரு தக்க இடத்தில் சேர்த்துவிட்டீர்கள். உங்களை நான் என்றென்றும் மறக்கமாட்டேன்" என்றாள்.

"உன் குழந்தையை வளர்க்க ஏற்பாடு செய்தேன். அத்துடன் நீ நலிந்து மெலிந்து வீழத்தொடங்குகின்றாயே! உன்நிலை எவ்வளவு மோசமாக இருக்கிறது. குழந்தையிருந்தாலாவது அதன் பொருட்டு நீ உயிர் வாழ்வாய். இப்போது உன் அழிவின் பொருட்டு அதற்கு ஆக்கம் செய்வதுபோலல்லவா ஆய்விட்டது. நீ சாப்பிட்டு எத்தனை நாளாய் விட்டதோ! போகட்டும் இன்றாவது சாப்பிடு. இனிமுதல் நீ பட்டினியிருக்கக்கூடாது." என்று வற்புறுத்தினான்,

அவள் மௌனமாக இருந்தாள். அவன் விரைந்து சென்று உணவு வாங்கிவரச் சென்றான். அவன் சென்ற சமயத்தில் அவள் எழுந்து செல்ல ஆரம்பித்தாள். திரும்பிவந்த அவன் அவள் செல்வதைப் பார்த்து ஓடோடிச்சென்று இடைமறித்து இருக்கச்செய்து உணவு கொடுத்தான், மறுக்க முடியாமல் ஏற்றுக்கொண்டாள். அவன், இனி எங்கும் நீ செல்லக்கூடாதென்று ஆணையிட்டுவிட்டுத் தன் அலுவலை மேற்கொள்ளச் சென்றான். அவள் தனிமையில் இருக்கும் போது பேசிக்கொண்டாள் தனக்குள்.

"என்மீது இவ்வளவு அக்கரை காட்டுகிறார். பாவம். என்னால் பல கொடுஞ்சொற்களுக்கு ஆளாகப்போகிறார். எந்தவிதக் கள்ளமும் இல்லாத உள்ளத்தினர். மக்கள் மனப்பான்மையின் கொடுமை அறியாதவர். எனக்கு இரங்கும் இவருக்கு இரங்குவார் யாருமில்லையே! இந்த நிலையில் நானிருக்கிறேன் என்பதை எனக்குரியவர் உணரவில்லையே" என்று அவள் கூறிக்கொண்டிருக்கும்போதே யாரோ பின்னிருந்து பேசுவது கேட்டுத் திரும்பினாள் திகைத்தாள்.

"என் திகைக்கிறாய். எப்படியோ வந்துவிட்டானே என்று பார்க்கிறாயா! நீ நடிக்கும் நாடகம் எனக்கு நன்றாகத்தெரியும். அதைக் கண்டு சகிக்க முடியாமல்தான் சென்றேன். இப்போதாகிலும் திருந்தியிருப்பாயென நம்பி வந்தேன். உன் ஆசை நாயகனின் கூட்டுறவு இன்னமும் தொலையவில்லை. பசப்புக்காரி. இந்த எண்ணத்தின்பேரில் திரிந்துகொண்டிருப்பவள், நீ யெங்கே குடும்பம் நடத்தப் போகிறாய். கண்டது காதல் கொண்டது மோகமென்பதையே உயிர் மூச்சாகக்கொண்டிருக்கும் உன்போன்ற குடிகேடிகளை இன்னமும் இந்தப்பூமி தாங்குகிறதே"; என்று கூறுபவனைப்பார்த்து "பாவி; வந்துவிட்டாயா? எனிங்கு வந்தாய். இன்னுமா உன் கோரப் பசியும் கொடுமை விளைவும் ஓயவில்லை. போதும் உன்னால் நான்பட்ட துன்பம். கூசாமல் என்னெதிரேவந்து நின்று பேசவும் துணிந்துவிட்டாயே! உன்னைப்போன்ற இதயமற்றவனைத் தாங்கும் பூமி என்னையும் தாங்குகிறதே என்றுதான் வேதனைப்படுகிறேன். என்னைப் பசப்புக்காரி என்று நெஞ்சாறப் பொய்சொல்லுகிறாயே. நீ பசப்பிய மொழிகளையெல்லாம் உண்மையென்று நம்பி, என்றும் என்னைக் கைவிடாது காப்பாற்றுவாயென்ற கனவுகண்டு, எல்லாரிலும் நல்லவனென்று கருதி மனதைப் பறிகொடுத்து, மானத்தையும் தன்மையையுமிழந்து இந்தக்கதியுடன் இருக்கிறேனே இது ஏனென்று கேட்டுப்பார்! உன் பசப்பின் விளைவு பளிச்சென்று புலப்படும். பிறரால் தீண்டப்படாமலே தீயால்தீண்டப்பட வேண்டுமென்ற முடிவுடன் நாளொருவகையும் பொழுதொரு முறையுமாகக் காத்துவந்த பெண்மையை, தீயிலும் கொடியவனே நீ தீய்த்ததுமல்லாமல் திட்டவும் துணிகிறாயே. தினையளவேனும் எண்ணிப்பார். நீ எனக்குக் கொடுத்த வாக்குறுதிகள் உறுதிமொழிகள் ஆணைகளை அவற்றில் கோடியில் ஒரு பங்கேனும் நீ நிறைசெலுத்தியதுண்டா? 'இப்படித்தான் பெண்களை மயக்கவேண்டும்' என்பதைக் கலையாகத் தேர்ந்து போற்றிவரும் புன்மதியாளனே! ஏமாந்த பெண்கள் எவ்வகையிலாவது இதம்பெறுவது கண்டால் இவ்வாறு வந்து ஏசிப்பேசுவதென்பது உன் கலைத் தேர்ச்சியிலே மற்றொரு பகுதியா? யாவற்றையுந்தான் மறந்தாய் உனக்கென ஒரு குழந்தை இருந்ததே (என்று கூறுகையில் தொண்டை அடைக்க விம்மிக்கொண்டே) அதைக் கண்டாவது உன் கல்மனம் கரையவில்லையா? உனக்கு மனமென்ற ஒன்று இருந்தால்தானே. இருந்தால் தான் அதிலே எப்போதாவது நேர்மை பிறக்கும்; அதனால் நலம்கிடைக்குமே உன் பிறப்பிலேயே கிடையாத அந்த எண்ணம். இடையே எப்படி உதித்துவிடப் போகிறது. வையத்து வாழ்வுக்கு வழி வகுக்கும் பெரியோர்கள் உன்னைப்போல் உடனிருந்து கொல்லும் நோயினும் கொடியவனை ஒழிக்காமல் உயிருடன் உலவவிட்டிருக்கிறார்களே! பெண்களின் நிலையையும் தன்மையையும் தெரிந்துகொண்டு, அதற்குத்தக்கவாறு நடித்து அவர்கள் வாழ்வில் என்றென்றும் நீங்காப் பழியையும் நினைக்க வெட்கும் இழிவையும் இறுதியில் சாவையும் ஏற்படுத்திவைக்கும் உன்னைப்போன்றவர்கள் இருக்கும்வரை, பெண்மையின் பெருமையும் அருமையும் உயிருடனிருக்க முடியாது. இத்தகைய நீ என்னைவந்து கேள்விகேட்க வந்திருக்கிறாய். கேடுகெட்டவனே! என் வாழ்வை வெட்டவெளியாக்கியவனே! என் மானத்தைத்தட்டிப் பறித்த தருதலையே! இத்தனை காலம் எங்கே சென்றிருந்தாய்? கணமும் பிரியமாட்டேன், சாவுவரினும் சேர்ந்தே சாவோம், உன்னைப்போல் உத்தமியை உலகில் எங்கும் கண்டறியேனென்று கதையளந்தாயே கசடனே அந்த வாயா இன்றிவ்வாறு ஏசிப்பேசத் துணிந்திருக்கிறது. என் வரையில் என்ன தவறு கண்டாய்? சொல். நள்ளிரவில் என்னைத் தன்னந்தனியாக விட்டுப் பிரிந்து சென்றாயே—குடியிருக்கும்

வீட்டவரிடம் அவளென் கூத்தியாளென்று கூசாமல் கூறியிருந்தாயே—வயிற்றிலே ஐந்து மாதக் கர்ப்பிணி என்றறிந்திருந்தும் அதைக் கருதாது கள்ளத்தனமாக ஓடினாயே—'தாலி எதற்காக, மனஒற்றுமைக்கு அடையாளமும் சாட்சியும் வேண்டுமா' என்று புகன்றாயே வேத விற்பன்னனே! இவற்றையெல்லாம் கேட்டும் அனுபவித்தும் நரம்பும் சகித்துக் கொண்டும் சாகாது துடித்துக்கொண்டிருக்கும் என்னிடம் பேச உனக்கு வெட்கமில்லை. கூத்தியாளைக் காணவந்தாயா குபேரனின் பேரனே! நள்ளிரவில் பிரிந்துசென்ற தமயந்தியைக் காணவந்தாயா நளமன்னா! கர்ப்பத்தில் வளர்ந்த கண்மணிக்கு, பொன்னணியும் மெல்லுடையும் எடுத்து வந்திருக்கிறாயா செல்வச் சீமானே! தாலியணியாத தையலை மணமாலையிட்டு அதையே அவளுக்குச் சுருக்குக் கயிறாக்கித் தொங்கவிட்டு வந்தோமே செத்தாளா துடித்துக்கொண்டிருக்கிறாளா என்று சோதிக்க வந்திருக்கிறாயா? சொல். பேசு. வந்ததும் வராததுமாக வாய்க்குவந்த வசைமாரிகளை வாரி இறைத்தாயே இப்போது அள்ளி வீசு உன் அன்பின் அடையாளப் பொன்மொழிகளை. மிருகம் கூடத் தன் துணை கருவுற்றிருக்கிறதென்றால் அது கருவுயிர்க்கும்வரை அதனைப் பிரியாது சுற்றித்திரியுமே. மிருகத்தின் இனத்துக்குக் கூட உன்னை ஒப்பிட முடியாது. என்னை இவ்வாறெல்லாம் இழிவுபடுத்திக் கூறியபோது என்ன எண்ணினாய்? ஏனவ்விதம் கூறினாய்? கூத்தியென்றும் வைப்பு என்றும் கூறிவிட்டால் இயல்பிலேயே நான் நடத்தை கெட்டவளென நம்பி, யாரும் நலங்கேட்க வர மாட்டார்களெனக் கருதித் தானே கூறினாய்? அட கெடுவாய்! நீ உன்னுள்ளே இத்தனை இழிவான எண்ணத்தை அகலாதுகொண்டு திரிகின்ற அந்த வேளையிலும், உன்மீது மாறாத அன்புகொண்டு தானே இருந்தேன். உன் புன்சிரிப்புக்கு விலையில்லை என்று பூரித்திருந்தேனே! அப்போது தெரியாதே அது விஷம் நிறைந்த வெளிப்பகட்டு என்று. என் தலையை நீ வருடியபோது தணியாத காதல் மேலிட்டால் செய்யும் செயலென்றுதானே எண்ணினேன். அப்போது அறியேனே என் தலையை மண்ணில் புகுத்த நீ செய்யும் சாலவித்தை என்பதை. அள்ளித் தழுவி நீ அணைத்திட்ட போதெல்லாம் 'கொள்ளை இன்பத்தின் கோடி இது' என்று உள்ளத்துள் எண்ணி உவகையுற்றிருந்தேனே உன் 'கள்ளத்தனத்தின் கடைகோடிப் பகுதி இது இன்னும் எண்ணத் தொலையாத எத்தல் முறை மீதியுண்டு' என்று எள்ளத்தனையளவும் எண்ணமிட்டறியேனே! இரவில் நீ என்னைவிட்டுச் செல்கின்றபோதும், வெளிச்சென்று மீண்டு வருவாரென எண்ணித் தானே வழி பார்த்திருந்தேன். என் வாழ்வின் வழியடைக்கச் செல்கின்றாயென்னும் வகையுணர மறந்தேனே. பிள்ளையை நான் பெற்றெடுக்க நேருகையில் இதற்கு 'அப்பன் யார் அவனெங்கே' என்று கேட்கின்றபோது உன் பெயரைச் சொல்லத் தவித்தேனே. அப்போதும் இன்றைக்கு வருவாய் நாளைக்கு வந்திடுவாய் செய்தி யறிந்தால் சீக்கிரமே ஓடி வந்து, நம்மை மகிழ்விக்க வந்துதித்த தெள்ளமுதைப் பிள்ளைப் பாசத்தால் கொஞ்சிக் குலவிடுவாய் என்றெண்ணி, எல்லைக்கோடில்லாத கனவுலகில் திரிந்தேனே அதையெல்லாம் சொல்லெனும் சுத்தியலால், ஆத்திரத்தின் வாள் வீச்சால் அநியாய வசையம்பால் அடித்து நொருக்கியும், வெட்டி வீழ்த்தியும், குத்தித் துளைத்தும் அணுவணுவாகச் சிதைத்தெரிய வந்தவனே இன்றுமேன் நின்று கொண்டிருக்கிறாய். இனியும் உன் சொல்லுக்கு இணங்கமாட்டேன். இரங்கமாட்டேன். அஞ்சவும் மாட்டேன். உன்னால் அறியாதனவெல்லாம் அறிந்துகொண்டேன். இனி நான் சாவை எதிர்பார்த்திருக்கிறேன். அதை நீ தருவதானால் வேறொன்றும் பேசாதே இப்போதே கொடுத்துவிடு. தாமதிக்காதே! காதல் காதலென்று பெருமைப்பட்டுப் பேசிக் கொள்வோர்கள் உணரட்டும். உன் ஆத்திரம் அடங்கட்டும் அதற்காக என்னை இழிவுபடுத்தாதே. அந்த மாசில்லாத மனிதரை மாசுபடுத்திப் பேசாதே!'' என்று கூறி வாய்மூடுமுன் ஓங்கி மிதித்துவிட்டான். இயல்பாகவே குறைந்து குற்றுயிராய், போகப் பயணப்பட்டுக்கொண்டிருக்கும் அவள் உயிர் போய்விட்டது. போகின்ற சமயத்திலும் நான் அங்கு நிற்பதைக்கண்டாள். அன்று பாதிரியாருடன் நானிருந்ததை அறிந்திருந்த அவள் என்னைத் தூண்டிக்காட்டி நிகழ்ந்தவற்றைச் சுருக்கமாகக் கூறினாள். அனுவலிலிருந்து மீட்டுவந்த அந்த நல்லவன் அவள் நிலையையும், அவள் நிலைக்குக் காரணமான அவள் காதலனையும் என்னையும் பார்த்து நிலைமையைப் புரிந்துகொண்டு, அவன்மீது ஆத்திரங்கொண்டு தாக்க முற்பட்டான். அவனைத் தடுத்து; அவரை ஒன்றும் செய்யாதீர்கள் விட்டுவிடுங்கள்; அவர் இயல்பு அது என்பதைக் காட்டிவிட்டார் இதுதான் காதல் என்பதை நானும் உணர்ந்துகொண்டேன்' என்று கூறிக் கீழேசாய்ந்து இவ்வுலக விடுதலையை பெற்று விட்டாள். என் வாயும் முணுமுணுத்தது 'இதுதான் காதல்' என்று.

அறிவியல் கட்டுரை

பொறியியல் பீரங்கி

(புகழேந்திக் கரிகாலன்)

போர்க்கருவிகளுள் பொறியியல் பீரங்கியும் (Machine Gun) ஒன்று. இது, போர்க்காலங்களில் எளியமுறைக்கேற்ப இயங்கிக், குண்டுகளைப் பொழியும். இதனை அறிவியலார் பொறியியல் பீரங்கி (Machine Gun) என்பர். இராணுவத் தலைவரும், படை வீரர்களும் எல். எம். ஜி. (L. M. G.) என்று சுருக்கமாக - அழைப்பர்.

பொறியியல் பீரங்கி, இயங்குவதில் இருவகை ஆற்றல் பொருந்தியது. ஒன்று இயங்கிப பொழியும் (Automatic - இயங்குதினைப் பொழிவு) ஆற்றலாம. மற்றொன்று நின்று பொழியும் ஆற்றலாம். இவ்விருவகை ஆற்றலும் காலம், நிலை ஆகியவற்றிக்கேற்பப் பயன்படுத்த உதவும் நிலையின என்பர்.

இயக்குதினைப் பொழிவு என்பது குண்டுகளைப் பொழிந்துகொண்டே இருக்கும் தன்மை வாய்ந்ததாகும். ஒரு நாழிகைக்குள் 25 குண்டுகள்வரை பொழியும் தன்மையும், விரைவும் உடையது. எனவே, இயங்குதினைப் பொழிவு நிலையில் பொறியியல் பீரங்கியை இயக்க வேண்டுமாயின், காலம் நிலைக்கேற்ப இணைந்து அமைய வேண்டும். குறிப்பாக, வீரன் ஒருவன் பொறியியல் பீரங்கியுடன் மடுவில் மறைந்து இருக்கிறான். அவன் பகைவர் செல்லும் வழி நோக்கியே பொறியியல் பீரங்கியையும் வைத்து, கவனத்துடன் படுத்து இருக்கிறான். அந்நிலையில் அவன் தனியாகவே இருப்பதால், பகைவர் வரும் காலத்தை நோக்குகிறான். அவன் கருதியபடி 'பகைவர் குறைவாக வராமல், ஐம்பதுக்கு மேற்பட்டவரே வருகின்றனர். பகைவரின் திரட்சியைக் கண்ட உடனே, அவ்வீரன் பொறியியல் பீரங்கியைப் பயன்படுத்துகிறான். இயங்குதினைப் பொழிவு நிலையில் பீரங்கி இயக்கப் படுகின்றது. குண்டுகள் விரைத்து பொழிகின்றன. பகைவர் நிலைகுலைகின்றனர். பொழியும் குண்டுகளை விலக்க இயலாமல் பகைவர் வீழ்ந்து மடிகின்றனர். காலம் அறியாது புகுந்த பகைவரை, நிலை உணர்ந்து காத்திருந்த வீரன் எளிமையில் அழித்து வெற்றி காணுவான். இயங்குதினைப் பொழிவு நிலையில் பொறியியல் பீரங்கியைப் பயன்படுத்தும் காலம் இதுவே.

நின்று இயங்கும் பொழிவு என்பது ஒவ்வொரு குண்டாகப் பொழியும் தன்மை வாய்ந்தது. விரைவு குறைந்தது. இயங்குதினைப் பொழிவு நிலையில் வெடிக்கும் மூன்று குண்டுகளின் காலமே, நின்று இயங்கும் பொழுவு நிலையில் வெடிக்கும் குண்டு ஒன்றின் நாழிகை. நின்று இயங்கும் பொழிவு நிலையில் பொறியியல் பீரங்கியை இயக்க வேண்டுமாயின், காலமும், நிலையும் எவ்வாராயினும் கவலை கொள்ள வேண்டிய வரையறை எதுவுமில்லை. ஆயினும் நின்று இயங்கும் பொழிவு நிலைக்கு ஒரு வரையறை உண்டு. குறிப்பாக, வீரன் ஒருவன் பொறியியல் பீரங்கியுடன் மறைவான இடத்தில் பதுங்கியிருக்கிறான். அவன் மனம் பகைவர் திரட்சியாக வருவாரோ? என்று ஐயுற்றுக் கொண்டே இருக்கிறது. அவன் எண்ணியபடி பகைவர் திரண்டு வராமல், ஒன்பதின்மரே வருகின்றனர். உடனே அவன் இயங்குதினைப் பொழிவு நிலையில் பீரங்கியைப் பயன் படுத்த விரும்பான். இராணுவச் சட்டமும் இதையே வலியுறுத்துவதால் அவன் ஒன்பதின்மரை அழிக்க, நின்று இயங்கும் பொழிவு நிலையிலேயே பீரங்கியை இயக்குகிறான். போர்களம் புகுந்த அவன் உறுப்பும் உள்ளமும் இந்நிலையையே விரும்புகின்றன. வீர உணர்வுகூட ஒன்பதின்மரை அழிக்க, நின்று இயங்கும் பொழிவு நிலையிலேயே பீரங்கியை இயங்க விழைகின்றது. இவ்வாறு, பொழியும் குண்டுகள் ஒன்பது உறுப்புகளை அழிக்க ஒன்பது குண்டுகளேயாகும். நின்று இயங்கும் பொழிவு நிலையில் பீரங்கியை இயக்க இதுவே ஒரு வரையறையாம்.

இயக்குதினைப் பொழிவின் விரைவும், நின்று இயங்கும் பொழிவின் மென்மையும் ஆற்றலைப் பொறுத்து விளங்குவது போன்று; பொழிவின் நிலைகளை அந்தந்த ஆற்றலுக்கு உட்

படுத்தி இயக்குவது தாழ் என்ற கருவியைப் பொறுத்தே இருக்கின்றது. இது வலப்புறத்தில் பொருத்தப்பட்டிருக்கும். இயக்குதிணைப் பொழிவைA என்ற எழுத்தும், நின்று இயங்கும் பொழிவை S என்ற எழுத்தும் குறிக்கும். இவைகளில் எது பயன்பட வேண்டுமோ, அதற்கு நேராகத்தாழ் கருவியைத் தள்ளி வைக்கவேண்டும். தாழ் எவ் வெழுத்தில் நிறுத்தப் பட்டிருக்கின்றதோ, அவ்வெழுத்து ஆற்றலுக்கேற்ப குண்டுகளைப் பொழியும். இயங்குதிணைப் பொழிவு நிலையையும், நின்று இயங்கும் பொழிவின் நிலையையும் விடுத்து வெறுங்கோட்டில் தாழைதள்ளி நிறுத்துவோமாயின், பொறியியல் பீரங்கி குண்டுகளைப் பொழியாது. எனவே பொறியியல் பீரங்கிக்கு இத் தாழ் என்ற கருவியே இயக்கவும், நிறுத்தவும் பயன்படும் சிறந்த கருவியாம்.

பொறியியல் பீரங்கியின் இருவகை ஆற்றல் பொருந்திய பொழிவின் நிலைகளையும், அவைகளை இயங்கி நிறுத்தும் திறன் வாய்ந்த தாழ் கருவியையும் முன்பு கண்டோம். பொறியியல் பீரங்கியை இயக்கத் துணியும் ஒருவர் முற் கூறிய மூன்று நுட்ப வேலைகளை அறிவது முக்கியமாகையால், அவைகளின் ஆற்றல், தன்மை, விரைவு, மென்மை முதலான வற்றின் நிலைகளை ஆய்ந்து, ஆய்ந்து அறியவேண்டும். இவ்வாறு அறிந்து கொள்வது, பகைவரிட மிருந்து தன்னைக் காத்துக் கொள்ளக் கற்றுக் கொள்வதாகும்.

குண்டுகளைச் செலுத்துவதற்கு ஓர் இடம் உண்டு. இதனை மருந்துக் கிடங்கு என்பர். இது, பொறியியல் பிரங்கியில் பொருத்தப் பட்ட உறுப்பன்று. மருந்துக் கிடங்கிற்கும், பொறியியல் பீரங்கிக்கும் எப்பொழுதும் ஒட்டும் நிலை ஏற்படாது. பீரங்கியை இயக்க விழையும்போதுதான் மருந்துக் கிடங்கைப் பொருத்தவேண்டிய நிலை ஏற்படும். ஆகவே, மருந்துக் கிடங்கைத் தனிக்கருவி என்றே கொள்ள வேண்டும்.

மருந்துக் கிடங்கிற்குள் எஃகு விசை அமைந்திருக்கிறது. இதனைக்கிடங்கின் எஃகு விசை என்றழைப்பர். குண்டுகளை உள்ளே ஒவ்வொன்றாகச் செலுத்துவோமாயின், எஃகு விசை இளகித் தரும். 30 குண்டுகள்வரை அதற்குள் செலுத்தலாம். அவ்வாறு நிறையச் செலுத்துவது, சில வேளைகளில் துன்பத்தைத் தருமாகையால், இரண்டு குண்டுகளைக் குறைத்து 28 குண்டுகளையே மருந்துக் கிடங்கிற்குள் செலுத்த வேண்டும். 30 குண்டுகள் செலுத்தப்பட்டதும், உள்ளே இருக்கும் எஃகு விசை முறிந்தாலும் முறியக் கூடும். இவ்வாறு விசை முறிந்துவிடுமாயின், குண்டுகள் வெளி வரா. பீரங்கியில்பொருத்தி இயக்கினாலும் குண்டுகள் வெளிப்படா. பகைவர் நம்மை எளிமையில் அழித்துவிடுவர். எனவே, 28 குண்டுகள் கிடங்கிற்குள் இருக்குமாயின், அவைகளை ஒவ்வொன்றாகத் தள்ளி வெளிப் படுத்தும் விசையைப் பற்றிக் கவலை இல்லாமல் பகைவரை எதிர்க்கலாம்.

ஒருவர் பொறியியல் பீரங்கியை இயக்க வேண்டுமாயின், அவர் முக்கியமாக உணர வேண்டியவை மூன்று குற்றங்களாகும். இம் மூன்று குற்றங்கள் நிகழாதிருக்க அறிந்த பின்னரே ஒருவர் பொறியியல் பீரங்கியைப் பயன்படுத்தத் துணிய வேண்டும் (1) குண்டு மருந்துகள் அழுக்கின்றி இருக்கவேண்டும். (2) குண்டு மருந்துகளை, மருந்துக்கிடங்கிற்குள் செலுத்தும் பொழுது, ஒன்றன்பின் ஒன்றாகச் செலுத்த வேண்டும். (3) வாயு நிலை நின்று விடுமாயின், அதனை ஒருபடி உயர்த்தி வைக்க வேண்டும். இம் மூன்று குற்றங்கள் நிகழாதிருக்கப்பாதுகாத்துக்கொண்டால் தன்னை காத்துக் கொள்ள முயன்றதுபோலாகும்.

வாயு நிலை என்பது குழாயின் முகப்புக் கருகில், பொறியியல் பீரங்கியின் முற்காலி ஒன்றில் பொருத்தப்பட்டு விளங்கும் ஒரு சிறுவட்டமாம். இவ் வட்டம் வாயு புகைக்கு நிலையிடம். குழாயின் கீழ்காலைப் போல்அமைந்துள்ள குழாய்ப்பொருளில் வாயுப்புகை உலவிக் கொண்டிருக்கும். பீரங்கி இயக்கப்படுமாயின், அப்பொழுதுதான் வாயுப்புகை குழாய்ப்பொருளில் அலைந்து கொண்டிருக்கும். இதன் அலைவுக்கு ஓர் அளவு உண்டு வாயு நிலையான வட்டத்தில் நான்கு படிகள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் சிறிது, சிறிது உயர்ந்து பெரிதாக இருப்பதால், முதலாய படியில் இயங்கும் பொறியியல் பீரங்கி 32 குண்டுகளுக்குப் பின் நின்று விடுமாயின், உடனே வாயு நிலை வட்டத்தின் இரண்டாவது படியில் முதல் படியின் இடத்திற்குத் திருப்பிவைக்கவேண்டும். இவ்வாறு திருப்பிவைத்துவிட்டால் வாயுப்புகையின் வேகம் ஒரு படி உயர்ந்துவிடும். பிறகு பீரங்கி இயங்கும். இவ்வாறு நான்கு படிகளுக்கும் ஓரளவு உயர்ந்து இருக்கும் வேகத்தை அறிந்த ஒருவர், போர்க்காலங்களில் வாயு நிலையின் வட்டத்தைத் திருப்பிவைக்க முயலும் போது, உடலை மேலெடுக்காமல் படுத்து நகர்ந்தவாறே இவ்வேலையைச் செய்யவேண்டும். உடல் மேலேயெழுந்தால் பகைவர் தாக்குவர் என்பதால், இராணுவ முறையில் இதனைப் போர் வீரர்கள் செய்தே ஆகவேண்டும்.

சின்னஞ்சிறிய கதை

நோயைப் போக்கிய வாள்

★

ஒரு நாட்டில், அரசனுக்கு வரியாகக் குடிமக்கள் தலைக்கு ஒரு படி நெல் அளக்கவேண்டுமென்றிருந்தது. குடிமக்கள் அதன்படி நெல்லைச் செலுத்தியபோதிலும், அது அரண்மனைக் காவல் கூடத்துக்கு வருவதற்குள் பல அதிகாரிகள் வழியாக வந்ததால்,குடிகளின் வரி முழுவதும் வந்து சேர்வதில்லை. அரசனுக்கு குடிமக்களிடம் நம்பிக்கையிருந்தது. வந்து சேர்வது குறைவானது என்பதும் தெரிந்தது. வரி வசூலிக்கும் அதிகாரிகள் நாளுக்கு நாள் செல்வந்தர்களாகிக் கொண்டிருந்தார்கள். சேரவேண்டிய வரி எவ்வளவு என்று கணக்கிட்டுவிட்டால், எவ்வளவு தடைப்படுகிறது எங்குபோகிறது என்பதைக் கண்டுபிடித்துவிடலாம். அதற்கு மக்கள் தொகை எவ்வளவு என்பதைக் காணவேண்டும். நேரடியாகக் கேட்டால், ஊருக்கு ஊர் மக்கள் எண்ணிக்கைக் கிடைக்காது. அதற்காக அரசன் ஒரு வழி செய்தான்.

ஒருநாள் அரச அவையைக்கூட்டி, அரசன் பின்வருமாறு கூறினான்: "நேற்று என் கனவில் கடவுள் தோன்றி, ஒரு எச்சரிக்கை விடுத்தார். இந்தநாட்டு மக்களையெல்லாம் ஒரு பெரிய நோய் பீடித்திருக்கிறது என்றார்!"

குடிமக்கள் நடுங்கினார்கள். கடவுளின் சாபமென்றால் நடுங்கக் கூடியதுதானே !

"பீடித்திருக்கிற நோயைத் தீர்க்க, ஒரு வழியைக் கடவுள் என்னிடம் சொன்னார், ஒவ்வொரு ஊரிலும் உள்ள ஒவ்வொருவரும், ஒவ்வொரு ஊசியை அனுப்பவேண்டும். பெரியவர், சிறியவர், ஆண், பெண், குழந்தை எவரையும் விட்டுவிடாமல், குடும்பத்தலைவன் ஊசிகள் அனுப்பவேண்டும். இந்த ஆட்சிக்குட்பட்ட எல்லா ஊர்களிலிருந்தும் ஊசிகள் வந்ததும், அவற்றையெல்லாம் உருக்கி ஒரு வாள் செய்யப்போகிறேன். அந்த வாள் கொண்டு நோயைப் போக்கிவிடலாம். எந்தக் குடும்பமாவது, எந்த ஊராவது தவறான அளவு ஊசிகளை அனுப்பியிருந்தால், அந்த குடும்பமும், ஊரும் நோயால் வருந்த வேண்டியிருக்கும். தெய்வீக வாள் அவர்களுக்குப் பயன்படாதுபோகும் இது எச்சரிக்கை!" என்று சொல்லி, அரசன் அவையைக் கலைத்தான்.

எல்லாக் குடும்பத்தினரும் தங்கள் தங்கள் எண்ணிக்கை யளவு ஊசிகள் அனுப்பினார்கள். ஊராரும் தெய்வீகவாள் தங்கள் ஊரிலிருக்கும் நோயைப் போக்கப் பயன்பட வேண்டுமென்று மிகுந்த முயற்சியுடன் சரியான எண்ணிக்கை ஊசிகளை அனுப்பினார்கள்.

ஊசிகளெல்லாம் அரண்மனைக்கு வந்ததும், ஊசிகளின் எண்ணிக்கையிலிருந்து ஒவ்வொரு ஊரிலிருக்கும் குடிமக்களின் எண்ணிக்கையும் செலுத்தியிருக்கவேண்டிய வரியும் அரசனுக்குத் தெரிந்தன. களஞ்சியத் தலைவனைக் கூப்பிட்டு, வரிவந்த கணக்கை எடுத்து, அரசன் கவனித்தான். எங்கெந்த ஊரில் வரிஅதிகாரிகள் மோசம் செய்துள்ளார்கள் என்பது தெரிந்துவிட்டது.

பொறியியல் பீரங்கியை ஒருவர் எடுத்துச் செல்கின்றார். பகைவர் வருகின்றனர். உடனே பீரங்கியை அவர்களை நோக்கி வைத்து விட்டுத் தானும் அதனைப் பற்றிக் கொண்டு பதுங்குகிறார். அவர் பீரங்கியை இயக்க வேண்டுமாயின் அவரின் வலக்கரம் சிறிய கட்டையில் இருக்கவேண்டும். இடக்கரம் தாழ் எந்தப்பொழிவில் இருக்கிறது என்பதை அறிந்தவுடன் அதனை வெறுங்கோட்டில் தள்ளி வைக்க வேண்டும். பிறகு இதே இடக்கரம் தோளுக்கு உயர்த்தும் மற்றொரு சிறிய கட்டையைப்பிடிக்க வேண்டும். உடனே வலக்கரம் மருந்துக் கிடங்கு மூடியைத்தட்டித் திறக்கவேண்டும். குண்டுகள் நிறைந்த கிடங்கை அதில் இணைக்க வேண்டும். உட்கருவி விரலை ஒருமுறை இழுத்து, துவக்கி வைக்கவேண்டும். குறி பார்க்கும் கருவியைச் சரி செய்து கொண்டு, தாழ் கருவியைப்பொழிவின் நிலைகளில் தள்ளி வைத்துவிட்டுப் பீரங்கியை இயக்கவேண்டும். இவையே ஒருவர் பொறியியல் பீரங்கியை அறிந்துகொண்டு செய்யும் முக்கிய வேலைகள் ஆகும்.

அரசன் மறுபடியும் அவையைக் கூட்டி, உருக்கிச் செய்யப்பட்ட வாளைக் காட்டினான். தங்கள் ஊரிலிருக்கும் நோயைப் போக்க முதன் முதல் தங்கள் ஊருக்குத்தான் "தெய்வீக" வாளை அனுப்பவேண்டுமென்று ஒவ்வொரு ஊர்க்காரர்களும் போட்டுவிட்டு வேண்டிக் கொண்டார்கள்.

அரசன் அவர்களை அமைதிப்படுத்தி "மக்களே! இந்த வாளை எடுத்துக்கொண்டு, ஒவ்வொரு ஊராக வரவேண்டிய அவசியமில்லை. உங்கள் ஊருக்குற்ற நோய்களை இந்தத் தெய்வீகவாளின் மகிமையால் இங்கு வரவழைத்து விட்டேன்!" என்று சொன்னான்.

நோயை நேரில் வரவழைப்பதா? மக்கள் ஆச்சரியமுற்றார்கள்.

சரியான வரியை வசூலித்து, அரசனிடம் செலுத்தும்பொழுது மோசடிசெய்த அதிகாரிகளின் பெயர்களை அரசன் படிக்கச்சொன்னான். போர் வீரர்கள் மோசடி செய்தவர்களை முன்னால் தள்ளி நிறுத்தினார்கள்.

அரசன் அந்த அதிகாரிகளை மக்களுக்குக் காட்டி "இவர்கள்தாம் அந்த நோய்நொடிகள்!" என்றான்.

மக்களின் ஆச்சரியம் அதிகமானது. வரி வசூலிக்கும் அதிகாரிகள் நோய்நொடியின்றி, நல்ல உடல் நலத்துடன் இருந்தார்கள்.

மன்னன் தனது கூற்றை மேற்கொண்டு விளங்கவைத்தான்.

"இவர்களெல்லோரும் என்னையும் இ நாட்டு அரசாங்கத்தையும் மோசடி செய்தா கள். வசூலிக்கும் வரியை நேர்மையா செலுத்துவதில்லை. இத்தகைய மோசடி காரர்கள்தாம் உங்கள் ஊர்களுக்குற்ற நோ நொடிகள்! கனவு கண்டதாகவும் கடவு சொன்னதாகவும் நான் சொல்லியவை க பனையே! உங்களுக்குற்ற நோய் நொடிக அந்த ஊசிகள் நீக்கும் என்று சொன்னே அது உண்மை! நாட்டுக்கும் அரசனுக்கு கேடு சூழ்பவர்கள் யார் என்பதை ஊ களின் எண்ணிக்கைக் காட்டிக் கொடுத் விட்டது! இதுவரை வசூலிக்கப்படும் வ முழுவதும் அரசாங்கத்துக்குக் கிடைக்கா லிருந்தது. போதிய பொருளில்லாததா நாட்டின் நலிவைப் போக்க முடியவில்லை இனிமேல் மிகுந்த அளவில் வரி அரசாங்க துக்குக் கிடைக்கும். அதைக்கொண்டு நாட் மக்களுக்குற்ற நோய் நொடிகளும் போக் லாம்? என்று கூறினான்.

நாட்டுக்கு மோசம் செய்த நயவஞ்சகர்க சிறைக்கு அனுப்பப்பட்டனர். மக்களுக்குற் துன்பங்கள் களையப்பட்டன.

நாட்டிற்கு நோய் போன்று இருந்த மோச காரர்களைக் கண்டுபிடிக்க அரசன் செ முறையை மக்கள் போற்றினார்கள். சூத காரர்களை வெளிப்படுத்த உதவியாயிரு வாளை அரசன் தன் நீதி மன்றத்தில் தொங் விட்டான். மற்றவர்களுக்கு ஒரு எச்சரிக்கை யாக இருக்கட்டுமென்று.

தாயின் கடன்

பிறர் கண்ணுக்குக் கவர்ச்சிகரமாய் விளங்குவதாகச் சிறுவயதிலிருந்தே குழந்தை நினைக்கும்படி பெற்றோர்கள் நடந்துகொள்ளவேண்டும். தன்னைக் கண்டால் மற்றவர்களுக்குப் பிடிக்கிறது என்ற எண்ணமே குழந்தையின் மனதுக்கு நல்ல தெம்பையும் சந்தோஷத்தையும் அளிக்கும். தன்னைப் பிறர்விரும்புகிறார்கள் மதிக்கிறார்கள் என்ற நிச்சயம் ஏற்பட்டால்தான் தன்மதிப்பும் உண்டாகும். இதற்குப் பெற்றோர் உதவி செய்ய முடியும். சிறுவயதிலிருந்தே தன்னைப்பற்றித் திருப்தியோடும் மதிப்போடும் குழந்தை வளரும். இப்படிச்செய்வது, அதற்குப் பெரிய நன்மையை உண்டாக்கும். தன்னைப் பற்றிக் குறைவாக நினைக்கும் குழந்தைக்கு பிறர் என்ன நினைக்கிறார்களோ என்ற கவலையிலேயே நேரம், தெம்பு இரண்டும் வீணாகி விடும். அவ்விதம் தாழ்ந்த மனப்பான்மை இல்லாத குழந்தைதான் தன்னைப் பற்றிக் கவலை இல்லாமல் இருக்கும்.

—பாஸ்டர், கான்ஸ்டன்ஸ், (பேரெண்ட்ஸ் மகஸின்)

வினாவும் விளக்கமும்

வினா: பெரியார் பிறந்த நாள் விழாவைத் தி. மு. கழகத்தினர் ஏன் கொண்டாடுவதில்லை?

விளக்கம்: பெரியார் பிறந்த நாளைத் தி. மு. கழகத்தார் கொண்டாடவில்லை என்று யார் தான் துணிந்து கூற முடியும்? அப்படிக் கூறுபவர்கள் இருக்கிறார்கள் என்றால் அவர்கள் ஏதும் அறியாதவர்களே!

பெரியார் பிறந்த அதே நாள்தான் திராவிட முன்னேற்றக் கழகம் பிறந்த நாளும் ஆகும். அதுதான் செப்டெம்பர் திங்கள் 17-ஆம் நாள். ஆண்டுதோறும் இந்த நாளை மிகச் சீரும் சிறப்பும் பொருந்த 'திராவிட நாடு விடுதலை நாளாக'த் தி. மு. கழகத்தார்கொண்டாடி வருகிறார்கள். தி. மு. கழகத்தார் எந்த இலட்சியத்தின் அடிப்படையில் பெரியார் அவர்களோடு ஒரு காலத்தில் ஒன்றியிருந்தார்களோ, அந்த இலட்சியமாகிய திராவிட நாடு விடுதலையைக் குறிக்கோளாகக்கொண்டு, பெரியார் பிறந்த செப்டெம்பர் 17-ஆம் நாளைச் சீரிய முறையில் கொண்டாடி வருகிறார்கள். பெரியார் பிறந்த நாளை இதைவிடச் சிறப்பாகக் கொண்டாடுவதற்கு வேறு வழி இல்லையே!

பெரியார் பிறந்த நாளிலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவிக்க வேண்டும் என்று விரும்பி, அதற்கான முறையில் 1949 செப்டம்பர் 17 ஆம் நாள் துவக்க விழாவை ஏற்பாடுசெய்த தி. மு. கழகத்தார், பெரியார் பிறந்த நாளிடத்து எவ்வளவு பற்றும், மகிழ்ச்சியும் கொண்டிருக்கிறார்கள் என்பதை எவரும் நன்கு உணர்ந்துகொள்ளலாம்.

பெரியாரிடத்துக் காணப்படும் வேண்டத்தகாத பண்புகளையும், செயல்களையும் விலக்கி ஒதுக்கிவைத்துவிட்டு, அவரிடம் காணப்படும் ஒரு சில நற்பண்புகளையும், நற்றொண்டுகளையும் செப்டம்பர் 17ஆம் நாளன்று தி. மு. கழகத்தார் நினைவுபடுத்திக்கொண்டு, அவற்றைப்போற்றிப் பாராட்டி மகிழ்ச்சியடையவே செய்கிறார்கள். "திருமணம் என்ற பெயரால் செய்யப்பட்ட ஏற்பாட்டிற்கு முன் நிலவிவந்த பெரியாரைப் பற்றி நினைந்து, அவருடைய சிலபல சீரிய செயல்களை நினைவுக்குக்கொண்டு வந்து உவகையடையவே செய்கிறார்கள். போற்றுதற்குரிய ஒருசில பொதுத்தொண்டிற்கான பண்புகளை முன்னைய நாட்களைப் போல் கொண்டு அவர் நெடிதுகாலம் வாழ வேண்டும் என்றுதான் தி. மு. கழகத்தார் கருதுகிறார்கள்.

பெரியாரின் பிறந்தநாளை மிகச் சீரிய முறையில் கொண்டாடுபவர்கள் யாரேனுமுண்டென்றால், அவர்கள் தி. மு. கழகத்தார்கள்தாம்.

வினா: பெரியார் அவர்கள் கூட்டந்தோறும் கண்ட கண்டபடி எல்லாம் தி. மு. கழகத்தாரை ஏசிவருகிறாரே அதுபற்றிய கருத்து என்ன?

விளக்கம்: பெரியார் அவர்களுக்கு வயது ஆகிவிட்டது. முடியாமையும், மறதியும் அவரை நலிவுபடுத்திக்கொண்டு வருகின்றன. பெரியார் அவர்களுக்கு நீண்டகாலமாக யார், யாரை, எப்படிப்பட்ட பண்புடையவர்களைப் பிடிக்காதோ அப்படிப்பட்டவர்களே அவரைச் சூழ்ந்துகொண்டு நச்சரித்துக் கொண்டு தொல்லை கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். அவருடைய பெயரும், புகழும் என்றென்றும் ஓங்கி உயர்ந்துவளர்ந்து நிற்கவேண்டும் என்று யார் யார் கருதிப் பாடுபட்டு உழைத்து வந்தார்களோ, அந்த நல்லவர்களெல்லாம் பெரியாரின் பெயருக்கும் புகழுக்கும், கட்சியின் பெயருக்கும் புகழுக்கும் இழுக்குத் தேடித் தரும் "திருமணம் என்ற பெயரால் ஒரு ஏற்பாடு" செய்யப்பட்டது கண்டு மனம் ஒடிந்து, தி. மு. கழகமாக விலகிப்போய்விட்டார்கள். பிரிந்துபோனவர்கள் அறிவோடும், ஆற்றலோடும், செல்வாக்கோடும், செழிப்போடும், பெயரோடும், புகழோடும் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே போகிறார்கள். பெரியாரின் உடனிருப்பவர்கள் தம்முடைய செய்கைகளால் திராவிடக்கழகத்தை நாளுக்குநாள் கரைத்துக்கொண்டு வருகிறார்கள். பெரியார் அவர்களே எழுதியிருப்பதுபோல், அவருடைய "விடுதலை" இதழில் அவரால் நம்பப்பட்டவர்களே அவருக்கு வேதனைதரும் வகையில் அவருக்கு மாறுபாடான கருத்துக்களை எழுதிவிடுகிறார்கள். அவரே கூறியிருப்பதுபோல் அவரது கழகத்தாரே அவரைக் கூட்டங்களுக்குக் கூப்பிட்டுவிட்டுப் பணம்

கொடுக்காமல் சில இடங்களில் ஏமாற்றிவிடு கிருர்கள். அவர், தம்மனவேதனையைச்சொல்லி ஆற்றிக்கொள்வதற்குக் காலஞ்சென்ற திரு. வி. க., எஸ். முத்தையா போன்றவர்கள் இப்பொழுது யாருமில்லை. அவருடைய புதுக் குடும்பத்தில் அவருக்கு வேதனை தரும் செயல்கள் நாளுக்குநாள் அதிகமாக நடந்துகொண்டு போகின்றன. இப்படிப்பட்ட காரணங்களால் பெரியார் அவர்கள் மனம்புழுங்கி, வேதனைப் பட்டு, நினைவு இழந்து, நிலைதடுமாறி ஆற்ற மாட்டாமல் ஏதேதோ புலம்பித்தீரவேண்டிய நிலைக்கு வந்துவிட்டார்கள். அவருடைய நிலைமை கண்டு தி. மு. கழகத்தார் கழிவிரக்கம் கொள்வதைத் தவிர வேறு என்ன செய்ய இயலும்? ஆத்திரப்பட்டுக்கொண்டு அவரைத் திருப்பித் தூற்றவோ, சினப்பட்டுக்கொண்டு அவரைத் திருப்பி எதிர்க்கவோ தேவை யில்லை! அவ்வளவுதான்! அவரது நிலைமை அப்படி ஆகிவிட்டது! ஏதோ அவர்போக்கிலே போய்க்கொண்டிருக்கட்டும் என்று கருதி இரக்கங்காட்டவேண்டியதுதான்!

நமது வீடுகளில், வயதாகிவிட்ட தந்தை மூலை முடுக்குகளிலே பாய்விரித்துப் படுத்துக் கொண்டு, தம்மை நாம் கவனிக்கவில்லை என்று கருதிக்கொண்டு, நம்மையெல்லாம் ஏதேதோ வாய்க்கு வந்தபடியெல்லாம் திட்டுவதைப் பார்க்கிரோம். அதற்காக நாம் சினம் கொண்டு அவரை எதிர்க்கவோ கிளம்புகிரோம். நாம் சிரித்துக்கொண்டு "தந்தை யாருக்கு வயதாகிவிட்டது. அவருக்கு முடியாமை. அவர் அப்படித்தான் புலம்பிக்கொண்டிருப்பார்;" என்று மற்றவரிடம் சொல்லி விட்டு நாம் நமது பணிகளைப் பார்க்கிரோம். அதுபோலவே அரசியல் தந்தையாகிய பெரியார் தி. மு. கழகத்தாரை ஏசுகிருர் என்ருல், "ஏதோ முடியாமை! எனவே புலம்பிக்கொண்டிருக்கிருர்!" என்று இரக்கங் காட்டிவிட்டுத் தம் பணிகளில் ஈடுபட வேண்டியதுதான் இனித் தி. மு. கழகத்தார் செய்ய வேண்டிய செயலாகும்.

பெரியார் அவர்கள் தி. மு. கழகத்தாரைத் 'தேவடியாள் மக்கள்', 'பொறுக்கிகள்', 'காலிகள்,' 'கூலிகள்', 'துரோகிகள்' 'நாணயமற்றவர்கள்', 'யோக்கியதையற்றவர்கள்' என்றெல்லாம் திட்டுகிருர் என்ருல், அவர் எவ்வளவு இழிநிலைக்கு இறங்கிவிட்டிருக்கிருர் என்று எண்ணி அவர்பால் இரக்கங் கொள்வதைத் தவிர, இவற்றிற்கெல்லாம் எப்படி நேர்மையாளர்கள், கண்ணியமுள்ளவர்கள் பதில் கூறிக்கொண்டிருக்க முடியும்? இவற்றை யெல்லாம் பொருட்படுத்தாமல் குப்பை என ஒதுக்கித் தள்ளுவதுதான் முறை. பெரியார் ஏசுகிருர் என்பதற்காகத் திருப்பி ஏசும் பழக்கத்தை நாம் கொள்ளமாட்டோம்.

வினு: அடுத்த பொதுத் தேர்தலில் பெரியார் அவர்கள் தி. மு கழகத்தை ஆதரிப்பதற்கான வழி ஏதும் இருக்கிறதா?

விளக்கம்: பெரியார் அவர்கள் தி. மு. கழகத்தை ஆதரிப்பதற்கான வழிகள் ஏராளம் இருக்கின்றன. மனமுண்டானுல் வழியுண்டு. பெரியார் அவர்களுக்கு மனமில்லை. எனவே அதற்கான வழிகள் அனைத்தையும் அடைத்துவிட்டார். ஆதரிப்பதற்கான வழிகள் அனைத்தையும் அடைத்து விட்டார் என்பது மட்டுமல்ல, எதிர்ப்பதற்கான வழிகள் பலவற்றையும் தேடிக் கண்டுபிடிக்கக் கச்சை வரிந்து கட்டிக்கொண்டு நிற்கிருர். தன் கண் ஒன்று போனுலும், அடுத்த வீட்டுக்காரன்கண் இரண்டும் போகட்டும் என்ற எண்ணத்தில், காங்கிரசை ஆதரிப்பதன் மூலம் தம் கழகம் தனித் தன்மையையும், தனி அமைப்பையும் இழந்துவிட்டாலும் பரவா யில்லை, 'தி. மு. கழகம் அடியோடு அழிந்து விட்டால்' அதுவே போதும். என்று கருதி யுள்ளார். அவர் கருதுகிறபடி தி. மு. கழகம் அடியோடு 'அழியுமா' அல்லது பன்மடங்கு வளர்ந்து ஓங்குமா என்பதைக் காலப்போக்கு நன்கு காட்டிவிடும்.

பெரியார் அவர்கள் தாம் பல காலமாகப் போதித்துவந்த கொள்கை வழிதான் நிலைத்து நிற்பார் என்ருல், தி. மு. கழகத்தவர்களைத் தவிர அவர் ஆதரிப்பதற்கான தகுதி படைத்தவர்கள் வேறுயாருமில்லை. கொள்கை அல்ல முக்கியம், தி. மு. கழகம் 'அழிவது தான்' முக்கியம் என்று கருதுகிருர் என்ருல், அவர் தம் கொள்கை, குறிக்கோள், இலட்சியம் ஆகியவற்றிற்குப் புறம்பான எதையும் செய்யக்கூடும். அப்படிச் செய்யப் புகுந்து செய்யும் செயல்தான் தோழர் காமராசரையும், அவரைச் சேர்ந்த காங்கிரசுக்காரர்களையும் அவர் இப்பொழுது ஆதரிக்கக் கிளம்பியிருப்பது. காமராசருக்குப் பெரியார் பணிந்தாரா, அல்லது பெரியாருக்குக் காமராசர் பணிந்தாரா என்ருல், தோழர் காமராசர் அவர்கள் எல்லா நிலையிலும் அப்படியே இருந்தது போல்தான் இருக்கிருர்; ஆனுல் பெரியார் அவர்கள் தாம் எல்லா நிலைகளையும் விட்டுக் கொடுத்துத் தோழர் காமராசருக்குப்பணிந்து காட்டுகிருர். பெரியாரின் ஆதரவு தி. மு. கழகத்துக்கு உறுதியாக இருக்காது! அவர் விரைவில் காங்கிரசில் சேர்ந்துவிட்டாலும் வியப்படைவதற்கில்லை!

மாணவ மணி

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நான் ஐந்தாம் ஆனர்சு வகுப்பில் படிக்கத் தொடங்கிய காலத்தில், இயக்கப்பற்றுடையோர் மிகச்சிலர்தாம் இருந்தனர்; ஆனால் மாற்றுக் கட்சிகளைச் சார்ந்த மாணவர்களெல்லாம் கண்டு வியக்கும்படி ஆற்றல் மிக்கவராக இருந்தனர்.

யார்யார் பகுத்தறிவு இயக்கத்தைச் சார்ந்தவர்கள், யார்யார் மாற்றுக்கட்சியினர் என்பது 'தமிழ்ப் பேரவை'யில் நடைபெறும் விவாதத்தின்போது புலப்பட்டுவிடும். அதன் மூலமாகத்தான் இயக்கத்தோழர்களை நாங்கள் ஆண்டுதோறும் அறிமுகப்படுத்திக் கொள்வது வழக்கம்.

ஐந்தாம் ஆனர்சு ஆண்டுத் துவக்கத்தில் நான் வெளியூர் போயிருந்தேன். அப்பொழுது முதல் 'தமிழ்ப்பேரவை'க் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதில் புதிதாகப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்த சிலரும் கலந்துகொண்டு விவாதவுரை ஆற்றினர். நான் வெளியூரிலிருந்து திரும்பியதும் என்னுடைய நண்பர்கள் சிலர் என்னிடம் வந்து "இவ்வாண்டு கோவை மாவட்டத்திலிருந்து இடைநிலை வகுப்பில் பயில ஒரு மாணவர் வந்திருக்கிறார்' அவர் மிகக் குள்ளமான தோற்றங் கொண்டவர். சென்ற தமிழ்ப் பேரவைக் கூட்டத்தில் அவருடைய பேச்சுதான் மிக உயர்தரமாகவும், கவர்ச்சிகரமாகவும் இருந்தது. அவர் நம் இயக்கக் கருத்துக்களை ஒட்டியே பேசினார். அவர் நமது இயக்கத்தைச் சார்ந்தவர்போல் தோன்றுகிறது. அவருடைய குரல் மிகக் கம்பீரமாக இருக்கிறது. சொற்கள் அவர் வாயினின்றும் அழுத்தந்திருத்தமாக வெளிவருகின்றன. எடுத்துக்கொண்ட பொருளைக் குறிப்பிட்ட நேரத்திற்குள் அழகுறபேசி முடித்தார். நமக்கு அருமையான சொல்லாற்றல் மிக்க தோழர் ஒருவர் கிடைத்திருக்கிறார் என்றுதான் சொல்லவேண்டும்" என்னும் கருத்துப்படப் பலபடக் கூறினர்.

அவரைக் காணவேண்டும் என்ற ஆவல் எனக்கு ஏற்பட்டது. ஒருநாள் நண்பர்கள் சிலர் அவரை எனக்கு அறிமுகப் படுத்தினர். அவர் 'கே. ஏ. சோமசுந்தரம்' என்றுதான் அறிமுகம் செய்து வைக்கப்பட்டார். சில திங்கள்கள் கழித்து அவர் 'கே. ஏ. மதியழகன்' என்று அழைக்கப்பட்டார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் திராவிட இயக்கத்தை வேரூன்றச் செய்தவர்களிலே தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள் குறிப்பிடத்தகுந்த ஒருவராவார். அவர் மாற்றுக்கட்சி மாணவர்களோடும் நெருங்கிப்பழகி, அன்புடன் பேசி, கருத்து வேற்றுமைபற்றி வாக்குவாதம் ஏற்படும்போது வாதிட்டு வெல்லும் திறன்படைத்தவர். மாணவர் பட்டாளத்திற்குத் தலைமைதாங்கி நடத்தும் ஆற்றல் அத்துணையும் அவருக்கு உண்டு. அவர் அண்ணாமலைநகரில் எங்கு நடமாடும்போதும், அவரைச் சுற்றி பல மாணவர்கள் இருந்துகொண்டே இருப்பார்கள். யாரையும் இன்முகத்துடனும், புன்முறுவலுடனும் வரவேற்கும் பண்பு அவரிடம் நிரம்ப உண்டு.

பல்கலைக் கழகத்தில் ஐந்து நிமிடப்பேச்சுப்போட்டி வைப்பார்கள். அதில் தோழர் மதியழகன் அவர்கள்தான் எப்பொழுதும் வெற்றி பெறுவார்கள். பல்கலைக் கழகச் சார்பாக அவர் ஒருமுறை சென்னை வந்து, திரு. வி. க. மணிவிழாக் கோப்பையைப் பல கல்லூரிப்பேச்சுப் போட்டியில் வென்று எடுத்துச் சென்றார்.

நானும் தோழர் அன்பழகன் அவர்களும் பல்கலைக் கழகத்தை விட்டு வெளியேறியதற்குப்பிறகு, திராவிட இயக்கத்தை மாணவர்களிடையே வளர்ப்பதில் அரும்பாடுபட்டார். தோழர் மதியழகன் அவர்களின் பெயரும், புகழும், வாக்கும் வளர்வது கண்டு மாற்றுக் கட்சி மாணவர்கள் சதிசெய்து, பலராகச் சேர்ந்து கொண்டு அவரைத் தடி கொண்டு தாக்கிப் படுகாயப்படுத்தினர். இருசாரார்க்கும் இடையே தடியடி நடந்தது. போலீசார் இருசாராரின் மீது வழக்குத் தொடுத்துப் பிறகு காங்கிரசுமாணவர்களை மட்டும் விட்டுவிட்டனர். தோழர் மதியழகன மீதும், அவரைச் சேர்ந்த சிலர்மீதும் வழக்குத் தொடுத்து வாட்டி வதைத்தனர். தோழர் மதியழகன் இறுதியில் உயர்நீதிமன்றத்தில் வெற்றி பெற்றார்

திராவிட மாணவர் இயக்கத்தின் வரலாறு மாணவ மணி தோழர் கே. ஏ. மதியழகன் அவர்களின் வரலாற்றோடு நன்கு தோய்ந்த தொன்றாகும்.

—இரா. நெ.

"மன்றம்"

மலர் - 4. 1955 - 56

24 இதழ்கள் கொண்ட உயர்ந்த காலிகோ பைண்ட்
செய்யப்பட்ட மலர்கள்

(இத்துடன் 1956 பொங்கல் சிறப்பிதழும் இணைக்கப்பட்டிருக்கிறது)

விலை ரூ. 8-0-0

(தபாற்செலவு ரூ. 2—0—0)

விற்பனைக் கழிவு இல்லை. முன்பணம் அனுப்புதல் வேண்டும்.

வி. பி. கிடையாது.

(மலேயா தோழர்கள் ஒரு புத்தகத்திற்கு ரூ. 12 வீதம் அனுப்பவேண்டும்)

விபரங்கட்கு:

"மன்றம்"
26, நைனியப்பன் தெரு,
மண்ணடி :: சென்னை-1.

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண்சங்கு சீயக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம்—ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர் :- வெண்சங்கு சீயக்காய்தூள் தொழிற்சாலை
3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

"மன்றம்" அச்சகத்தில் (26, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை-1)
ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது